வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க விதி, கொழும்பு-12.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 கார்த்திகை திங்கள் 15-ம் நாள் (1—12—1963) ஞாயிற்றுக்கிழமை றஜப் 14 | இதழ் 27




## வட இலங்கையில்

# சிங்கள அமுலுக்கு சிங்களவரே இடைஞ்சல்?

## வெற்றிவிழா நடத்த யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு

யாழ்ப்பாணம் கச்சேரியிலும் வவுனியா கச்சேரியிலும் கடமையாற்றும் சிங்கள அரசாங்க ஊழியர்கள் அங்குள்ள தமிழ் ஊழியர்களுடன் கைகோத்துக் கொண்டு சிங்களத்தைப் புறக்கணித்து ஆங்கிலத்திலேயே கடமையாற்றுகிறார்களென்று வட இலங்கை அரசாங்க அதிபர் திறைசேரிக்குத் தெரிவித்துள்ளாரென்று கூறப்படுகிறது.

அத்தோடு சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் நடத்துவதற்காக வட, கிழக்கு மாகாணங்களுக்கு இதுவரை அனுப்பப்பட்ட சிங்கள ஊழியர்கள் உத்தியோகத்தையே கைவிட்டு தென்னிலங்கைக்குத் திரும்பிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்த நிலைமையில் இருக்கின்றனராம்.

இந்தத் தகவலை யாழ்ப்பாணம் சுகாதார சேவைப் பகுதியில் கடமையாற்றும் ஏழு சிங்கள ஊழியர்கள் சுகாதார சேவை அதிபருக்குக் கூட்டாக அனுப்பியுள்ள ஒரு மகஜரில் தெரிவித்துள்ளனரென்று அறியப்படுகிறது.

இதே நிலைமை கண்டியிலும், பதுளையிலும் தோன்றியிருப்பதாகத் தெரிகிறது. இதற்கு ஒரு மாற்று

(9-ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் இடமாற்றத் திட்டம்

யாழ்ப்பாணத்துக்கு வெளியே நீண்ட காலம் கடமையாற்றிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழாசிரியர்களைச் சொந்த ஊருக்கு இடமாற்றம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அவர்களுக்கு யாழ்ப்பாணப் பாடசாலைகளில் காலிஸ்தானங்களை ஏற்படுத்தும் பொருட்டு, யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாகப் பணியாற்றும் ஆசிரியர்கள் வெளி இடங்களுக்கு அனுப்பப்படுவதை ஆட்சேபிப்பதின் காரணமாகவே இச் சிக்கல் தோன்றியுள்ளது.

பொதுவாகத் தமிழாசிரியர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத முறையில் இடமாற்றம் செய்யக்கூடிய ஒரு திட்டத்தைத் தயாரித்து தமிழரசுத் தந்தை தமிழரசுக் கட்சி சார்பிலும், உடுப்பிட்டிப் பிரதிநிதி சார்பிலும் கல்வி மந்திரி திரு. கலுகல்லைக்கு அனுப்பியுள்ளார்.

இத்திட்டம் இடமாற்றச் சிக்கலைத் தவிர்க்கப்பெரிதும் உதவுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. திட்டத்தின் முழு விபரத்தையும் 4ம் பக்கத்தில் காண்க.

## திருமலையில் தமிழரசு வெற்றி



திரு. எஸ். எம். மாணிக்கராசா

திருகோணமலை இடைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட திரு. எஸ். எம். மாணிக்கராசா 5811 அதிகப்படியான வாக்குகள் பெற்று வெற்றியீட்டினார்.

### வாக்களிப்பு விபரம்

திரு. எஸ். எம். மாணிக்கராசா (தமிழரசு) —11,532

திரு.எ.எச்.அல்விஸ் (சுயேச்சை) —5,721

திரு.பி.விஜயநாதன் (சுயேச்சை)—1,876.

### காங்கேசன்துறை சம்பவம்

## பிரதமருக்கு தமிழரசு தந்தையின் தந்தி

காங்கேசன்துறைப் பொலீசாரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் திரு. வைத்தியலிங்கம் குப்புசாமி ஆஸ்பத்திரியில் மரணமானது குறித்து தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் கீழ்க்கண்ட தந்தியைப் பிரதமருக்கு அனுப்பியிருக்கிறார்:

"பொலீஸ் பாதுகாப்பில் இருக்கும்போது இறந்த திரு. குப்புசாமியைப் பற்றிய தகவல் பின் வருமாறு என்று அறிகிறேன். திரு. குப்புசாமி 17ம் திகதி பொலீசாரால் கைது செய்யப்பட்டார். அவர் மனைவியும் வேறு ஒருவரும் திரு. குப்புசாமி பொலீஸ் பாதுகாப்பில் இருக்கும் போது காங்கேசன்துறை உதவிப் பொலீஸ் அதிபரால் அடிக்கப்பட்டார் என்று சாட்சியம் கொடுத்திருக்கின்றனர். மேலும் பாதுகாப்பில் இருக்கும்போது திரு. குப்புசாமி

(9-ம் பக்கம் பார்க்க)

"மெய்கண்டான்"

| | |
|---|---|
| திருக்குறட் கலன்டர் No. 1 (சிகப்பு) | 1-85 |
| நன்மொழிக் கலன்டர் No. 2 | 1-05 |
| மாதக் கலன்டர் (பஞ்சாங்கக் கலன்டர்) | -65 |
| சிங்கள கலன்டர் (No. 1 கலன்டர் அளவுள்ளது) | 1-75 |
| ரேபிள் கலன்டர் (பிளாஸ்ரிக் ஸ்ரான்டுடன்) | 4-75 |
| தகரப் படம் (அழகிய பல மாதிரிகள்) | 2-10 |
| No. 1. பிளாஸ்ரிக் தமிழ் டயறி (பிளாஸ்ரிக் கவருடன்) | 2-25 |
| No. 2. பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி " | 1-75 |
| No. 3. பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி " | 2-95 |
| No. 4. பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி " | 1-75 |
| No. 5. பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி " | 1-40 |
| No. 6. பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | 3-10 |
| No. 7. பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | 2-60 |
| No. 8. அலுவலக (Official) டயறி (பிளாஸ்றிக் கவர்) | 2-95 |
| பிளாஸ்றிக் சிங்கள டயறி " | 1-75 |
| பேர்ஸ் சிங்கள டயறி | 2-60 |
| பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி | 4-50 |
| No. 1. பேர்ஸ் தமிழ் டயறி (பேர்ஸ் சகிதம்-With Purse) | 3-10 |
| No. 2. பேர்ஸ் திருக்குறள் டயறி " | 2-60 |
| No. 4. பேர்ஸ் இங்கிலிஷ் டயறி " | 2-60 |
| No. 5. பேர்ஸ் இங்கிலிஷ் டயறி " | 2-10 |
| No. 6. பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | 3-85 |
| No. 7. பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | 3-35 |
| No. 8. அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) | 4-50 |
| வலற் டயறி (Wallet Diary-மிகச் சிறந்தது) | 5-50 |
| ஜெம் டயறி (Gem Diary) | 1-35 |
| ஜெம் பேர்ஸ் டயறி (Gem Purse Diary) | 2-05 |

இன்னும் பல உண்டு.

மற்றும் விபரங்களுக்கு

மெய்கண்டான் அச்சியந்திரசாலை
161, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
போன் : 79141

கிளை:
10, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
(போன் : 236)

## சுதந்திரக் கட்சிக்குள் குத்து வெட்டு

## பொரளை இடைத் தேர்தலின் எதிரொலி

பொரளை இடைத் தேர்தலால் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மற்றொரு குத்து வெட்டு ஆரம்பமாகியுள்ளது.

பொரளை இடைத் தேர்தலில் போட்டியிட கட்சியின் வேட்பாளர் ஒருவரை நேரிடையாக நிறுத்தாமல் காலஞ் சென்ற எம். பியின் மனைவி திருமதி கமலா டி. சில்வாவை ஆதரிக்கக் கட்சி முடிவு செய்திருப்பது கட்சிக்குள் ஒரு கெடுபிடிப் போரைத் தூண்டிவிட்டுள்ளது.

இப்பிரச்சினையின் மீது கட்சிப் பிரமுகர்கள் இரு கோஷ்டிகளாகப் பிரிந்துள்ளனர்.

ஒரு கோஷ்டி கட்சியின் முடிவைக் "கோழைத் தன" மெனக் கண்டிக்கிறது.

இக்கோஷ்டியினர் பிரதம மந்திரிக்கு அனுப்பியுள்ள ஒரு கண்டன மகஜரில், சுதந்திரக்கட்சி ஆளும் கட்சியாக இருப்பதால் பொரளை போன்ற ஒரு தொகுதியில் சொந்த வேட்பாளரை நிறுத்தி வெற்றி பெறக்கூடிய துணிச்சலும் செல்வாக்கும் அதற்கு இருக்க வேண்டுமென்று கூறியிருக்கின்றனரென அறியப்படுகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள அறிமுக அட்டை ஏற்படுத்தும் சிக்கல்கள்

## தபால் இலாகா அட்டையின்றியே பரீட்சை எடுக்கலாம்

தபால் இலாகா வழங்கும் அடையாள அட்டைகளால் மேல்மேலும் சங்கடங்கள் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. விண்ணப்பங்கள் எம்மொழியிலிருந்த போதிலும், சிங்களத்திலேயே அறிமுக அட்டைகள் அனுப்பப்படுகின்றன. அவைகளும் பிழையாகவேயிருக்கின்றன.

தபால் இலாகா வழங்கும் அறிமுக அட்டையின்றியும் பரீட்சை எடுக்கலாம். விபரம் கீழே தரப்படுகிறது.

அரசாங்கத்தால் நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்குத் தோற்றும் சகலரும் தபால் இலாகாவால் வழங்கப்படும் அறிமுக அட்டைகள் வைத்திருக்க வேண்டும் என்று இப்பொழுது கண்டிப்பு ஏற்பட்டுவிட்டது. இதனுல் தபால் இலாகாவிற்கு மேலதிக வருமானமும் கிடைத்து வருகிறது.

இந்த இலாகா முன்பெல்லாம் ஆங்கிலத்தில் கொடுத்துவந்த அடையாள அட்டைகள் அனைத்தையும் சிங்களத்திலேயே கொடுத்து வருகிறது. விண்ணப்பிப்பவர்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் விண்ணப்பித்தாலும் அட்டைகள் என்னவோ சிங்களத்திலேயே கொடுக்கப்பட்டு வருகின்றன.

சிங்களத்தில் கொடுக்கப்படும் அட்டைகளும் வேண்டுமென்றே பிழையாகக் கொடுக்கப்படுவது சகஜமாகிவிட்டது. சிங்களம் வாசித்து விளங்கிகொள்ள முடியாதவர்கள் மறுப்பு எதுவுமின்றி அடையாள அட்டைகளை அவசரத்தின் நிமித்தம் ஏற்றுக்கொண்டு விடுகிருர்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து அறிமுக அட்டைக்குத் தமிழில் விண்ணப்பித்த கோப்பாய்க்கோமான் திரு. வன்னியசிங்கத்தின் மகளின் அறிமுக அட்டையைச் சிங்களத்தில் அனுப்பியதுடன், 'வன்னியசிங்கம்' என்ற பெயரை 'வன்னிநாயக்க' என்று எழுதியுள்ளனர். இதை ஏற்க முடியாதென்றும், தமிழில் அறிமுக அட்டையை அனுப்புமாறும் ஆட்சேபனைக் கடிதம் ஒன்றினைத் தபால் தலைமை அதிகாரிக்குத் திருமதி வன்னியசிங்கம் அனுப்பியிருக்கிருர்.

தம்பிஐயா நாகராஜா என்பவரின் பெயரைத் தம்பிஐயா தியாகராசா என்று பெயர் மாற்றி வேறொரு அட்டையை அனுப்பியுள்ளனர்.

இப்படிப் பெயர் மாற்றம் செய்யப்படுவதால் மிகவும் சங்கடமான நிலை தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த இக்கட்டைத் தவிர்க்க மாணவர்கள் பரீட்சைக்குச் செல்லும் போது பாடசாலைத் தலைமை ஆசிரியர் அல்லது கல்லூரி அதிபரிடமிருந்து தங்கள் புகைப்படங்களை அத்தாட்சிப்படுத்திக்கொண்டு, அவற்றையே அறிமுக அட்டையாகக்கொள்ளுவது நல்லது.

கல்வித் திணைக்களத்திலிருந்து பரீட்சை ஆணையாளரால் 1-4-63-ல் பிறப்பிக்கப்பட்டு, சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருபத்தில் கண்டுள்ள பகுதிகளை 20-10-63 சுதந்திரன் 8-ம் பக்கத்தில் பிரசுரித்தோம். அதை மீண்டும் இங்கு தருகிருேம்:-

இலங்கை கல்விப் பொதுத் தாராதரப் பரீட்சை (சாதாரணம்) உயர்தரப் பாடசாலைப் பத்திரப் பரீட்சை அல்லது சர்வகலாசாலைப் புகுமுகப் பரீட்சை, கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை (உயர்தரம்) ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்றும் கல்லூரி மாணவர்கள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தங்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தவேண்டும்.

இதை உறுதிப் படுத்துவதற்குக் கீழ்காணும் சாதனங்களில் எவையாகுதல் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

1. பிரதம அஞ்சல் அதிபரிடமிருந்து பெறும் ஆளடையாளச் சீட்டு.

(13-ம் பக்கம் பார்க்க)

## யாழ். கூ. மொ. வி. கடையில் சிங்களத் தாண்டவம்

### "பகிஷ்கரியுங்கள்" என்கிருர் தமிழரசுத் தந்தை

யாழ்ப்பாணம் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் தமிழ் மொழிக்குத் தொடர்ந்து அவமதிப்பு ஏற்பட்டு வருவது கண்டு மனம் வருந்தாதார் இல்லை. இத்தகைய தமிழ் மொழி அவமதிப்பு நிலையங்களைப் பகிஷ்கரிக்க வேண்டியது தமிழ் பேசும் மக்களுடைய கடமையாகிறது. இவ்வாறு தமிழரசுத் தநதை நமது நிருபரிடம் தெரிவித்தார்.

அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலயத்துக்குச் சென்றிருந்த ஒரு அம்மையார், அங்கிருந்த பணியாளரிடம், சில துணிமணிகளுக்குரிய விலைகளைக் கேட்டுள்ளார். அந்த ஊழியர்கள் சிங்களத்தில் பதிலிறுத்துள்ளார். தமிழிலோ ஆங்கிலத்திலோ விலையைக் கூறுமாறு எவ்வளவோ கோரியும் ஊழியர் சிங்கள மொழியில் மட்டுமே தமக்குக் கடமையாற்றக் கட்டளை உண்டென்றும், சிங்களமே இந்நாட்டின் உத்தியோக மொழியென்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

கோபமடைந்த அம்மையார் தன்மானம் விற்று தமது மொழியை அவமதிப்புக்குள்ளாக்கலாகாது என்று கூறிவிட்டு வெளியேறிவிட்டார்.

நூற்றுக்கு நூறுவீதம் தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணத்தில் அதுவும் ஒரு வியாபார நிலையத்தில் தமிழுக்கு இடமில்லை என்ருல் எவரால் தான் இதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்க முடியும்?

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் எல்லாம் பொருட்களை இட்டுக் கொடுக்கப்படும் கடுதாசிப் பைகளைக் கூட தனிச் சிங்களத்திலேயே அச்சிட்டு வழங்கி வருகின்றனர். இந்த அவமதிப்புகளைத் தமிழ்ப் பிரதேசங்களில் விட்டுவைப்பது அபாயகரமாகவே முடியும்.

தமிழ் மொழிக்கு அவமதிப்பு ஏற்படுத்தும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களைத் தமிழ் பேசும் மக்கள் பகிஷ்கரிப்பதன் மூலம் தமது [illegible] காத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது, என்று தமிழரசுத் தந்தை கூறியுள்ளார்.




# ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்

மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண், கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினுல் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

15 நாள் டின் ரூபா 3-00

30 நாள் டின் ரூபா 5-75

தபால் செலவு /-95

ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு, கொழும்பு.


## கவிதைப் பூங்கா

### ஆங்கிலம் கற்றதனுல் ஆன நிலை

என். ஜோர்ஜ் யோகராஜா

ஆய்ந்தோய்ந்து பாராமல் அரசாங்கசேவைதனில் நுழைந்துவிட்டேன்
இன்றெமக்கு வந்தநிலை என்றெவர்க்கும் வந்ததில்லை
ஈரைந்து ஆண்டுகள் முன் இந்நிலைதான் வருமென்று
அனுமாரடிச் சாத்திரியும் அன்றெமக்குச் சொல்லவில்லை.

ஐந்து பராயத்திலே ஆங்கிலந்தான் படிக்கவென்றும்
என் தனயன் அன்ருெருநாள் எவரும்மெச்சத் திகழ்ந்திடுவான்
என நினைத்த என் தந்தை ஏற்றிவைத்தார் 'ஹொஸ்ரலுக்கு',
ஆறு பத்துக் கல்தாண்டி ஆங்கிலக் கல்லூரியதில்.

அங்குநான் பட்டதுன்பம் பக்கம்பக்கம் பாடினுலும்
பத்திலொன்று தானேனும் பகர்ந்திடவே முடிந்திடுமோ?
அதிகாலை எழும்பியதும் பின் அரைத் தூக்கம் தூங்கினதும்
அவ்வளவும் நினைத்தாலோ எவ்வளவோ துன்பம் அது.

கால் வயிறு நிறைந்ததுண்டு அரைவயிறு நிறைந்ததுண்டு
முழுவயிறு நிறைந்த நாளோ நினைவினிலே வருகுதில்லை
'பெசிலிற்றி பீஸ்' முதல் 'ஸ்போற்ஸ்' எனும் 'பீசு' வரை
சுளைசுளையாய்க் கொடுத்த காசு சும்மாவா போயிற்று?

'கிரிக்கெட்டு' ஆடியதும் கிறுக்கெழுத்துப் படித்ததுவும்
தாய்மொழியாம் தமிழ் பேசி தண்டனைகள் அடைந்ததுவும்
'பிறிபக்டும்' 'பிரின்சிப்பலும்' பிரம்புடனே திரிந்ததுவும்
இன்றுதான் நடப்பதுபோல் என்கண்ணிற் தோன்றிடுதே.

'ஏ, பி, சி' கற்றழுதல் 'எஸ். எஸ். ஸி' தாண்டும் வரை
என்றென்றும் பட்டதுன்பம் எவருக்கும் புரிந்திடுமோ?
தாய்மொழியோ கற்றிருந்தால் தமிழ் வாத்தியாகிடலாம்
'கிளறிக்கல்' வேலையென்று கிறுகிறுத்தேன், வந்தவினை!

பத்து வருடகாலப் பயபக்திச் சேவையின் பின்
"பாஷையைமாற்றிவிடு இன்றேல் பட்டினிதான்கிடந்து வாடு"
என்று சொல்லும் 'சிறிமா'வுக்கு என்னதான் சொல்லிடுவேன்
இளமையிற்தான் கற்றதென்ருல் அது இன்னுமா முடியவில்லை?

பாஷைப் பிரச்சினை வந்ததுவும் பதைபதைத்து நிற்கின்றேம்
கதிகலங்க விட்டுவிடும் 'கவர்மெந்தும்' இதுவன்ருே!
தானறியாச் சிங்களம் தன்பிடரிக்கெனின் தளரவில்லை
வயிற்றுக்கும் சேதமென்ருல் வாய்புதைத்து நிற்கலாமோ?

தாய்மொழியைப் பயிலுமென்ருல் தாலாட்டுப் பாடிருப்பேன்
சட்டம்பியாயிருந்தால் சங்கடங்கள் ஏதுமில்லை
பாடுபட்டுப் படித்ததினுல் பயனை இன்று கண்டு கொண்டேன்
வீட்டினிலே இருந்திருந்தால் வியாபாரம் கற்றிருப்பேன்.

பத்தாண்டு முன் விட்டபிழை பதறினுலும் திருந்திடுமோ?
பாதியிலே வந்ததுன்பம் ஆதியிலே வந்திருந்தால்
நாதியின்றி நிற்கும் நிலை நம்மவர்க்கு வந்திடுமோ?
நீதியுடன் நேர்மையும்தான் நிலைத்திடும் நாள் எந்நாளோ?

### எங்குந் தமிழைச் சொல்லடா

—"ஜெயம்"—

கொட்டிக்கொட்டி தலைபிளக்கும் கொடியர் சிரசை வீழ்த்தவே!
கொட்டிக்கொட்டி அச்சிரசை கொண்டு கடலில் ஆழ்த்தவே!
கொட்டிக்கொட்டி கைகள்கொட்டி தமிழர் கூட்டம் வாழ்த்தவே!
கொட்டிக்கொட்டி முரசுகொட்டி முத்தமிழை முழக்கவே!

தட்டித்தட்டி மார்புதட்டி மறவரோடு நில்லடா!
கட்டிக்கட்டி கைகள்கட்டி வாழ்ந்தவாழ்வை வெல்லடா!
எட்டியெட்டி எடுத்துக்காலை முன்னேவைத்துச் செல்லடா!
பட்டிதொட்டி எட்டுத்திக்கு மெங்குந்தமிழைச் சொல்லடா!

## "தமிழரால் சிங்களவருக்கு என்றும் ஆபத்து"

—பிலிப்.

"தென்னிந்தியத் தமிழர்கள் சிங்களவர்களுக்கு என்றும் ஆபத்தாகவே இருந்துள்ளனர். இது சரித்திரம் காட்டும் உண்மை. தென்னிந்தியாவிலிருந்து அடிக்கடி தமிழர்கள் சிங்களவர்களுக்கு எதிராகப் போர் தொடுத்துத் துன்புறுத்தி வந்துள்ளனர்."

இந்த மாதிரி திருவாய் மலர்ந்தருளியவர் வேறு யாருமல்ல, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரும் இடதுசாரி ஐக்கிய முன்னணிப் பிரமுகருமான திரு பிலிப் குணவர்த்தனதான் அண்மையில் செங்கடகலையில் நடந்த ஒரு கூட்டத்தில் இவ்வாறு கூறியுள்ளார்.

இடதுசாரி ஐக்கிய முன்னணி பதவிக்கு வருமானுல் தமிழ் பேசும் மக்களுக்கு பலவிதமான நன்மைகள் ஏற்படும் என்று பல இடதுசாரி நண்பர்கள் பிரலாபித்து வருகின்றனர். இலங்கை யனைத்தும் மொழிச் சமத்துவத்துக்கு அடிகோலுவோம்— அதுவே எங்கள் மொழிக் கொள்கை; என்றெல்லாம் வாய்ப் பந்தலிட்ட சமசமாஜக் கட்சியும், கொம்யூனிஸ்ட் கட்சியும் தங்கள் மொழிக் கொள்கையை 'புரட்சி'க் காற்றில் பறக்க விட்டு விட்டனர்.—மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருடைய கொள்கைக்கு மண்டியிட்டு மதிமயங்கிவிட்டனர்.

திரு. பிலிப் மேற்படி கூறிய கூற்றில், 'தமிழர்கள் சிங்களவர்களுக்கு எதிரிகள். ஆகவே அவர்களை அடக்கி ஒடுக்கி இறுதியில் ஒழித்தே விடவேண்டும்' என்ற கருத்துத் தொக்கி நிற்பதை வாசகர்கள் உணராமலிருக்க முடியாது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியும் விரைவில் இதே முகாரியையே பாடும் காலம் வெகு விரைவில் வரத்தான் போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஜேம்ஸ் பெர்னண்டோ,
மட்டக்களப்பு

கே: சில பெண்கள் தாலி கட்டிய கணவனுடன் வெளியில் செல்ல மறுப்பதேன்?

ப: ஒருவனின் "மனைவி" என்பது அம்பலமாகிவிடும் என்ற பயம்.

ஃ

சி. பொ. ஈழத்துமணி,
யாழ்ப்பாணம்

கே: தமிழரசுக் கட்சியைத் தவிர மற்றக் கட்சியினர் தமிழ் பேசும் மக்களின் எதிர்கால நிலைமையை முன்னிட்டு ஏதும் நடவடிக்கை எடுக்காததின் காரணம் என்ன?

ப: தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அந்த ஒரு கட்சி தானே இன்று செயல்படுகிறது. மற்றக் கட்சிகளெல்லாம் சிங்களக் கட்சிகள். அவை தமிழரின் நலன்களுக்காகப் பாடுபடுமா என்ன?

ந. அரசு, பதுளை

கே: கட்சிக்காகக் கொள்கை இருக்க வேண்டுமா? அல்லது கொள்கைக்காகக் கட்சி இருக்க வேண்டுமா?

ப: கொள்கையின் அடிப்படையிலே ஒரு கட்சி தோன்றுகிறது. பின்னர் அக் கட்சியின்றி கொள்கையைச் செயல் படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே கட்சியின் வளர்ச்சிக்காக கொள்கையில் சில மாற்றங்கள் செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுவதுண்டு.

கே: பாலுக்குள் நெய் இருக்கிறது என்பதைப் பாலைப் பார்த்தவுடன் தெரிந்துகொள்ள முடிகிறதா? ஒரு பெண்ணைப் பார்த்தவுடன் அவள் அன்பு நிறைந்தவள் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறதா?

ப: முடியாது-ஆனால் எந்தப் பெண்ணின் உள்ளமும் அன்பு நிறைந்தது தான். ஆண் முயற்சி செய்தால் அந்த அன்பைத் தட்டியெழுப்பி தன் மீது பாய்ச்சிக் கொள்ளலாம்.

கே: தமிழ்வாணன் தி. மு. க. இனிமேல் எதற்கு என்று கேட்கிறாரே?

ப: அவரது கேள்வி தவறு. அவருக்கு தி. மு. க. நிச்சயம் தேவை, திட்டித் தீர்ப்பதற்கு.

ஃ

மு. கருணாநிதி,
ஏழாலை மேற்கு

கே: ரஷ்யாவும் சீனாவும் மோதிக்கொள்ளுமா?

ப: சாத்தியமில்லை, இரண்டில் ஒன்று முதலாளித்துவ நாடாக மாறினாலன்றி.

கே: சிலர் தி. மு. க. காரர்கள் அத்தனை பேர்களுமே கோழைகள் என்கிறாரே?

ப: சிறைக் கூடங்களை நிரப்பி, சிறைச்சாலைகளைத் தவச்சாலைகளாக்கிக் கொண்டிருப்பவர்களைக் கோழைகளென்று கூறினால், அது ஒரு நோய். அதற்குச் சிகிச்சை செய்யக் கூடிய டாக்டர்கள் அங்கொடையில்தான் இருக்கிறார்கள்.

கே: பணத்தை விட முக்கியமானது வேறு எதுவும் இல்லையா?

ப: ஏன், மனிதன்! அவன் தானே பணத்தின் பிரம்மா!

ஃ

க. ச. க. பிள்ளை,
பாமன்கடை

கே: யாழ்ப்பாணத்துக்கு ரஷ்ய வான வெளித் தம்பதிகள் விஜயம் செய்யாதது ஏன்?

ப: குறிப்பாக வட பகுதியில் கொம்யூனிஸ் கட்சியில் பெரும்பாலோர் சீனா பக்கம் சேர்ந்து விட்டனராம். எனவே ரஷ்ய சார்புடைய ஒருசிலர் வான வெளித் தம்பதிகளை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து சீனக் கோஷ்டிக்கு ஒரு பலத்த "அடி" கொடுக்க முயற்சி செய்தனராம். இதை அறிந்த ஆட்சியாளர் தம்பதிகளின் பிரயாணத்தை வேறு வழியிற் திருப்பி, வட இலங்கைச் சீன ஆதரவாளருக்கு முட்டுக் கொடுத்தனராம்.

ஃ

சு. பாலகிருஷ்ணன்,
பம்பலப்பிட்டி

கே: கன்னியொருத்தி, கல்யாணமான இளம் ஆணுடன் கலகலப்பாகச் சேர்ந்து பழகுவது முறையாகுமா?

ப: மணமாகாதவனுடன் சேர்ந்து பழகுவதைவிட இது பரவாயில்லையே!

கே: வாழ்வு இன்பமானால் மரணம் என்ன?

ப: பேரின்பத்தின் ஆரம்பம்.

கே: பழிக்குப் பழி சிலருக்கு இனிக்கிறதே, காரணம்?

ப: ஒருவன் தன் உள்ளத்துக்கு அடிமையாகிவிட்டால், பழிக்குப் பழி இனிக்கும்.

கே: ஒருவர் கேட்கும் கேள்விகளிலிருந்து அவர்களின் குணதிசயங்களை உங்களால் கண்டு பிடிக்க முடியுமா?

ப: முடியும், அவர் பிறரிடம் கேள்விகளை இரவல் வாங்கி அனுப்பாமலிருந்தால்.

கே: தி. மு. க. வும், ராஜாஜியும் ஒன்றுசேர்ந்து இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தினால் எப்படியிருக்கும்?

ப: அண்ணாவுடன் சேர்ந்து ராஜாஜியும் கம்பி எண்ணுவார்.

கே: நடிகர்களை 'நட்சத்திரம்' என அழைப்பதேன்?

ப: சினிமாவை வானம் என்று அழைப்பதால்......

ஃ

ரா. அன்பரசு, மு. கணேஷ்,
பொரலங்கட

கே: இந்தியத் தி. மு. கழகத்தைப்போல் இலங்கை தி. மு. க. சிங்களத்தை எதிர்த்துப் போராடிச் சிறை செல்லத் தகுதியுடையதா?

ப: இல்லை— இலங்கையில் தி. மு. க. ஸ்தாபனரீதியாக இனிமேல்தான் உருவாக வேண்டியிருக்கிறது.

ஃ

குமாரச் செல்வன்,
ஏழாலை-மேற்கு

கே: காலம் சென்ற அமெரிக்க ஜனாதிபதி கென்னடியுடன், மக்களிடையே பிரிவினைக்கு வித்திட்ட தன் கணவனைப் பற்றி அம்மையார் ஒப்பிட்டுக் கூறுவது சரியா?

ப: அவர் நீக்ரோ மக்களுக்கு உரிமை வழங்க மசோதா கொண்டுவந்தார். இவரோ தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிக்க மசோதா கொண்டுவந்தார். ஆனால் இருவரும் குண்டுக்குப் பலியானவர்கள்.

ஆர். எஸ். மாரியாய்,
தெரனியகலை

கே: இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அண்ணாத்துரை எவ்வளவு நாள் சிறையில் இருப்பார்?

ப: அண்ணா "பாதுகாப்புக் கைதி". எனவே அரசாங்கம் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் சிறையில் வைத்திருக்கலாம்.

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

க. பூபாலசிங்கம்,
பெரிய கல்லாறு.

கே: எது வந்தாலும் வரட்டும் என்று உரிமைப்போரில் கலந்து கொண்ட ஒருவர், இன்று கட்சியை வாய்க்கு வந்தபடி திட்டி மாவித்தியாலயத்திலும் ஒரு சிங்கள ஆசிரியரை நியமிக்கும்படி மன்றாட்டப் பெட்டிசமும் போட்டு வருகிறாரே; இவருக்குக் கட்சி செய்த தீங்கு யாதோ?

ப: அவரைத் தியாகியாக்கியதுதான் அவருக்குச் செய்த தீங்கு. அந்தத் தியாகத்தை விற்றுப் பணமாக்க அவர் இப்பொழுது முயற்சி செய்கிறார்.

ஃ

ஆர். கணபதி, கேகாலை

கே: இலங்கை வாழ் தமிழ் இனத்தைக் கள்ளத்தோணி என்று கூறுகிறார்களே, காரணம்?

ப: "பண்டார நாயக்கா யுகத்தில்" சிங்கள வகுப்புவாதிகள் தமிழர்களுக்குச் சூட்டியுள்ள பெயர்தான் அது.

ஃ

செ. டொமினிக்,
கொழும்பு-13

கே: பணக்காரர்களுக்குப் பிள்ளைப் பேறு குறைந்தும் தொழிலாளி வர்க்கத்திற்குப் பிள்ளைப் பேறு அதிகரித்திருப்பதற்கும் என்ன காரணமாயிருக்கலாம்?

ப: பணக்காரர்களுக்கு தம் உள்ளத்துக்கும் உடலுக்கும் களிப்பூட்ட எத்தனையோ விநோதக் களியாட்டங்கள் உண்டு. தொழிலாளிக்கோ ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. பணக்காரக் கணவனுக்கும் மனைவிக்கும் தனித் தனி சயன அறைகள் உண்டு. தொழிலாளிக்கோ இருவருக்கும் ஒரேயொரு அறைதான் இருக்கிறது (அது ஒரு "பலநோக்கு" அறை), இவைதான் காரணங்கள்.

ஃ

எம். எஸ். பிரான்சிஸ்,
அட்டபாகை

கே: கடந்த மாதத்தில் (10-11-63ல்) கண்டிக்குப் பரம இரகசியமாக எம். ஜி. ஆரும் மற்றும் துணை நடிகை நடிகர்களும் வந்தார்கள் என்று ஒரு சிலர் சொல்லுகிறார்களே, உண்மையா?

ப: எம். ஜி ஆர். பக்தர்கள் இம்மாதிரிக் கனவுகள் காண்பது சர்வ சாதாரணம்.

ஃ

செல்வி தங்கமலர்சோமசுந்தரம்,
யாழ்ப்பாணம்.

கே: ஒரு பெண் முறைப்படி யாரை அத்தான் என அழைக்கலாம்?

ப: அக்காள் கணவனை-அத்தையின் மகனையும் மனைவியின் தமையனையும் "அத்தான்" என அழைப்பதுண்டு.

ஃ

சுதந்திரவீரன், ஏழாலை மேற்கு.

கே: மாணிக்கராசாவின் வெற்றியைப்பற்றி கொஞ்சம் சொல்லுகிறீரா?

ப: அமரர் இராஜவரோதயம் பெற்ற வெற்றியை விடப் பெரிய வெற்றி.

கே: நடேசபிள்ளை தற்பொழுது என்ன செய்து கொண்டு இருக்கிறார்?

ப: 'டெம்பிள் ட்ரீஸை'ச் சுற்றிச் சுற்றி வருகிறாராம்.

# தமிழ் வளர...!

—யூ. எல். தாவூத்—

மண்தோன்றுக் கற்றேன்றுக் காலை வந்த
மங்கையிளம் முத்தமிழா மென்னும் பேற்றை
எந்நாளுஞ் செவிகய்ப்ப மார டித்தோம்
இந்நாளிற் றமிழ்வாழ யாது கண்டோம்?

சிறந்தி ருந்தார் கலைவளத்தால் மொழிவளத்தால்
செழித்திருந்தார் தமிழினத்தா ரந்நா ளென்று
பறையறைந்து தொன்மையினை நாளு மோதின்
பைந்தமிழும் விரிவுற்று வளர்ந்தி டாது.

காலமெனுங் கரைகடந்த கவினுர் தமிழின்
கன்னியிளம் பருவமது நீண்டி ருந்து
ஞாலமெலாம் புகழ்விரவி நாளும் வாழ
நற்கலைகள் பல்தமிழிற் றொனரல் வேண்டும்.

உடலினது நிலையுரைக்கும் நூலும்; மக்கள்
உயிரினது இயல்கூறும் ஆய்வு நூலும்
புடவியுடை இயல்நூலும், தருக்க நூலும்
பொருள்நூலும் தமிழ்மொழியிற் படைத்தல் வேண்டும்!

விண்ணுடை கதிர்கோளம் உடுக்கள் கூட்டம்
வெண்ணிலா நிலைகூறும் வான நூலும்;
மண்ணுடை தாவர விளக்கஞ் சொல்லும்
மரநூலும் நிலநூலும் தமிழில் வேண்டும்!

இசைநூற்கள், உளநூற்கள், கணித நூற்கள்
இம்பருடை பொருள்கூறுஞ் சரிதை நூற்கள்
திசைநூற்கள் வளியாய்வு நூற்க ளெல்லாம்
தேடரிய ஆய்வினிலே தமிழில் வேண்டும்!

பண்டைப் பெருமையினை மேடை ஏறிப்
பாரறிய மாரடிக்கும் முயற்சி தேக்கி
இன்றையற் றேவையினை நிறைவு காணின்
இந்நாளில் முத்தமிழும் விரிவு காணும்.

## அன்பார்ந்த நேயர்களே!

உங்கள் பலநாள் ஆவலைப் பூர்த்தி செய்வதற்காக 'மாயயோதி' ஊதுபத்தியை உற்பத்தி செய்துள்ளோம். ஆகையால் தமிழ் மக்களே உங்கள் தேவைகளுக்கு 'மாயயோதி' ஊதுபத்தியையே வாங்கிப் பாவியுங்கள்.

உற்பத்தியாளர்கள்:- இங்ஙனம்,
ந. செல்லத்துரை, மாயயோதி இன்டஸ்ரீஸ்.
128/3 வாட்பிளேஸ், கொழும்பு—7.




சுகாதாரமான நவீன முறைப்படி
கைபடாமல் தயாரிக்கப்பட்ட
**ரோஸ் பிராண்ட்**
**சுவீட்ஸ் டொபீஸ்**
இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை
ஒரு முறை சுவைத்தால் போதும்
மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது
**'ரோஸ்' பிராண்ட்**
என்றே கேட்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் இடமாற்ற சிக்கலைத் தீர்க்க விரிவான திட்டம்

## கோடீஸ்வரன் வழக்கு விசாரணை

## எம். பிக்கள் சாட்சியம்

சிங்கள மொழியில் தேர்ச்சியில்லாததற்காகச் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து அரசாங்க ஊழியரான திரு. செல்லையா கோடீஸ்வரன் அரசாங்கத்துக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்கு திங்கட்கிழமை (25—11—63) அன்று, கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் நீதிபதி ஓ. எல். டி. கிறெற்சர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அன்று. திரு. எம். சிவசிதம்பரம் உடுப்பிட்டி பா. உ. அவர்கள் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அவர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே சென்ற முறை விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

உதவி சொலிஸிட்டர்—ஜெனரல் திரு. வி. தென்னக்கோன் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் திரு. எம். சிவசிதம்பரம் பின் வருமாறு கூறினார்:-

"சிங்களம் மட்டும் மசோதாவை நான் மனப்பூர்வமாக எதிர்க்கிறேன். 1956ம் ஆண்டு தனிச் சிங்கள மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட சமயம், லங்கா சமசமஜக் கட்சியின் ஆதரவுடன் தமிழ்க் காங்கிரசும், தமிழரசுக் கட்சி எம். பிக்களும் தனிச் சிங்கள மசோதாவை எதிர்த்தனர்.

"சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாகச் சிங்களத்தைக் கற்க வேண்டாமென தமிழ் எம். பிக்கள் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு வேண்டுகோள் விடுத்து வந்தனர்.

"சிங்களத்தை வாசிக்கவும், எழுதவும் தெரியாத மக்கள் தனிச் சிங்களச் சட்டத்தால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என்பது



செ. கோடீஸ்வரன்

உண்மை. ஆனால், அச் சட்டத்தால் தமிழ் பேசும் மக்கள் அனைவருமே பாதிக்கப் படுவார்கள்.

"1947ம் ஆண்டு தொடக்கம் 1956ம் ஆண்டு வரை சிங்கள, தமிழ் மொழிகள் சம அந்தஸ்தைப் பெற்றிருந்தன. ஆனால் சிங்களம் மட்டும் சட்டம் 1956ல் நிறைவேற்றப்பட்ட பின்னர், தமிழ் பேசும் மக்கள் தங்களது அடிப்படை உரிமையாகிய மொழி உரிமையை இழந்துவிட்டனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாகமும், உத்தியோகபூர்வமான தொடர்புகளும், பிரதேச மொழியில் அதாவது தமிழ் மொழியில் நடைபெற வேண்டும்."

திறைசேரி உதவிக் காரியதரிசி திரு. சி. பாலசிங்கம், திரு. எம். திருச்செல்வத்தால் மறு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது பின் வருமாறு கூறினார்:

"சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுதவர்களுக்குச் சம்பள உயர்வை நிறுத்துவது சம்பந்தமான 560ம் சுற்றுநிருபம் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமாகவில்லை.

"கடந்த அரசாங்க ஊழியர் சேவைப் பரீட்சையில் 15,000 பேர் தோற்றினர். எத்தனை தமிழர்கள், எத்தனை சிங்களவர்கள் இந்தப் பரீட்சையில் தேறினர்கள் என்பதை என்னால் திட்டவட்டமாகக் கூறமுடியாது."

அடுத்து, சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் சாட்சியமளிக்கும் போது கூறியதாவது:

"ஒரு பாராளுமன்ற அங்கத்தவன் என்ற கோதாவிலும், ஒரு தனிப்பட்ட பிரஜை என்ற முறையிலும் சிங்களம் மட்டும் மசோதா நிறைவேற்றப்பட்டதிலிருந்து நான் பலவித கஷ்டங்களை அனுபவித்தேன்.

"அரசாங்க இலாகாக்களிலும், அமைச்சுகளிலிருந்தும் எனக்குத் தனிச் சிங்களத்திலேயே கடிதங்கள் வருகின்றன அரசாங்க இலாகாக்களின் பெயர்ப்பலகைகள் தனிச் சிங்களத்தில் இருப்பதால் அந்த இலாகாவின் பெயரையோ, அல்லது அங்குள்ள அதிகாரிகளையோ அவர்களது பதவிகளையோ என்னால் அறிந்து கொள்ள முடிவதில்லை.

நான் ஒரு வழக்கறிஞர் என்ற முறையிலும், சிங்களம் மட்டும் சட்டத்தால் பலவித கண்டனங்களுக்காளாக வேண்டியிருக்கிறது.

ஒய்வு பெற்ற அரசாங்க ஊழியரும் மன்னாரைச் சேர்ந்தவருமான ஜனப் எல். பி. மஸ்தான் அடுத்து சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:

எமது சமய சமூக வைபவங்கள் யாவும் தமிழிலேயே நடக்கின்றன. எங்களது பகுதிகளிலுள்ள காதி கோட்டுகளில் விசாரணை தமிழிலேயே நடைபெறுகிறது. எனது பகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களனைத்தும் தமிழிலேயே கடமை பார்க்கின்றன. ஆனால் சிங்களம் மட்டும் சட்டம் அமுலாகியதிலிருந்து இவற்றிலெல்லாம் சிங்கள மொழியில் தான் அலுவல்கள் நடைபெறுகின்றன. இதன் காரணமாக இப்பகுதியிலுள்ள தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட முஸ்லிம் மக்கள் யாவரும் பெரும் இன்னல்களை அனுபவிக்க வேண்டியுள்ளது."

அடுத்தபடியாக ஏறுவூரைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் விவசாயியான ஜனப் செய்யது முகமது சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:

"பொத்துவிலிலிருந்து வாழைச்சேனை வரை முஸ்

(13-ம் பக்கம் பார்க்க)

## கல்வி மந்திரிக்கு தமிழரசு தந்தையின் மகஜர்

தமிழாசிரியர்களின் இடமாற்றம் சம்பந்தமாக கல்வி மந்திரி திரு. பி.பி. ஜி. கலுகல்லேக்குத் தமிழரசுத் தந்தை ஒரு திட்டத்தை அனுப்பி வைத்துள்ளார். அத்திட்டம் கீழே தரப்படுகிறது:

"யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் எமது கட்சி அங்கத்தவர்களினதும், உடுப்பிட்டிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. எம். சிவசிதம்பரத்தினதும் சார்பில் இக் கடிதத்தை வரைகிறேன்.

(1) யாழ்ப்பாணத்துக்கு வெளியில் கல்வி பயிலும் மாணவர்களின் நலன்களை அதிக முக்கியத்துவத்துக்குரிய விஷயமாக நாங்கள் கருதுகிறோம். ஆகவேதான், யாழ்ப்பாணத்துக்கு வெளியிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் ஏற்படும் காலி ஸ்தானங்களை யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரியர்களே நிரப்ப வேண்டும் என நாம் கருதுகிறோம்.

(2) சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் தலைமை ஆசிரியர் பதவிக்கு ஏற்படும் காலி ஸ்தானங்களைச் சுவிகரிக்கப்பட்ட பள்ளிக்கூட ஆசிரியர்களைக் கொண்டே நிரப்ப வேண்டுமென்பதே எமது அபிப்பிராயமாகும். இத்தகைய காலி ஸ்தானங்கள், அரசாங்கப் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களால் நிரப்பப்பட்டிருந்தால், அந்த நிலை மாற்றி அமைக்கப்படல் வேண்டும். அப்படிச் செய்த பின், ஓர் கட்டுக்கோப்பான சேவையுயர்ச்சி இடாப்பு வைத்திருக்க வேண்டுமெனக் கூற விரும்புகிறோம்.

(3) தமது வீடுகளுக்கு அருகாமையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் ஓரளவு வசதி அனுபவிக்கையில், யாழ்ப்பாணத்துக்கு வெளியேயுள்ள இடங்களில் ஏற்படும் இக் கஷ்டங்களின் பளுவை எல்லா ஆசிரியர்களுமே தாங்க வேண்டுமென்பதே எமது கருத்தாகும். ஆகவே, யாழ்ப்பாணத்துக்கு வெளியே கடமையாற்றும் சில குறிப்பிட்ட ஒரு தொகையினரான ஆசிரியர்களை, முக்கியமாகக் கஷ்டங்களை அனுபவித்துள்ளவர்களை, யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாக்க வேண்டுமெனச் சிபார்சு செய்ய விரும்புகிறோம். யாழ்ப்பாணத்துக்கு வெளியே 8 வருடங்களோ அதற்கு அதிகமாகவோ கடமையாற்றியுள்ள ஆசிரியர்களில், வருடந்தோறும் 150 ஆசிரியர்களை யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாக்க வேண்டுமென்றும் சிபார்சு செய்ய விரும்புகிறோம்.

(4) பின் வரும் காரணங்களுக்காக ஏற்படக் கூடிய காலி ஸ்தானங்களை, யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாகும் 150 ஆசிரியர்களும் நிரப்புவார்கள் எனக் கருதுகிறோம்.

(i) சாதாரணமாக, கடமையிலிருந்து இளைப்பாறுதல், மரணம் ஆகிய காரணங்களால்;

(ii) பயிற்சிக்காக ஆசிரியர்கள் அனுப்பப்படும் காரணத்தால்;

(iii) பள்ளிக் கூடங்களுக்குக் கூடுதலான மாணவர்கள் எடுக்கப்படும் காரணத்தால்.

(5) (அ) முதலாவது (i) பிரிவின் கீழ், நூற்றுக்கும் மேற்பட்ட காலி ஸ்தானங்கள் ஏற்படும் என்றே நம்புகிறோம். அதாவது, யாழ்ப்பாணத்தில் 3500க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இருக்கிறார்களென்றால், அந்தத் தொகையை 35 ஆல் பிரித்தால், 100 கிடைக்கும்.

5. (ஆ) பிரிவு (ii) ன் கீழ் 75 காலி ஸ்தானங்கள் ஏற்படுமெனக் கணிக்கிறோம்.

5. (இ) பிரிவு (iii) ன் கீழ், குறைந்தது 50 காலி ஸ்தானங்கள் ஏற்படுமெனக் கணிக்கிறோம்.

(6) பந்தி (5)ல் குறிப்பிட்டுள்ளபடி யாழ்ப்பாணத்தில் ஏற்படும் காலி ஸ்தானங்களை, யாழ்ப்பாணத்துக்கு வெளியேயுள்ள ஆசிரியர்களை மாற்றல் செய்வதன் மூலமே நிரப்ப வேண்டுமென்றும், அப்படியான மாற்றல்கள், யாழ்ப்பாணத்தில் அவ்வப்போது ஏற்படும் காலி ஸ்தானங்களுக்கேற்ப, வருட முழுவதும் நடைபெற வேண்டுமென்றும் கூற விரும்புகிறோம். நாங்கள் மேலே கணித்துள்ள மதிப்பீடு சரியெனில், யாழ்ப்பாணத்துக்கு வெளியேயுள்ள ஆசிரியர்களைக் கொண்டு நிரப்புவதற்கென, யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரியர்களை வெளியே மாற்றலாக்கிக் காலி ஸ்தானங்களை சிருஷ்டிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது.

(7) பந்தி (4)ல் குறிப்பிட்டுள்ளபடி யாழ்ப்பாணத்தில் 150 காலி ஸ்தானங்கள் ஏற்படாவிடின், 20 க்கும் 45 க்கும் இடைப்பட்ட வயதினரான ஆசிரியர்களும் அவரது மனைவியரும்—அவர்களும் ஆசிரியைகளாயிருப்பின்—தேவையான காலி ஸ்தானங்களை ஏற்படுத்த, வெளியே மாற்றல் செய்யப்பட வேண்டும்.

(8) ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளிலிருந்தும் வெளியேறும் ஆசிரியர்கள், மணமாகாத ஆசிரியைகளைத் தவிர்த்து, யாழ்ப்பாணத்துக்கு வெளியேயுள்ள பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட வேண்டுமெனக் கூற விரும்புகிறோம். மணமாகிய ஆசிரியைகள், இயன்ற அளவுக்கு, தமது கணவன்மார் படிப்பிக்கும் பள்ளிக்கூடங்களிலேயே நியமிக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத்துக்கு வெளியேயுள்ள பள்ளிக்கூடங்களில் ஏற்படும் காலி ஸ்தானங்களை இவ்விதம் நிரப்ப முடியாவிடின், 20 க்கும் 45 க்கும் இடைப்பட்ட வயதினரான ஆசிரியாகளும், அவர்களது மனைவிமாரும்—அவர்களும் ஆசிரியைகளெனில்—யாழ்ப்பாணத்துக்கு வெளியே மாற்றலாக்கப்பட வேண்டுமெனக் கூற விரும்புகிறோம்.

(9) யாழ்ப்பாணத்துக்கு வெளியே மாற்றலாகிச் செல்லும் ஆசிரியர்கள், 5 வருட காலம் வெளியே கடமையாற்றிய பின் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பும் உரிமை,

(13ம் பக்கம் பார்க்க)





ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்
புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி
கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நற் கல்வியால்தான் மலைநாடு முன்னேறும்

## சீர்திருத்தமும் வளர்ச்சியும் சிறக்க வழியதுவே

கல்வி இல்லாத ஒரு நாடோ,சமுதாயமோ முன்னேற்றம் அடைந்ததாகக் கேள்விப்பட்டதே கிடையாது. மாருக, பின்தங்கிச் சீர் கெட்டதாகவே சரித்திரங்களும் சான்று பகருகின்றன. ஆகவே ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு, சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குக் கல்விதான் முக்கியமானது என்பது வெள்ளிடை மலையாகும். எனவே, மலைநாட்டுச் சமூகம் சீர்திருத்தமும், முன்னேற்றமும், வளர்ச்சியும், நாகரிகமும், நற்பண்பும் கொண்டு விளங்கவேண்டுமேயானுல், கல்வியிலேயே கவனத்தைத் திருப்பவேண்டும்.

அன்று ஆங்கிலேயர் ஆட்சியிலே அல்லல் பட்ட இவர்கள், இன்று சிங்களவர் ஆதிக்கத்திலே சிறுமைப்பட்டுத் தவிக்கிருர்கள். அந்தக் காலத்திலே படிப்பதற்கு வசதி கிடையாது வருந்தி வாழ்ந்தார்கள். இந்தக் காலத்திலே கற்பதற்கு உரிமை கிடையாமல் உழன்று வாழ்கின்ருர்கள்.

தனது வியாபாரத்திலேயே கண்ணுயிருந்த வெள்ளைக்காரன், இவர்களுக்குக் கல்வி வசதியளிக்க முன்வரவில்லை அன்று. இவர்களை வெளியேற்றுவதிலேயே கரிசனையாயிருக்கும், இந்நாட்டு அரசுகள், இவர்களுக்குக் கல்வி உரிமையளிக்க முன்வரவில்லை இன்று.

இந்நாட்டின் வாழ்விற்காகவே தம் வாழ்வை அளித்து வரும் இவர்களின் குழந்தைகளுக்கு, கல்வியளிப்பதிலேயே கயமைத்தனமா? அன்றிருந்த அடிமை நிலை இன்றும் மாறவில்லையே! என்று தான் மாறுமோ இந்த நிலை?

### இதுதான் தேசியக் கல்வியா?

"நாடெங்கிலும் உள்ள குழந்தைகளுக்கு, பணக்காரன், பாட்டாளி என்று பாரபட்சம் பாராது, யாவருக்கும் சமகல்வி அளிப்பதே எமது ஆவல். எல்லாக் குழந்தைகளும் படிக்க வேண்டும், பட்டதாரிகள் ஆக வேண்டும். இதுவே எங்கள் ஆசை." "எமது தேசியக் கல்வித் திட்டத்தின் கொள்கையும் இதுவேதான்." இப்படித் தான் கூறியது இந்த அரசாங்கம்.

இந்தத் "தேசியக் கல்வித் திட்டத்திலே," தோட்டச் சிருர்கள் மட்டும் புறநடையாம். "ஆரம்பக் கல்வியை, அவரவர் தாய் மொழியிலேயே கற்கலாம்," என்ற விதி ஒன்றுண்டு. ஆனுலும் "அது அப்படியில்லை. வேண்டுமானுல் அவர்களும் — தோட்டத்துத் தமிழ்ப் பிள்ளைகளும், சிங்களத்திலேயே ஆரம்பிக்கட்டும் கல்வியை. தமிழில் கற்க வேண்டுமானுல், எங்கள் உதவி கிடையாது," என்று கூறுகின்ருர்கள் மதிகெட்டவர்கள்.

இது சிங்களத் திணிப்பின் நோக்கா? அல்லது தேசியக் கல்வியின் போக்கா? என்பதைப் பொதுமக்களே புரிந்து கொள்வார்கள். ஒரு தேசிய இனத்தின் கல்வி உரிமையைப் பறிப்பதுதான் தேசியக் கல்வியின் திட்டமா?

"பாடசாலைகளைத் தேசியமயமாக்கும்" திட்டத்திலும் பாகுபாடு காட்டத் தவறவில்லை. இதில் தோட்டப் பாடசாலைகள் நீக்கப்பட்டன. தோட்டப்பிள்ளைகள் இலங்கைப் பிரஜைகள் அல்லவென்பதே அதற்குக் காரணமாம்.

க

மேலும் மலைநாட்டு மாணவர்களை "மகாவித்தியாலயங்களிலும்" சேர்க்க மறுப்பு. அநீதியை எடுத்துரைத்தால் வெறும் மழுப்பு. இவ்வாருக, தானும் செய்யாமல் தனி

ஞா. பெ அல்பிரெட்

யாரையும் செய்யவிடாமல் தடைசெய்து விட்டது, தன்னிலையற்ற இந்த அரசாங்கம். உழைத்துக் கொடுக்கும் மக்கள் அனைவரும், ஊமைகளாக, குருடர்களாக, உதைக்கும் கால்களையே முத்தமிடும் அடிமைகளாக, அறிவற்றவர்களாக வாழவேண்டும் என்பது தான், இவர்களது எண்ணமாய் இருக்குமோ? இன்றேல் ஏன் இந்த அநீதி?

### இதுக்குப் பெயர்தான் சோஷலிச்மா?

"ஏழைகளின் கல்வியை அபிவிருத்தி செய்யத்தான் வேண்டும். ஆனுல், எங்களிடம் இப்போது பணம் இல்லையே!" என்று கையை விரிக்கின்றது எங்கள் அரசாங்கம். நாய்க்கூடு கட்டுவதற்கு இருக்கும் பணம், இந்த நல்ல காரியத்திற்குப் பயன்படாதா; வேண்டிய வேலையில், வெளிநாடு சுற்றிப் பவனி வருவதற்கு உள்ள பணம், பாட்டாளி மக்களின் படிப்பு வசதிக்குப் பயன்படாதா? ஏழைகளை வருத்தி, வரிப்பளுவைச் சுமத்தி, வறுமையின் குழியிலே, வாழ்க்கையின் இருளிலே தள்ளிவிடுவதுதான் சோஷலிசத்தின் மாண்பா?

கல்வி விடயத்திலே இலங்கையர் — இந்தியர் என்று காட்டி வரும் பாகுபாடு, சோஷலிசக் கொள்கைக்கே — சமதர்ம கொள்கைக்கே முரண்பட்டதாகும். "இலங்கைப் பிரஜைகளுக்குத்தான் கல்வி. அது இல்லாதவர்களுக்கு இல்லை". இது எந்த நாட்டிலும் நடைபெருத நாகரிகமற்ற — நற்பண்பற்ற செயலாகும் ஐக்கிய நாட்டுச் சாசனத்தின் மனித உரிமைப் பிரகடனத்திற்கே புறநடையானதொன்ருகும்.

முட்டாள்கள் முதலாகச் செய்யத் துணியாத காரியத்தை, இந்த "முற்போக்கு வாதிகள்" செய்ய முனைகின்றனரே. இதுதான் முற்போக்கா? "மலைநாட்டுத் தமிழன் — தொழிலாளி. அவன் அறிவாளியாகக் கூடாது" இதற்குப் பெயர் தான் சோஷலிசமா?

பத்து இலட்சம் மக்களின் பாதுகாவலா தாம்தான் எனத் தம்பட்டமடிக்கும் இரு காங்கிரசுகளும் இங்கில்லையோ, என்னமோ? மலைநாட்டு மக்களின் நலனுக்காக உண்மையோடு உழைக்கும் தொழிலாளத் தலைவர்கள் இவர்கள் என்ருல், அவர்களுக் கெதிராக வரும் சட்டங்களையெல்லாம், ஏன் உறுதியோடு எதிர்க்கக் கூடாது? கல்வி கற்க முடியாத கஷ்டமான நிலை வந்துக்கூடக் கண்மூடிக் கொண்டா இருக்கவேண்டும் காங்கிரஸ் கட்சிகள்? தாங்கிக் கொண்டா இருக்கின்றன தொழிற் சங்கங்கள்?

### பெற்ருர்கள் செய்யும பெருந்தவறு!

அவர்களையும், அரசாங்கங்களையும் நம்பிக் கொண்டு, நாம் வாளாவிருந்தால் நாசமாவது நமது பிள்ளைச் செல்வங்கள்தான். இதை நன்கு உணர வேண்டும் மலைநாட்டுப் பெற்ருேர்கள். நாம் மற்றவர்களைக் குறை கூறிக் கொண்டே இருப்பதாலும், நிறைவு ஏற்படப் போவதில்லை நம் வாழ்விலே. கல்வியைப் பொறுத்தவரையில் நம் மலைநாட்டுப் பெற்ருேரிடமும் பெருங்குறைகள் இருக்கத்தான் செய்கின்றன.

மலை நாடு, மத்திய ஊவா, சப்பிரகாமுவா ஆகிய மாகாணங்களைக் கொண்ட பிரதேசமாகும். இங்கெல்லாம் சேர்ந்து ஏறக்குறைய 860 (தமிழ்) தோட்டப்பாடசாலைகள் இருந்தும், கிட்டத்தட்ட 60 ஆயிரம் மாணவர்கள் கல்வியின்றிக் கடைகெட்டுத் திரிகின்ருர்களே என்ருல், குற்றம் யாருடையது என்பதைப் புரிந்து கொள்ளலாம். வறுமையாய் இருந்தாலும் வளமையாய் வாழும் பண்பு நம்மிடையே மிளிர வேண்டும்.

பெற்ருேரைப் பொறுத்தவரையில் பெரும்பாலானேர், பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலே கவனம் செலுத்துவதே கிடையாது. தோட்டத்தில் பாடசாலைகள் அமைத்திருப்பது, ஆசிரியரின் பிழைப்புக்காகவே என்று அவர்கள் எண்ணி விடுகிருர்கள். மாணவர்களின் கல்விக்காக வென்பதை அவர்கள் உணர்ந்து பார்ப்பதில்லை.

இதுவரையும் எண்ணும் எழுத்தும் வாசினையுமே, ஐந்தாம்வகுப்பு மட்டுமுள்ள

(13-ம் பக்கம் பார்க்க)

## மலைநாடு

சம்பாஷணை:

## 'இனம் இனத்தோட சேரணும் தொழிலாளர் ஏற்றம் பெற இதுவே சிறந்த வழி'

—வீ. தருமலிங்கம், கொட்டகலை—

"வாங்க...... தலைவரே! என்ன? உங்களைக் கண்டு கொள்ளவே முடியலியே?" எங்க போயிருந்தீங்க... எப்படி தோட்டமெல்லாம்."

"எங்கங்க ..வசதியில்லிங்க வர்ரதுக்கு. அதோட தோட்டத்திலும் அதிகமா வேலை... கொஞ்சக் கரச்சலுங்கூட."

"ம்... அப்படியா... என்ன கரச்சல், எந்த சங்கத்துக்கு வேலை செய்யிறீங்க...

"எல்லாச் சங்கத்திலேயும் இருந்து பார்த்துட்டேன், ஒன்னிலேயும் உருப்படியா எதையும் செய்ய முடியலே, அதனுலே இப்ப சும்மா கட்சிகிட்சின்னு ஒன்னிலேயும் சேராமல் நிம்மதியா என் பொழைப்போட, வீட்டோட கெடக்கிறேன்.

"ஆ... என்னு அவ்வளவு சலிப்பா சொல்றீங்க, தோட்டக் கமிட்டித் தலைவரா பத்து பதினைஞ்சு வருஷமா இருந்தீங்க, மாவட்டத் தலைவரா வேற அஞ்சாறு வருஷம் இருந்தீங்க, அதுக்குள்ளே இவ்வளவு சலிப்பு..."

"சலிப்பொன்னும் இல்லை நாளு போக போக, நாம நம்ம இனத்தவங்க நாசமா போறதுக்கு, இந்த நன்றி கெட்ட அரசாங்கம், என்ன என்ன சட்டமெல்லாமோ போட்டு வதை வாங்குது. அதைத் தட்டிக் கேட்க, எதித்து கேட்க நமக்கின்னு ஒரு தலைவரோ சங்கமோ இப்ப இல்லே. ஆளுக்கொரு கட்சி, நினைச்சப்போ ஒரு கட்சி, நாளுக்கொரு கட்சி, இப்படி தெனமும் தோட்டங்களிலே தோன்றிமறைஞ்சிக்கிட்டே இருக்கு. இதிலே தொழிலாளிக்காக உழைக்கிற கட்சி எதுங்கிறது என்னுல புரிஞ்சிக்கவே முடியல்ல."

(13-ம் பக்கம் பார்க்க)


பண்டிகைகளிலும், வைபவங்களிலும் பிரசித்தி பெற்றது

லதா!!!



லதா அச்சடி கிளேஸ்ட் கொட்டன்!!

கவர்ச்சி தரும் நிரந்தர பல அழகிய நிறங்களிலும்;
புகழ்ச்சி பெறும் புதிய டிசைன்களிலும்;
உயர்ச்சி மிகு உறுதிப்பாட்டுடனும் உருவானது.

லதா பொப்ளின்!!

ஆடவர் தம் சேட் முதலியவற்றிற்கேற்ற அற்புத நிறங்களில் நீண்ட நாட் சேவை புரியும்படி தயாரிக்கப்பட்டது.




எலைட் சுப்பர்லோன்
வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானெலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்: குண்டன்மால்ஸ் லிமிட்டெட், கொழும்பு.

மொத்த விற்பனைப் பகுதி 26, கெய்ஸர் வீதி,

சில்லறை விற்பனைப் பகுதி 110 &114, மெயின் வீதி

—MYLADS—


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மறைந்த மாவீரன் ஜோன் எவ். கென்னடி

ஜனாதிபதி ஜோன் பிட்ஸ் கெரால்ட் கென்னடி அமெரிக்காவின் முதல் கத்தோலிக்க ஜனாதிபதியாவார். அத்துடன், அமெரிக்காவின் மிக இளைய ஜனாதிபதியும் அவரே. அமெரிக்காவின் 35வது ஜனாதிபதியாக தமது 43வது வயதில், 1960ம் ஆண்டில், பதவியேற்றார் திரு. கென்னடி.

அழகான மனைவியும், அன்புக் குழந்தைகள் இருவரும் திரு. கென்னடியின் வாழ்க்கைக்கு இதமான இன்பத்தை ஊட்டினர். இவர்களை விட்டுக் கணமேனும் பிரிய மனமில்லாத திரு. கென்னடி, இன்று அவர்களை என்றுமே விட்டுப் பிரிந்து விட்டார், ஓர் கொலைகாரனின் பாதகச் செயலின் விளைவால்.

திரு. கென்னடி, தமது 29வது வயதில் 1947, ஜனவரி மாதம் ஐக்கிய அமெரிக்கக் காங்கிரஸின் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆறு வருடம் கழித்து, அவர் செனட்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1960ம் ஆண்டில், ஜனநாயகக் கட்சியின் சார்பில் திரு. கென்னடி, ஜெனரல் ஐசன்ஹோவருக்குக் கீழ் உதவி ஜனாதிபதியாகக் கடமையாற்றிய திரு. ரிச்சார்ட் நிக்ஸனை எதிர்த்துப் போட்டியிட்டார். தீவிரமான பிரச்சாரத்தின் பயனாக திரு.கென்னடி 118,000 பெரும்பான்மை வாக்குகளால், தமது எதிரியைத் தோற்கடித்தார்.

மிகுந்த செல்வம் வாய்ந்த பணக்காரக் குடும்பத்தில் பிறந்த திரு. கென்னடி, தமது வாழ்க்கையில் எளிமையையும், அடக்கத்தையுமே எப்போதும் நாடினார். எழுத்தாளராகவோ அல்லது உபாத்தியாயராகவோ தமது வாழ்க்கையைச் செலுத்த நினைத்த திரு. கென்னடிக்கு, அரசியலில் புக வேண்டுமென்ற எண்ணம் இளமையில் இருந்ததில்லை. அவரது மூத்த சகோதரர் ஒருவருக்கு அரசியல்வாதியாகத் திகழ வேண்டுமென்ற இலட்சியம் இருந்தது. ஆனால், அவர் போர்முனையில் தமது உயிரை இழக்க வேண்டி நேரிட்டது. இது இளைய கென்னடியின் மனச்சாட்சியைக் குறுகுறுக்க வைத்த வண்ணமே இருந்தது. தமையனாரின் இலட்சியத்தை ஈடேற்ற, தம்பி ஜோன் கென்னடி அரசியல் வாழ்வை மேற்கொண்டார்.

இந்தச் சுயநலமற்ற மனப்பான்மை திரு. கென்னடியிடம் இறுதி வரை இருந்து வந்தது. விடா முயற்சி, தளராத உறுதி, விட்டுக்கொடுக்கும் தன்மை, விசாலமான உள்ளம், குடும்பப் பற்று, மனோதைரியம்— இந்த நற்குணங்களெல்லாம் இளம் ஜனாதிபதியிடம் காணப்பட்ட இறவாச் செல்வங்கள்.

அமெரிக்காவுக்கு விஜயம் செய்த பிற நாட்டுத் தலைவர்கள் எல்லோரையும் திரு. கென்னடியின் மறைவு தனிப்பட்ட முறையில் தாக்கியிருக்கவே வேண்டும். ஏனெனில், அவ்வளவு தூரம் வந்தோரை அகமும் முகமும் மலர வரவேற்று, விருந்தோம்பி, வாசல்வரை சென்று வழியனுப்பும் பண்பு மறைந்த தீரனிடம் நிறைந்திருந்தது.

உலக சமாதானத்துக்காக அரிய முயற்சிகளை மேற்கொண்டு அயராது உழைத்த உத்தமன். அமெரிக்காவை இரண்டு படுத்தும் பிரச்சினையாக விளங்கி வரும் நீகிரோப் பிரச்சினைக்கு மனிதாபிமானத்துடன் முடிவு காண முற்பட்ட மாவீரன். தன் இனத்தவரின் நிற வெறியையே சாடி, அமெரிக்காவுக்கு மங்காப் புகழ் தேடித் தந்த இரண்டாவது லிங்கன். கொள்கையால் முரண்பட்ட ரஷ்யாவுக்கும் தனது நேசக்கரம் நீட்டி, நட்புறவுப் பாசத்தை இரு நாடுகளுக்கிடையேயும் ஏற்படுத்திய ஏந்தல். எத்தனையோ இன்னல்கள், பிரச்சினைகள், கடமைகள் இவற்றிடையேயும், தனது அழகிய மனைவியுடன் அன்புடன் பேசவும், அன்புக் குழந்தைகளை அரவணைத்து ஆனந்தம் கொள்ளவும் என்றுமே தவறாத குடும்பத் தலைவன்.

கொலைகாரனின் குண்டுகளுக்கிரையான அந்த உலகப் பிரஜை கென்னடி, அகிலத்து மக்களனைவரினதும் உள்ளங்களில் நீங்கா நினைவாக நிலைத்துவிட்டார்.

மறைந்த தலைவரின் துணைவியார்க்கும், அவரது கண்மணிகளாய்த் திகழ்ந்த இரு செல்வக் குழந்தைகளுக்கும் இறைவன் துணையாகக் கடவ எனப் பிரார்த்திப்பதுடன், திரு. கென்னடியின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திப்போமாக.



# புதிய ஜனாதிபதி லிண்டன் பி. ஜோன்ஸன்

காலம்சென்ற திரு. கென்னடியின் கீழ், உதவி ஜனாதிபதியாகக் கடமையாற்றிய திரு. லிண்டன் பெயின்ஸ் ஜோன்ஸன், அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ளார். இவர் அமெரிக்காவின் 36வது ஜனாதிபதியாகிறார்.

அரசாங்கத்தின் பல்வேறு துறைகளிலும் ஆழ்ந்த அனுபவம் பெற்ற இவர், திரு. கென்னடியின் உதவி ஜனாதிபதியாக 1961ல் பதவியேற்றார்.

இவர் 1935ம் ஆண்டு தொடக்கம் அரசியலில் ஈடுபட்டு வந்துள்ளார். 1937ல் சனப்பிரதிநிதிகள் சபைக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1948ல் செனேட்டரானார். 1953 தொடக்கம் 1960 வரை, செனேட்டில் பெரும்பான்மையினரின் தலைவராக விளங்கிய திரு. ஜோன்ஸன், வேறுபட்ட கொள்கைகளுடைய தமது சகாக்களை ஒன்று சேர்க்கும் திறமை வாய்ந்தவர் எனப் புகழீட்டினார்.



புதிய ஜனாதிபதி
லிண்டன் பி. ஜோன்ஸன்

திரு. ஜோன்ஸன், காலம் சென்ற திரு. கென்னடி மீதும், அவர் கடைப்பிடித்து வந்த முக்கியமான கொள்கைகள் மீதும் அன்பும், அபிமானமும் உடையவர். ஆகவே, இறந்த தலைவரின் கொள்கைகளை ஈடேற்றும் பொறுப்பு இவரினால் சரிவர நிறைவேற்றப்படுமென்றே எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். காலம்சென்ற திரு. கென்னடி தமது இதயத்துக்கு மிக நெருக்கமான பிரச்சினை எனக் கருதிய நீகிரோப் பிரச்சினையையிட்டுக் கொண்டு வந்த சிவில் உரிமைச் சட்டத்தைக் காங்கிரசில் நிறைவேற்றி வைக்கும் கடமை தான் திரு. ஜோன்ஸனை முதன் முதலாக எதிர்நோக்கியுள்ள முக்கிய பொறுப்பாகும்.

திரு. ஜோன்ஸன் அமெ[illegible]

(13-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

## "ஒருகணம் இருந்தது மறுகணம் மறைந்தது"

## காலம் சென்ற கென்னடிக்கு கவலைதோய்ந்த பிரியாவிடை

காலம் சென்ற அமெரிக்க ஜனாதிபதியின் பூதவுடல், நாட்டு மரியாதைக்காக வைப்பதற்கெனத் தலை நகருக்குக் கொண்டு வரப்பட்ட பொழுது, அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்திய ஜனநாயகக் கட்சித் தலைவர்களில் ஒருவரான செனேட்டர் மைக் மான்ஸ்பீல்ட், பின்வரும் அமரத்துவ வார்த்தைகளைக் கூறினார்:

"சிரிப்பின் ஒலி அங்கு இருந்தது, மறுகணம் அது மறைந்து விட்டது. ஆகவே அவள் (திருமதி கென்னடி) தனது விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி அவன் கைகளில் வைத்தாள்."

"இளைஞனுமல்லாத, கிழவனுமல்லாத அம் மனிதனிடம், கிழவனுடைய விவேகமும், குழந்தையின் விவேகமும் நிறையக் கலந்தவோர் புத்திகூர்மை இருந்தது; மறுகணம் அது மறைந்துவிட்டது. ஆகவே அவள் தனது விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி அவன் கைகளில் வைத்தாள்."

"இன்னும் எத்தனையோ வருட காலம் இருக்க வேண்டிய வாழ்வு துள்ளிக்குதிக்கும் உடலுடன், தனது நாட்டுப் பாசத்தின் வடுக்களைத் தாங்கி நின்றான் அம் மனிதன்; அடுத்த கணம் அவன் மறைந்துவிட்டான். ஆகவே அவள் தனது விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி அவன் கைகளில் வைத்தாள்."

"சின்ன மகனும், சின்னப் பெண்ணும் உடைய ஓர் தந்தை இருந்தார்; ஒன்றின் இன்பத்தை மற்றதில் காணும் களியுவகையும் கூடவே இருந்தது. மறுகணம் அது மறைந்துவிட்டது. ஆக்வே அவள் தனது விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி அவன் கைகளில் வைத்தாள்."

"அதிகம் கேட்பதுடன் அதிகம் கொடுக்கும் குணமும் வாய்ந்த ஒரு கணவன், வாழ்க்கையில் முறிக்க முடியாத பிணைப்பை ஓர் பெண்ணுடன் பின்னிப் பிணைத்து விட்டான். மறுகணம் அது மறைந்து விட்டது. ஆகவே அவள் தனது விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி அவன் கைகளில் வைத்து, முத்தமிட்டு விட்டு, சடலப் பெட்டியின் மூடியை அடைத்து விட்டாள்."

"எங்கள் ஒவ்வொருவரினதும் ஒரு பகுதி அந்த நேரத்தில் இறந்தது. இறப்பிலும் அவர் தம்மை எங்களுக்கு அர்ப்பணித்தார். சிரிப்பொலி வந்த தனது நல்லிதயத்தை எமக்களித்தார். சிறந்த தலைமை உதித்த அந்த புத்திகூர்மையை எமக்களித்தார். மனித வீரத்துடன் பிணைக்கப்பட்ட ஓர் பலத்தையும், ஓர் கருணையையும், பயமின்றிச் சமாதானம் நாடுவதற்கு எமக்களித்தார்."

"அவர் தமது அன்பை அளித்தார், நாமும் அதைத் திருப்பிக் கொடுப்போமென்று. அவர் தந்தார் நாம் கொடுப்போமென்று; எமக்குள் ஒருவர்க்கொருவர் கொடுப்போமென்று; வீண் பெருமை, வீம்பு, இன வெறி, அநீதி, கொடூரம் எவையெல்லாம் ஒன்று சேர்ந்து, அந்தப் பயங்கரக் கணத்தில் அவரை அடித்து வீழ்த்தியதோ, அவற்றுக்கெல்லாம் எம்மிடையே இடமில்லாத வரை, துளி கூட இடமில்லாத வரை நாம் ஒருவர்க்கொருவர் அன்பைக் கொடுத்துக் கொண்டேயிருப்போமென்று."

"எங்களை விட்டுப்பிரியும் ஜோன் பிட்ஸ்கெரால்ட் கென்னடி—ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் ஜனாதிபதி—மேற்கூறிய குணாதிசயங்களை எமக்கு விட்டு விட்டுச் செல்கிறார். அவற்றை நாம் ஏற்றுச் செல்வோமா, திரு. ஜனாதிபதியவர்களே (புதிய ஜனாதிபதி திரு. ஜோன்ஸனுக்கு விளிக்கப்பட்ட கேள்வி)? இவற்றை ஏற்கும் பொறுப்புணர்ச்சியும், விவேகமும், மனோதைரியமும் எமக்கு இருக்கின்றனவா? இருக்க வேண்டுமென்றே இறைவனை நான் பிரார்த்திக்கிறேன்."

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பட்டதாரி இளைஞர்கள் வெளிநாடு பயணம்

# ஆட்சியாளர் கெடு பிடியால் தொழில் வசதி மறுப்பு

'கோமகன்'
'மாமல்லன்'

### அரங்கம் 27

மேடையில் தோன்றிய தலைவர் ஏமன் டி வேலரா ஒருசில வார்த்தைகளைத் தான் கூற முடிந்தது. அரசாங்கத்தின் எந்திரத் துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின. மக்கள் கூட்டம் மேடையை விட்டுத் தூர ஓடியது. காலிக் கூட்டம் ஒன்று மேடையை நோக்கி முன்னேறியது. டி வேலரா தள்ளி விழுத்தப்பட்டார். எனினும் எழுந்து நின்று கொண்டு அவர் மீண்டும் பேச முற்பட்டார். அரசாங்கத்தின் துப்பாக்கிகள் மீண்டும் முழங்க ஆரம்பித்தன. தான் தொடர்ந்து பேசினால் மக்கள் சுடப்பட்டு மாளலாம் என்று எண்ணிய டி வேலரா, துப்பாக்கிகளை நோக்கி ஓடினார்; தன்னைக் கைதுசெய்ய விரும்பினால் கைதுசெய்யும்படி கூறினார். தலைவர் டி வேலரா கைது செய்யப்பட்டார். அத்தோடு துப்பாக்கிகளின் முழக்கம் நின்று விட்டது. கைது செய்யப்பட்ட டி வேலரா விசாரணையின்றிச் சிறையிலடைக்கப்பட்டார்.

## 'இலட்சிய வீரர்கள்' இயக்கம் உருவாகியது

டி வேலரா கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து சின் பீனின் தேர்தல் தலைமை நிலையம் ஆட்சியினரால் நாசமாக்கப்பட்டது. இவ்வளவு கொடூரங்களுக்கும் நடுவில் தேர்தல் நடைபெற்றது. ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் உளவுப் பொலீசார் நின்று கொண்டு வாக்களிக்கச் சென்றவர்களைக் கூர்ந்து கவனித்தனர். அதனால் நாட்டு மக்களில் 64 சதவிகிதத்தினரே வாக்களித்தனர். கொஸ்கிரேவ் கட்சியினர் 63 ஆசனங்களையும் சின் பீன் வாதிகள் 44 ஆசனங்களையும் கைப்பற்றினர். எத்தனையோ இடைஞ்சல்களுக்கிடையில் சின் பீன் வாதிகள் 44 ஆசனங்களைக் கைப்பற்றியது பாராட்டத் தக்கதே.

## மக்கள் தலைவர் விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டார்

மீண்டும், கொஸ்கிரேவ் அரசாங்க வாரியத்தின் தலைவரானார். 10—9—1923ல் அயர் சுதந்திர மாநிலம், நாடுகள் கழகத்தில் ஓர் உறுப்பினராக அனுமதிக்கப்பட்டது.

## அடக்கு முறையின் மத்தியில் ஆளுனர் தேர்தல்

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் வாடிய குடியரசுவாதிகள் பலவித இன்னல்களுக்கு ஆளாகிக் கொண்டிருந்தனர். அதனால் ஆங்கில ஆட்சியினர் காலத்தில் கையாண்ட உபாயத்தையே கையாளுவதெனக் குடியரசு வாதிகள் பலர் முடிவு செய்தனர். 424 குடியரசுக் கைதிகள் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தனர். இதைக் கண்டு ஆட்சியினர் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. உண்ணாவிரதம் காரணமாக அ. கு. இராணுவத்தைச் சேர்ந்த தளபதிகள் இருவர் உயிர் நீத்தனர். இவர்கள் இருவர் இறந்ததைக் கண்டும் அரசாங்கம் விட்டுக்கொடுக்க மறுத்தது. அரசாங்கத்தின் இந்த இரக்கமற்ற கொள்கையை மாற்ற முடியாததை யறிந்த குடியரசுத் தலைவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடுவதென முடிவுசெய்தனர். வீணே உயிர் நீத்தலை அவர்கள் விரும்பவில்லை. உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்ட நாற்பத்தோராவது நாள் அது கைவிடப்பட்டது.

உண்ணாவிரதம் கைவிடப்பட்டதைத் தொடர்ந்து பெண் கைதிகள் அனைவரும் விடுதலையானார்கள். சிறிது காலத்திற்குப் பிறகு ஆண்களிற் சிலர் விடுதலையானார்கள். 16—7—1924ல் தலைவர் ஏமன் டி வேலரா விடுதலை செய்யப்பட்டார்.

ஆங்கில ஆட்சியாளருடன் ஆதர் கிரிபித் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி வட அயர்நாட்டுக்கும் தென் அயர்நாட்டுக்கும் இடையிலுள்ள எல்லையை நிர்ணயிப்பதற்கான எல்லை ஆணைக் குழுவுக்கு ஒருவரை நியமிக்கும்படி வட அயர்நாட்டு அரசாங்கத்தை ஆங்கில அரசாங்கம் கேட்டுக்கொண்டது. அதற்கு வட அயர்நாட்டு அரசாங்கமோ மறுத்துவிட்டது. அதனால் பிரித்தானிய அரசாங்கமே வட அயர்நாட்டுக்காகவும் தமக்காகவும் இருவரை நியமித்தது. குழுவின் மூன்றாவது உறுப்பினரான தென் அயர்நாட்டுப் பிரதிநிதியாகப் பேராசிரியர் ஐன் மக்னீல் ஏற்கனவே கொஸ்கிரேவ் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார். எல்லை ஆணைக் குழுவால் தமக்கு ஏதும் நன்மை வரப்போவதில்லை என்பதை நன்கு உணர்ந்திருந்தும் கொஸ்கிரேவ் தன்னையும் நாட்டு மக்களையும் ஏமாற்றவே முயற்சி செய்தார் என்றால் பிழையாகாது.

இதே காலத்தில்தான் வட அயர் நாட்டிலும் பெரிய பிரித்தானியாவிலும் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. வட அயர்நாட்டுத் தொகுதியொன்றுக்கு ஏமன் டி வேலரா சின் பீனால் நியமிக்கப்பட்டிருந்தார். தேர்தல் கூட்டத்தில் பேசுவதற்காக அவர் வட அயர் நாடு செல்லப் போவதாக அறிவிக்கப்பட்டது. அதனால் வட அயர்நாட்டுக்கு வரும் புகைவண்டிகளையும் மற்றும் வாகனங்களையும் ஆட்சியினர் சோதனை செய்தனர். டி வேலரா அகப்படவில்லை. எனினும் குறிப்பிட்ட தினத்தில் குறிப்பிட்ட மேடையில் டி வேலரா தோன்றினார். வட அயர்நாட்டுப் பொலீசார் அவரைக் கைதுசெய்து வட அயர்நாடு என அழைக்கப்படும் 6 மாவட்டங்களுக்கு வெளியே கொண்டு போய்விட்டனர். எனினும் டி வேலரா மீண்டும் ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தோன்றினார். மீண்டும் அவர் கைது செய்யப்பட்டு வட அயர்நாட்டு அரசாங்கத்தின் நீதிமன்றமொன்றில் விசாரிக்கப்பட்டார். அந்த நீதிமன்றத்தைத் தாம் மதிப்பதில்லை என்று முழங்கிய டி வேலராவுக்கு இரண்டு மாதச் சிறைவாசம் விதிக்கப்பட்டது.

ஏமன் டி வேலரா சிறையிலிருக்கையில் புனருத்தாரணம் செய்யப்பட்ட சின் பீனின் ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது. 1300 பேராளர்கள் சமூகம் கொடுத்திருந்தனர். டி வேலரா மீண்டும் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். நாட்டிலே சின் பீனின் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டே வந்தது. இதற்கு இடைத் தேர்தல்கள் எடுத்துக்காட்டாக இருந்தன.

கொஸ்கிரேவ் அரசாங்கத்தின் அட்டூழியத்தைப் பொறுக்க முடியாது. அவரது அமைச்சரவையில் ஓர் உறுப்பினராக இருந்த யோசேப் மக்கிராத், இன்னும் 8 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து தம் பாராளுமன்ற உறுப்புரிமையைத் துறந்தார். இந்த ஒன்பது ஆசனங்களுக்காகவும் இன்னும் ஐந்து ஆசனங்களுக்காகவும் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் சின் பீனின் வாக்குகள் முன்னைய பொதுத் தேர்தலைவிட அதிகமாக இருந்தன. அத்தோடு சின் பீன் 4 ஆசனங்களையும் கைப்பற்றியது. அதனால் சின் பீனின் பலம் 48 ஆக உயர்ந்தது.

### அரங்கம் 28

சின் பீனுக்கு இவ்வாறு பலம் கூடிக் கொண்டிருந்தாலும் அந்தப் பலம் ஆட்சியைக் கைப்பற்றப் போதுமானதாக இருக்குமா என்ற கேள்வி எழுந்தது. குடியரசுவாதிகளைப் பொறுத்த மட்டில் அரசாங்கம் பாரபட்சமாகவே நடந்து வந்தது. குடியரசுக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்கும் எவருக்குமே அரசாங்கம் தொழில் வசதி செய்து கொடுக்க மறுத்தது. தொழில் வேண்டுமானால், ஆங்கில மன்னருக்குத் தாம் விசுவாசமாக இருப்பதாகக் குடியரசுவாதிகள் சத்தியம் செய்ய வேண்டியிருந்தது. பட்டதாரிகள் பலர் பல்கலைக் கழகத்திலிருந்து குடியரசுவாதிகளாகவே வெளியேறினர். அவர்களையெல்லாம் தொழிலின்மை காத்துக்கொண்டிருந்தது. அதனால் குடியரசுவாதிகள் பலர்—அதுவும் உடல் வலிமை பொருந்திய இளைஞர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறலாயினர். 1924ம் ஆண்டில் மட்டும் 19000 பேர் அமெரிக்காவுக்குச் சென்றனர். 1925ம் ஆண்டில் 20000 பேர் அமெரிக்கா நோக்கிச் சென்றதாகத் தெரிகிறது.

இந்த நிலையில், டி வேலரா கையாண்டு வந்த கொள்கை சரிதானா என்ற கேள்விகூடக் குடியரசுவாதிகள் மத்தியில் எழ ஆரம்பித்தது. குடியரசுவாதிகளின் பாடு இவ்வாறாக இருக்க, எல்லை ஆணைக்குழு தனது விசாரணையை ஆரம்பித்தது. இதை வட அயர்நாட்டுப் பிரதமர் சேர் ஜேம்ஸ் கிறெயிக் எள்ளளவும் விரும்பவில்லை. அதனால் அவர் பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தல் ஒன்றுக்கு வழிவகுத்தார். 3-4-1925ல் நடைபெற்ற தேர்தலில் இணையாளர் கட்சியினர் 32 பேரும் தேசியக் கட்சியினர் என அழைக்கப்படும் உள்நாட்டு ஆட்சிக் கட்சியினர் 10 பேரும் சின் பீன் வாதிகள் 2 பேரும் ஏனையோர் 8 பேரும் வென்றனர். தேசியக் கட்சியினரும் சின் பீன் வாதிகளும் ஒருவரை ஒருவர் ஆதரித்து நின்றனர். கிறெயிக்கின் கொள்கைக்கு வட அயர்நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் அமோக ஆதரவு அளிக்கின்றனர் என்பதை இத்தேர்தல் எடுத்துக் காட்டினாலும் எல்லைப்புறத்திலுள்ளவர்கள் தாம் தென் அயர்நாட்டோடு சேர்வதையே விரும்புவதாகக் காட்டுவதாகவும் தேர்தல் இருந்தது. இந்த வெற்றியை ஆதாரமாகக்கொண்டு எல்லைப் புறத்திலுள்ள மக்கள், எல்லைப் புறத்தில் ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடாத்தியே எல்லையை நிர்ணயிக்க வேண்டும் என வாதாடினர். எனினும் ஆணைக் குழுவினர் அந்த வேண்டுகோளை நிராகரித்துவிட்டனர்.

எல்லை ஆணைக் குழுவினர் தமது விசாரணையை முடித்துக் கொண்டனர். அவர்கள் தமது உத்தியோகபூர்வமான அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னதாகவே 7-11-1925ல் ஒரு பத்திரிகை, அந்த அறிக்கை பற்றி எழுதியது. அப்பத்திரிகை, தற்போது இருக்கும் எல்லையில் ஒரு சில சிறிய மாற்றங்களே செய்யப்படும் எனவும் அந்த மாற்றங்களும் வட அயர்நாட்டுச் சார்பாகவே இருக்கும் எனவும் கூறியது. இதே செய்தியைத்தான் இன்னுமொரு பத்திரிகையும் வெளியிட்டது. இதைக் கண்ட நாட்டு மக்கள் கொதித்தெழுந்தார்கள்; கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

## மக்கள் பிரதிநிதிகள் பதவி துறந்தனர்

இந்தப் பொதுசன அபிப்பிராயத்தைக் கண்ணுற்ற பேராசிரியர் ஐன் மக்னீல் 21-11-1925ல் எல்லை ஆணைக் குழுவிலிருந்து விலகிக் கொண்டார். இதைக் கேள்வியுற்றதும் ஆணைக் குழுவிலிருந்த மற்ற இருவரும், தமது அறிக்கையின் நகல் ஒரு மாதத்திற்கு முன்னரே தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் அதற்கு முனைவர் மக்னீல் தனது சம்மதத்தைத் தெரிவித்திருந்ததாகவும் இப்பொழுது மக்னீல் குழுவை விட்டு விலகுவது அர்த்தமற்றதெனவும் ஓர் அறிக்கையை வெளியிட்டனர். கொஸ்கிரேவ் அரசாங்கத்தில் கல்வி மந்திரியாக இருந்த முனைவர் மக்னீல் 24-11-1925ல் அந்தப் பதவியையும் துறந்தார்.

இதைத் தொடர்ந்து கொஸ்கிரேவும் கெவின் ஓகிக்கின்ஸும் அவசர அவசரமாக லண்டனுக்குப் பயணமானார்கள். லண்டனில் இரகசியப் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. 3-12-1925ல் பேச்சுவார்த்தைகளின் முடிவுகள் வெளியாகின.

## எல்லை ஆணைக்குழு முடிவிற்கு மக்கள் எதிர்ப்பு

எல்லை ஆணைக் குழுவின் அதிகாரங்கள் அனைத்தும் மீளப்பெறப்படுவதாகவும் தற்போது இருப்பது போலவே எல்லைகள் இருக்கும் எனவும் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக நடைபெற்ற போரின் காரணமாக ஆங்கிலப் படைகளுக்கு ஏற்பட்ட நட்டத்திற்குச் சுதந்திர மாநில அரசாங்கம் நட்டஈடு அளிக்க ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அந்த முடிவுகள் தெரிவித்தன.

அன்னியனின் திட்டமிடப்பட்ட குடியேற்றத்தினாலும் மத மாற்றத்தினாலும் சொந்த நிலம் போன பின் அந்த நிலம் அன்னியனுக்குத்தான் சொந்தம் என வாதாடும் கொஸ்கிரேவ் முழுத் துரோகி எனக் கூறிக் குடியரசுவாதிகள் கொதித்

(11-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1963 டிசம்பர் மாதம் 1-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## இடமாற்றப் பிரச்சினை

தமிழாசிரியர் இடமாற்றம் உண்மையில் ஒரு சிறிய பிரச்சினைதான் அது இன்று பெரிய பிரச்சினையாக வளர்ந்து விட்டது. துரும்பு தூணாகியுள்ளது.

இடமாற்றங்களை ஆதரிக்கவும் எதிர்க்கவும் ஆசிரியர்கள் கோஷ்டிகளையும் புதுப்புது சங்கங்களையும் அமைத்துக் கொண்டுள்ளனர். இதனுல் பிரச்சினை மேலும் சிக்கலடைந்துள்ளது. சிக்கலைத் தீர்த்தாலன்றி அவர்களை ஐக்கியப்படுத்த முடியாத நிலை தோன்றியிருக்கிறது.

இதற்கான திட்டமொன்றைத் தமிழரசுத் தந்தை கல்வி மந்திரியிடம் கொடுத்துள்ளார். இடமாற்றச் சிக்கலுக்கு இலகுவான தீர்வைக் கொடுக்கிறது இத்திட்டம். பிறிதொரு பக்கத்தில் திட்டத்தின் முழு விபரம் காண்க!

இத்திட்டப்படி எந்த ஆசிரியரையும் அவசியமற்ற முறையில் யாழ்ப்பாணத்துக்கு வெளியே மாற்றத் தேவையில்லை. இளைப்பாறல், மரணம், பயிற்சிக்கு அனுப்புதல், ஆண்டுதோறும் பெருகிவரும் மாணவர் தொகை என்ற காரணங்களால் யாழ்ப்பாணத்தில் சுமார் 150 இடங்கள் வரை காலியாகலாம். அந்த இடங்களை நிரப்ப வெளிமாகாணங்களிலிருந்து ஆசிரியர்களை மாற்றவேண்டும். யாழ்ப்பாணத்துக்கு வெளியே நீண்ட காலம் பணியாற்றி கஷ்டப்படும் ஆசிரியர்கள் இதனுல் நிவாரணம் பெறுவர்.

எதிர்பார்க்கும் அளவு காலி இடங்கள் ஏற்படவில்லையேல், அதற்கும் ஒரு நேரிய வழியை வகுத்துக் கொடுக்கிறது திட்டம். ஆசிரியத் தம்பதிகள் ஒரே பாடசாலையிலோ, அடுத்துள்ள இரு பாடசாலைகளிலோ கடமையாற்றுவதற்கும், மணமாகாத ஆசிரியைகள் யாழ்ப்பாணத்திலே தங்கிப் பணிபுரிவதற்கும் வழி வகுத்துள்ளது இந்தத் திட்டம்.

இடமாற்றச் சிக்கலுக்குத் தீர்வுகாண திட்டவட்டமான வழி முறைகள் இதில் அடங்கியுள்ளன. ஆசிரியர்கள் ஆளுக்கொரு திசையில் பிரிந்து நிற்காமல், ஒன்றுபட்டு இத்திட்டத்தை அலசி ஆராயட்டும். வேறு சிறந்த திட்டங்களிருப்பின் அவற்றையும் எடுத்துக் கூறி, சிக்கலுக்குத் தீர்வு காணட்டும்!

இந்தத் திட்டத்தால் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாது. ஆசிரியர்களைக் கண் மூடித்தனமாக இடமாற்றம் செய்யவும் இதில் இடமில்லை. இதன்படி ஆசிரியர்களைத் தொகையாக இட மாற்றம் செய்யவும் முடியாது எந்த ஆசிரியருக்கும் அநீதி விளைவிக்க வேண்டுமென்ற நோக்கம் அறவே கிடையாது. இடமாற்றம் முறையாக நடைபெறவே இந்தத் திட்டம் உதவுகிறது.

ஆசிரியர்களிற் சிலர் சொந்த ஊரில் என்றென்றும் சில வசதிகளுடன் வாழவும், வேறு சிலர் வெளியூர்களில் தொடர்ந்து கஷ்டப்படவும் அனுமதித்தல் தர்மமாகாது. அது ஆசிரியர் உலகிற்கே ஓர் இழுக்கு. எனவே வெளியிடங்களில் கடமையாற்றுபவர்களின் கஷ்ட நிலைமையை உணர்ந்து தியாக புத்தியுடன் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து, பிரச்சினையை வளர்க்காமல் சுமுகமாகத் தீர்ப்பதற்கு ஆசிரியர்கள் அனைவரும் முன் வர வேண்டும்.

ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்சினையில் அரசியற் தலைவர்கள் தலையிடக்கூடாதென்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இது பொறுப்பற்ற பேச்சு. இடமாற்றம் ஆசிரியர்களைப் பொறுத்த பிரச்சினை மட்டுமல்ல. அது வருங்காலச் சந்ததியையும், தமிழ் பேசும் இனத்தையும் தமிழ் மொழியையும் பாதிக்கும் விஷயமாகும். இனம், மொழி ஆகியவற்றின் எதிர்கால வாழ்வுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தலைவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டுத் தீர்த்து வைக்க வேண்டியது அவர்களின் கடமை.

வெளி மாகாணங்களில் தமிழ்ப் பாடசாலைகளிலோ, சிங்களப் பாடசாலைகளிலுள்ள தமிழ்ப் பிரிவுகளிலோ ஆசிரியர் பதவிகளில் காலி இடங்கள் ஏற்பட்டால், அந்த இடங்களை வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து ஆசிரிகளை மாற்றல் செய்தாவது உடனடியாக நிரப்பவேண்டும். இல்லையேல், அதைக் காரணமாகக் கொண்டு அப்பாடசாலைகளும், தமிழ்ப் பிரிவுகளும் திடீர் திடீரென மூடப்பட்டுவிடும். அவற்றில் படித்த தமிழ்ப் பிள்ளைகள் சிங்களம் படிக்கும்படி வற்புறுத்தப்படுவர்.

அம்மாதிரி சம்பவங்கள் சில ஏற்கனவே நிகழ்ந்துள்ளன. இதன் விளைவு நம் எதிர்காலச் சந்ததியினர் சிங்களவர்களாக மாறி, நம் இனமும் மொழியும் அழிந்துபோவது தான். தமிழ் மொழி அழிந்த பின்னர் தமிழாசிரியர்களுக்கு உத்தியோகம் ஏது?

எனவே வட இலங்கையிலிருந்து சென்று, தென்னிலங்கையிற் தமிழை வளர்க்கும் பணியிலீடுபட வேண்டியது வட இலங்கைத் தமிழாசிரியர்களின் தவிர்க்க முடியாத கடமை.

பாடசாலைகள் மூலம் சிங்களத்தைத் தமிழ் பேசும் இனத்தின் மீது திணிக்க அரசாங்கம் முயற்சி செய்கிறது. தலைமையாசிரியர்கள் 1964ம் ஆண்டு ஆரம்பத்தில் சிங்களத்தில் தேர்ச்சிபெற வேண்டுமென்றும் ஒரு சுற்றறிக்கை கூறுகிறது. ஆசிரியர்கள் இவற்றையெல்லாம் எதிர்த்துப் போராட வேண்டியிருக்க, சிறு சிறு பிரச்சினைகளுக்காக இழுபறிப்படுவதா?

தமிழ் பேசும் இனத்தின் விடுதலைப் போர் [illegible] காண்டிருக்கும் நெருக்கடியான வேளை இது. இப் போராட்டத்துக்கு ஆசிரியர்கள் தங்களின் முழு ஒத்துழைப்பையும் அளிக்கவேண்டிய தருணத்திலே இடமாற்றம் போன்ற சிறு பிரச்சினையின் மீது முழுக் கவனத்தையும் திருப்புவதா?

அபகரிக்கப்பட்ட அரசியல் உரிமைகளுக்காகவும், இதர அடிப்படை உரிமைகளுக்காகவும் ஆசிரியர்கள் ஒன்றுபட்டு [illegible]ளின் சொந்த இடமாற்[illegible]கொண்டு அதற்காக மட்டுமே போராடிக் கொண்டிருப்பது சரியன்று.

# திருமலை மக்கள் அளித்த தீர்ப்பு

## ஆட்சியினர்க்கு ஒரு பேரதிர்ச்சி

திருமலை அளித்த தீர்ப்பு பலருக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. வேறு பலருக்கு வேதனையை அளித்துள்ளது மற்றும் பலருக்கு விபரிக்க முடியாத பொருமை உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழ் பேசும் இனத்துக்குத் தொண்டு செய்வதையே தம் நோக்காகக் கொண்டு உழைத்து உடல் பொருள் ஆவி அனைத்தையும் தத்தம் செய்த திருமலைத் தீரன் இராசவரோதயம் விட்டுச் சென்ற பணியினைத் தொடர்ந்து நிறைவேற்ற தமிழரசுக் கட்சி திரு. மாணிக்கராசாவைத் தேர்தல் களத்துக்கு அனுப்பியது. திருமலை வாழ் தீந்தமிழ் பேசும் மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கி திரு. மாணிக்கராசாவை தங்கள் எண்ணங்களை நாடறிய, உலகறிய எடுத்தியம்பும் பிரதிநிதியாக, பாராளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளனர். இதனுல் பெருமையும் பெற்றனர்.

"தமிழரசுக் கட்சிக்கு மக்களிடத்திலுள்ள செல்வாக்கு மங்கிவிட்டது. தமிழ் பேசும் மக்கள் தமிழரசாரை இனி ஏற்கப்போவதில்லை. தமிழரசாரின் கொள்கைகளை மக்கள் வரவேற்கப் போவதில்லை" என்றெல்லாம் ஆரூடம் கணித்தவர்கள் திருமலைத் தீர்ப்பைக் கண்டு பேரதிர்ச்சிக்குட்பட்டுள்ளனர்.

பதவிதேடிப் பல்லிளித்து, பந்தம் பிடித்து பரிசுகள் பெற்று வாழ ஆசைப்பட்டு காட்டிக் கொடுக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டு கயமைத் தொழிலாற்றிய சிறுமதியாளர்களுக்கு திருமலை மக்கள் அளித்த தீர்ப்பு வேதனையை ஊட்டியிருக்கிறது

'திருமலையில் தமிழரசு தோற்றுப் போகும். ஆட்சியாளரின் அரும்பெரும் திட்டங்களனைத்தையும் தீவிரமாகச் செய்து முடித்துவிட வழிபிறக்கும் என்றெல்லாம் வாய்ப்பந்தல் போட்டு தங்கள் வயிறு வளர்க்க வழிவகைகள் தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு மக்களின் தீர்ப்பைச் கண்டு வேதனை உண்டாகாதிருக்க முடியுமா? தங்கள் திட்டங்கள் தவிடு பொடியாகிவிட்டதைக் கண்ணுற்றதும் அவர்கள் பொருமைத் தீயில் பொசுங்குவதை நன்கு அவதானிக்க முடிகிறது.

தமிழ் பேசும் சமுதாயம், தன்னைச் சூழ்ந்துள்ள இடர்களை நீக்கி ஏற்றம் பெற, இழந்த உரிமைகளைப்பெற்று இன்புற வழிவகைகளைத் தேடிச் செயலாற்றும் முழு அதிகாரத்தையும் பொறுப்பையும் தமிழரசுக் கட்சிக்கு வழங்கியிருக்கிறது. தன் மீது சுமத்தப்பட்ட பொறுப்பினைத் தட்டிக் கழிக்காது கடமையுணர்ச்சியுடன் செயலாற்றி வருகிறது கட்சி.

மக்கள் வைத்துள்ள நம்பிக்கை எள்ளளவும் மாருது கடமை புரியும் கொள்கைக் குன்றுகளைக் கொண்ட கட்சியைக் குறை கூறுவதையே தொழிலாகக் கொண்டவர்கள், எப்பொழுதும் ஏதாவது பிதற்றிக் கொண்டேயிருப்பார்கள். புல்லறிவால் புரட்டுவாதமிட்டுப் பிதற்றும் அவர்களுக்கு மக்கள் நல்ல பாடம் படிப்பித்து விட்டனர்.

### நம்பிக்கை ஊர்ஜிதம்

இடைத் தேர்தல்கள் நடைபெறும் போது, முன்பு வெற்றி பெற்ற அதே கட்சியைச் சேர்ந்த வேட்பாளர் மீண்டும் வெற்றி பெறுவாராஞல், மக்களின் எண்ணம் அங்கு வலுவடைந்திருக்கிறது, என்பதையே அது தெட்டத் தெளிவாகக் காட்டும். ஒருவருடைய கொள்கை பிடிக்கவில்லையென்ருல், அவர் சார்ந்த கட்சியின் கொள்கைகளை மக்கள் ஆதரிக்கமாட்டார்கள். தொடர்ந்து அதே கொள்கையுடைய ஒருவருக்கு மக்கள் தங்கள் வாக்குகளைக் கொடுக்கிருர்களென்ருல், அந்த நபர் சார்ந்துள்ள கட்சியின் கொள்கையில் மக்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளனர் என்பது வெளிப்படை.

> ### உரிமை பறிக்க மற்ருெரு சட்டம்
>
> மலையகத்திலே தமிழ் மக்கள் தங்களின் குழந்தைகளின் பிறப்பைப் பதிவு செய்யும் போது இலங்கைத் தமிழர்களென்று பதிவு செய்து விடுகின்றனராம். இதைத் தடுக்க அரசாங்கம் சட்டம் இயற்றப் போகிறதென்றும், உத்தேசச் சட்டத்தின் படி இலங்கையரென ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையில் கள்ளத்தனமாகப் பிறப்புகளைப் பதிவு செய்து கொள்பவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படுமென்றும் தெரிகிறது.

திருகோணமலை தமிழரசுக் கட்சியின் கோட்டையாக விளங்கியிருக்கிறது. கட்சியின் ஆரம்பகாலம் தொடக்கமே இந்த ஆதரவு பொழுதொரு வண்ணமாக வளர்ந்து வந்திருக்கிறது. தமிழரசு வேட்பாளராகப் பலமுறை போட்டியிட்டு அமோக ஆதரவுடன் வெற்றி பெற்ற திருமலைத் தீரர் இராசவரோதயம், 1960-ம் ஆண்டு மார்ச் மாதமும், அதே வருடம் ஜூலை மாதமும் நடைபெற்ற இரு தேர்தல்களிலும் குறிப்பிடத்தக்க மேலதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுருர். திருமலை வாழ் தமிழ் பேசும் மக்கள் தமிழரசுக் கட்சியின் கூட்டாட்சிக் கொள்கைக்கு எவ்வளவு தூரம் ஆதரவு நல்கியுள்ளனர் என்பதை அவருடைய வெற்றி ஆணித்தரமாக ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறது.

1960 மார்ச் மாதத் தேர்தல் முடிவு:

திரு. என். ஆர். இராசவரோதயம் (தமிழரசு) 8872

திரு. ஆர். எம். ஜி. தஸ்தகீர் (சுயேச்சை) 1311

திரு. ஏ. பியதாசா (ல. சு கட்சி) 1265

திரு. எஸ். லால் குணரத்தின (எல்.பி.பி.) 993

மேலதிக வாக்குகள்: 7561

அதே வருடம் ஜூலை மாதத்தில் நடந்த தேர்தல் விபரம்:

திரு. என். ஆர். இராசவரோதயம் (தமிழரசு) 8649

திரு. ஈ.ஆர்.எஸ்.ஆர். குமாரசாமி (சு. கட்சி) 4614

திரு.கே.பி. ஆரியதாச (எம். ஈ. பி.) 67

மேலதிகம்: 4038

### பொறுப்பு வழங்கல்

அகால மரணமடைந்து அமரராகிவிட்ட திரு. இராசவரோதயத்தின் இடத்துக்கு லாயக்கானவர் திரு. எஸ். எம். மாணிக்கராசா என்பதை அலசி ஆராய்ந்து உணர்ந்த தமிழரசுக் கட்சி, தனது வேட்பாளராக அவரையே நிறுத்தியது.

திருமலைப் பிரதேசத்தை, அரசாங்க அதிகாரமும் உதவியும் பெற்று வளைத்துப் பிடிக்கப் பார்க்கும் இந்நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தின் கோரப் பிடியிலிருந்து மீட்க வேண்டிய பொறுப்பு, தமிழரசுக்கட்சியைச் சார்ந்தது. மொத்தத்தில் இலங்கையிலிருக்கும் தமிழ் பேசும் சமுதாயத்தின் உரிமைகள் அனைத்தையும் அபகரித்து விட முயலும் ஆணவ அரசின் கொட்டத்தை அடக்கி, இனத்தின் முன்னேற்றத்துக்கான எல்லா நடவடிக்கைகளையும் சீராகச் செய்து முடிக்க வேண்டிய பொறுப்பைத் தமிழரசுக் கட்சியே ஏற்க வேண்டும் என்ற அதிகாரத்தைத் தமிழ் பேசும் மக்கள் கட்சிக்கு வழங்கியுள்ளனர்.

தமிழ் பேசும் மக்கள், தமிழ் உரிமைப் போராட்டத்துக்காக ஒன்றுபட்டிருக்கின்றனர் எனபதைத் திருமலைத் தேர்தல் வெளியுலகிற்கும் ஆட்சியாளருக்கும் எடுத்துக்காட்டிவிட்டது.

சிங்கள ஆதிக்க வெறி பிடித்த வகுப்புவாதிகள் வெட்கித் தலைகுனியும் அளவுக்குத் திருமலை மக்கள் தங்கள் கருத்தைத் தெளிவாக்கி விட்டனர். ஆட்சியாளருக்கு அதிர்ச்சியாகவே திருமலைத் தேர்தலின் முடிவுகள் வெளியாகியிருக்கின்றன. வெறும் வெற்றியாகவன்றி பெரும் வெற்றியை ஈட்ட மக்கள் பாடு பட வேண்டும்—வாக்களிக்கவேண்டுமென்று கேட்டிருந்தோம். மக்கள் உடன்பட்டு உறுதியை வெளிக் காட்டிவிட்டனர்.

திருமலை பாதுகாக்கப்பட்டால்தான் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும். இதோ! தேர்தல், திருமலையைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தமிழரசுக் கட்சிக்கே அளித்துவிட்டது.

சிங்கள ஆக்கிரமிப்புத் திட்டத்தை அடிசாய்த்துவிட்டுப் புராணச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் மிக்க திருக்கோணேசரின் உறைவிடத்தைக் காக்கும் பணியினையும் தமிழரசுக் கட்சிக்கே திருமலை மக்கள் தேர்தல் முடிவின் மூலம் கொடுத்துள்ளனர்.

திருகோணமலை வாழ் இஸ்லாமிய சகோதரர்களும் இத் தேர்தலில் ஒரேமுகமாக நின்று, தமிழரசு வேட்பாளரை வெற்றி பெறச் செய்துள்ளார்கள்.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சீனரிடம் இந்திய நாணயம் இருந்ததேன்?

## சுதந்திரன் செய்தி ஊர்ஜிதமாகிறது

கொழும்பு கும்பெனித்தெருவிலிருக்கும் ஒரு சீனரிடமிருந்து ஏராளமான இந்திய நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. கப்பல் ஒன்றில் வேலை பார்ப்பவரும் இந்தியாவில் வசிப்பவருமான சீனரிடம் ஏராளமான அமெரிக்க, பிரிட்டிஷ் நாணயங்கள் சிக்கியதைத் தொடர்ந்து பல செய்திகள் அம்பலமாகியுள்ளன.

வேறோர் நாட்டிலிருந்து இந்தியப் போலி நாணயங்கள் இலங்கை வழியாகக் கடத்தப்படுகிறது என்றும், அந்நாட்டுக்குச் சாதகமான ஒரு ஒற்றர்படையை அமைக்கவே இந்த நாணயக்கடத்தல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரியவந்திருப்பதாகச் சுதந்திரன் 20-10-63-ல் வெளியிட்டிருந்தது இப்பொழுது சுங்க இலாகா வெளியிட்டுள்ள தகவல் இச் செய்திக்குச் சான்று பகருகிறது.

இலங்கைச் சுங்க இலாகாவினர் ஒரு கப்பலில் திடீர் சோதனை நடத்திய போது அக் கப்பலில் வேலை செய்பவரும், இந்தியாவில் வசிப்பவருமான ஒரு சீனரிடம் ஏராளமான அமெரிக்க, பிரிட்டிஷ் நாணயங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தங்கக் கட்டிகளும் அவரிடம் ஏராளமாக இருந்தனவாம்.

கொழும்பு கும்பெனித் தெருவில் வசிக்கும் ஒரு சீனரிடமிருந்து ஏராளமான இந்திய ரூபாய் நோட்டுகளும் பல ஆட்சேபகரமான தஸ்தாவேஜுகளும் அகப்பட்டிருப்பதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

இந்தியாவுக்கும் வேறொரு நாட்டுக்கும் இடையில் பல அந்தரங்கச் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள ஒரு குழுவினர் இலங்கையை ஒரு கேந்திரஸ்தானமாகப் பாவித்து வருகின்றனர் என்பது இப் பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதே செய்திகளைப் பல முறை 'சுதந்திரன்' முன்பு அம்பலப்படுத்தியிருக்கிறது. சுதந்திரனின் உண்மைச் செய்திகளனைத்தையும் 'பொய்யானவை; புனைந்துரைக்கப்பட்டவை,' என்று கொம்யூனிஸ்டு ஏடுகள் திட்டித் தீர்த்தன. ஆனால் இன்று உண்மை வெளியாகி விட்டது.

ஒரு அன்னியநாடு ஏராளமான இந்திய ரூபாய் நோட்டுக்களைக் கள்ளத்தனமாக அச்சிட்டு இலங்கையில் நடமாட விட்டுள்ளது என்றும், அவற்றை இந்தியாவுக்குள் அனுப்பி வைக்க இலங்கையில் பல வசதிகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளது என்றும், நாம் கடந்த 20-10-63 சுதந்திரனில் வெளியிட்டிருந்தோம்.

இந்தியாவில் தனக்குச் சாதகமாக இருக்கவல்ல ஒற்றர் படை ஒன்றினை ஏற்படுத்தவே அந்த நாடு இவ்வித முயற்சியிலீடுபடுகிறது என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

சுங்க இலாகாவின் கண்டுபிடிப்புகள் அனைத்தும் சுதந்திரனின் செய்தியை ஊர்ஜிதமாக்குகின்றன.

### வெளியாகிய உண்மைகள்

25-11-62 சுதந்திரன் முதல் பக்கத்திலேயே பல செய்திகளை வெளியிட்டிருந்தது. அச் செய்தியின் சில பகுதிகளை இங்கே தருகிறோம்:

......இந்தியப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அநேக இரகசியங்கள் இலங்கை வழியாகச் சீனவுக்கு அனுப்பப்படுகிறதென்று கூறப்படுகிறது. எந்தச் செய்தியையும் இங்கிருந்து தாராளமாகத் தடையின்றி சீனவுக்கு அனுப்பலாம்.

இலங்கையில் சீனருக்கு ஓர் ஐந்தாம் படை மத்தியக் காரியாலயம் ஒன்று இருப்பதாகவும், இலங்கைக் கொம்யூனிஸ்டுகளே அந்தக் காரியாலயத்தை இயக்குவதாகவும், நம்பகமான செய்தி கிடைத்துள்ளது.

அதே தினத்தில் 9-ம் பக்கத்திலும் பல செய்திகளை முன்கூட்டியே 'சுதந்திரன் கொடுத்திருக்கிறது:-

"...இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி தலைமைப் பீடமே ஆட்டம் காணும் அளவுக்கு கொம்யூனிஸ்ட் கட்சிக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கோட்டைக்குள்ளேயே குத்தும் வெட்டும் ஏற்பட்டுவிட்டது."

### மற்றுமொரு உண்மை

சுதந்திரனின் மற்றுமொரு செய்தி உண்மை என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

10—11—63, 17—11—63 ஆகிய திகதிகளில் வெளியாகிய சுதந்திரன் பத்திரிகையில் 'சந்தி'யில் மட்டக்களப்புக் கொம்யூனிஸ்ட் கட்சியினர் சண்முகதாசனின் கருத்துக்களையும், சீனக் கொம்யூனிஸ்ட் கட்சிக் கொள்கைகளையுமே ஆதரிக்கின்றனர் என்பதையும் வெளியிட்டிருந்தோம். கொம்யூனிஸ்ட் ஏடுகள் இச்செய்திகளை வன்மையாகக் கண்டித்துச் செய்திகளை மறுக்கவும் முன்வந்தன. ஆனால் இன்று மட்டக்களப்புக் கொம்யூனிஸ்ட் கட்சிக் கிளையின் பத்திரிகை அறிக்கைகள், யார் ஏமாற்றுக்காரர்கள் என்பதைப் பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்திவிட்டன.

தாங்கள் சீனச் சார்புடையவர்களே - சண்முகதாசனை ஆதரிப்பவர்களே என்பதை உத்தியோகபூர்வமாக வெளியிட்டு விட்டார்கள், மட்டக்களப்புக் கொம்யூனிஸ்டுகள்.

## சுதந்திரக்......

(-1ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி கமலா டி சில்வாவின் கணவரான டாக்டர் டி சில்வா இறுதி மூச்சுவரை சுதந்திரக் கட்சியை எதிர்த்து வந்தவரென்றும் அவரது மனைவியைக் கட்சி ஆதரிப்பது கட்சிக்கே அவமானமாகுமென் [illegible] கோஷ்டியினர் பிரதமருக்குச் சுட்டிக் காட்டியுள்ளனராம்.

## தேர்தல் இடாப்புகள்

பாராளுமன்றத் தேர்தலுக்கான இடாப்புக்கள் டிசம்பர் மாதம் 2ம் திகதி முதல் 30ம் திகதி வரை கொழும்பு மாநகர சபைக் கட்டிடம், கல்கிசை மாநகர சபைக் கட்டிடம், கொழும்பு பதிவு முகாமையாளர் காரியாலயம், பிரதான தபால் நிலையங்களிலும் வெளியூர்களில், கச்சேரி, காரியாதிகாரி காரியாலயங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், கிராம சேவையாளர் காரியாலயங்கள் ஆகியவற்றிலும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

தமிழ் பேசும் மக்கள், வாக்களிக்கத் தகுதியுடைய அனைவரும் இந்தப் பட்டியல்களைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டியது அவசியமாகிறது.

அடுத்த வருட ஆரம்பத்திலேயே பொதுத் தேர்தல் வந்துவிடக் கூடுமாதலால், இடாப்புகளில் தங்கள் பெயர்களிருப்பதை உடனடியாக அவதானித்தாக வேண்டும். இல்லையேல், உடனடியாகத் தங்கள் பெயர்களை இடாப்புகளில் சேர்ப்பதோடு, ஆட்சேபகரமான பெயர்கள் இருந்தால், உரிய பத்திரங்கள் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஆட்சேபனை தெரிவிக்க வேண்டும்.

## திருமலை மக்கள்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமலை இம்முறை இடைத் தேர்தலில் இயற்கைச் சூழல்கள் இடைஞ்சல்கள் பல ஏற்படுத்தியிருந்தும் கூட, ஆட்சியாளருக்கும், சிங்களவகுப்புவாதிகளுக்கும், காட்டிக் கொடுப்போருக்கும், எத்தர்களுக்கும் ஏமாற்றுக் காரர்களுக்கும் மக்கள் நல்லபாடம்படிப்பித்திருக்கிறார்கள் என்பது தெளிவாகியுள்ளது.

## ஆளும்கட்சியுள் அமளி துமளி

ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குள் 'பலவேகயா' சண்டைகளும், பிரதேசச் சச்சரவுகளும் மலிந்து வருவதாக நம்பகமான செய்திகள் கிடைத்திருக்கின்றன.

கண்டியச் சிங்களவர்களினுடைய நலன்களைப் பாதுகாக்கவே பல சங்கங்கள் உண்டாகியுள்ளன. ஆனால் கரை ஓரத்தைச் சேர்ந்த சிங்களவருடைய நலன்களைக் கவனிக்க எந்தச் சங்கங்களோ, ஆட்சியாளர்களோ முன் வருவதாகவில்லை. அரசாங்க உத்தியோகங்களின் உயர் பதவிகள் எல்லாம் கண்டியச் சிங்களவருக்கே அளிக்கப்பட்டு விடுகின்றன. அவர்களுக்கு வழங்கப்பட்டு எஞ்சிய சிறு உத்தியோகங்களே கரையோரத்தவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன.

இத்தகைய அநீதி முறைகளைக் கண்டித்து, கரையோ மக்களின் நலன்களைப் பேணுவதற்காக ஒரு 'பலவேகயா' ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கரையோர மக்களின் நலவுரிமைகளைப் பேணுவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள பலவேகயாவின் பிரதிநிதியான ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அண்மையில் கருத்து வெளியிடும்போது, தங்களுக்கு மலைநாட்டுப் பகுதியில் சென்று குடியேறிய பல சிங்களக் குடும்பங்கள் ஆதாவு நல்கிவருவதாகவும், நாவலப்பிட்டி, குருநாகலை, பலாங்கொடை போன்ற இடங்களிலும் கிளைகள் அமைக்கப் போவதாகவும் கூறினர்.

திரு. எட்மண்ட் சமரக்கொடி இப் பலவேகயாக்களையிட்டுக் கருத்து வெளியிடும் போது, 'இவையெல்லாம் பிற்போக்கு சக்திகளின் வேலைகள். இடதுசாரி முன்னணியின் வேகத்தைக் கண்டு பயந்து ஆட்டம் போடுகிறார்கள். எங்கள் சக்தி மேம்பட்டால், இந்தப் பலவேகயாக்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து "பலவேகயா முன்னணி" ஒன்றை ஏற்படுத்திவிடவும் கூடும்," என்று கூறியிருக்கிறாராம்.

சிறு சிறு காரணங்களை வைத்துக்கொண்டே 'சிதறிவிடுவோம்' என்று பிரதமருக்குப் பயங்காட்டும் பல ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குள்ளும் 'இந்தப் 'பலவேகயா' பித்துப் புகுந்து கொண்டு ஆட்டிப் படைக்கிறதாம்.

அண்மையில் நடந்தேறிய மந்திரிசபைக் கூட்டத்திலும் 'பலவேகயா', கண்டிச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் போன்ற பதங்கள் அடிக்கடி ஆக்ரோஷமான நிலையில் பாவிக்கப்பட்டதாகவும் பிரதேசச் சண்டைகள் ஏற்பட்டதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இத்தகைய காரணங்களினாலேதான் சபாநாயகர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது ஆளும் கட்சிக்கு எதிராக வாக்களித்த மூன்று எம் பிக்கள் மீதும் நடவடிக்கை எடுக்க முடியாது போய்விட்டதாம்.

## பிரதமருக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாந்தி எடுத்து உணவு உட்கொள்ள முடியாமல் நோயுற்றார். இவர் நிலைமை இப்படி இருந்தும் பொலீசார் 24ம் திகதி அவர் நிலைமை மோசமாகும் வரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பவுமில்லை; ஏதும் சிகிச்சை கொடுக்கப்படவுமில்லை. அவர் 24ம் திகதி இரவு ஆஸ்பத்திரியில் இறந்தார். நோய்வாய்ப்பட்டவுடன் சிகிச்சை கொடுக்க பொலீசார் ஏற்பாடு செய்திருந்தால் திரு. குப்புசாமியின் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம். பொலீசாரின் நடத்தை பற்றி விசாரணை எடுக்கும்படி பொதுமக்கள் வற்புறுத்துகின்றனர். உடன் நடவடிக்கை எடுக்கவும்."

## சிங்கள அமுலுக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழியைக் கண்டுபிடிக்க அரசாங்க சிங்கள எழுதுவினைஞர் சங்கம் முயற்சி செய்து கொண்டிருக்கிறதாம்'

### 138 பேர் அனுப்ப ஏற்பாடு

இதற்கிடையே மென்மேலும் சிங்கள அரசாங்க ஊழியர்களை வட, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

யாழ்ப்பாணம், திருமலை, மன்னார், மட்டக்களப்பு,வவுனியா ஆகிய ஐந்து பிராந்திய அரசாங்க அதிபர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, டிசம்பர் 15ந் திகதி தொடக்கம் 31ந் திகதிக்குள் 138 சிங்கள ஊழியர்கள் அந்த ஐந்து பிராந்தியங்களுக்கும் அனுப்பப்படுவர் என்று தகவல் கிடைத்துள்ளது. அவர்களுக்கு விசேட சேவைச் சலுகைகள் அளிக்கப்படுமாம்.

### சிங்களத்தில் முடியாது

உப்பு இலாகாவின் அலுவல்கள் சிங்களத்தில் செய்வது சாத்தியமில்லையென்று உப்புக் கொமிஷனர் திரு.பி. ஜே. ஜே. அமிர்தலிங்கம் அரசாங்கத்துக்கு அறிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

உப்பளம் பெரும்பாலும் தமிழ் [illegible] இருப்பதாலும் உப்பு இலாகா ஒரு தொழில் நுட்ப இலாகாவாக இருப்பதாலும் அதன் அலுவல்களைச் சிங்களத்தில் செய்வது கடினமென அவர் தெரிவித்துள்ளாராம்.

### வடக்கில் வெற்றிவிழா?

ஜனவரி முதலாம் திகதி சிங்களம் அமுலுக்கு வருவதை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் ஒரு வெற்றி விழா நடத்த ஏற்பாடு செய்யப்படுவதாக அறியப்படுகிறது. இந்த விழா நயினாதீவு நாகவிகாரையில் நடைபெறுமென்றும், வட பகுதியில் கடமையாற்றும் சிங்கள அதிகாரிகளும், அங்குள்ள முப்படைகளைச் சேர்ந்த சிங்களவர்களும் இக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வார்களென்றும், வட இலங்கை அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா இவ்விழாவில் பேசுவார் என்றும் தெரியவருகிறது.

சிங்கள ஊழியர்களில் ஒரு சாரார் இம்மாதிரி வெற்றி விழாக் கொண்டாடுவதைக் கண்டிக்கின்றனர். தமிழர்கள் மீது சிங்களம் திணிக்கப்படுவதை வெற்றி விழாவாக வட பகுதியிலேயே கொண்டாடுவது வட இலங்கை மக்களுக்கு ஆத்திரமூட்டும் செயலாகும் என்று அவர்கள் கூறுகின்றனராம்.

சிங்கள அமுலை ஆடம்பரமின்றி அமைதியாகவே நடத்த வேண்டுமென்று அவர்கள் அரசாங்க அதிபருக்கு அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

உங்கள் கவலை என்ன?



★ கடன் தொல்லையா? கஷ்ட நிலையா?
★ காதலில் வெற்றி பெற வேண்டுமா?
★ இல்லற இன்பமா? குடும்ப சச்சரவா?
★ வழக்குக் கஷ்டமா உத்தியோக உயர்வா?
★ பரீட்சையில் சித்தி பெற வேண்டுமா?

அரசாங்க உத்தரவு பெற்ற மந்திராச்சாரியார்.

பி.எம். திசாநாயக

அருத எண்ணெய் அலுவலகம் கம்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நிறைவு

எழுதியவர்: நடமாடி

பெரியசாமி அங்குமிங்குமாக ஆவேசத்தில் ஓடித்திரிகிருன். அவனுக்கு நெஞ்சம் பிளப்பது போன்ற உணர்வு. நெஞ்சு பிளக்காமல் வேறு என்னதான் செய்யும்? அவனுக்குப் பைத்தியம் பிடிக்காமல் போனதே ஒரு விசித்திரந்தான்! என்ன செய்வான் அவன்? அவனுக்கு நிம்மதி வேண்டும்! நிம்மதி காண்பதற்காகப் பானையிலே கிடந்த கள்ளை அப்படியே பிழாவில் ஊற்றி ஒரே இழுவையாக இழுக்கிருன். அதைக் குடித்தால் துன்பத்தை மறந்திருக்கலாமென்பது அவன் எண்ணம். நஞ்சுண்டு கிடப்பது போலக் கள்ளைக் குடித்துக் கிடக்கிருன்.

பெரியசாமி பிறந்த மண்ணிலே பிழைக்க வழியில்லாமல் கள்ளத் தோணியில் இங்கு வந்தவன். இந்தியாவிலிருந்து இங்கு வந்தால் சுகபோகத்தில் வாழலாமென எண்ணியிருந்தான். இங்கு பிறந்து வளர்ந்து படித்தவர்களுக்கே வேலை கிடைக்காமலிருக்கும் பொழுது, அங்கிருந்து வரும் பெரியசாமிக்கு வேலையா கிடைக்கப் போகிறது? வெள்ளைக்காரனின் காலத்தோடு முடிவடைந்த சமாச்சாரம் இது என்பது பெரியசாமிக்கு இங்கு வந்த பிறகுதான் புரிந்திருக்கும்!

காங்கேசன்துறைக் கடற்கரையிலே, விடியற்சாம வேளையிலே, கழுத்தளவு தண்ணீரில் இறங்கியவன் உயிர் தப்பிப் பிழைத்ததே. அவன் எப்பொழுதோ செய்துவிட்ட புண்ணியந்தான்! கூட வந்தவர்களிற் பலர் கரை சேர்ந்ததையே அவன் காணவில்லை!

கரை வந்து சேருமுன் எங்கோ வெடிச் சத்தம் கேட்டது. காவலர் சிலர் வருவதையும் கண்டான். முன்பின் தெரியாத இடத்தில் பெரியசாமி ஓடினான். ஓடியவன் கண்ணில் எதிர்ப்பட்ட ஒரு குடிசைக்குள் நுழைந்தான். "ஐயோ கள்ளன்" என்ற அவலக் குரல் கேட்டு அடியுற்ற மரம் போல விழுந்து விட்டான்.

"காப்பாற்றுங்கள், சுடுகிருர்கள்.........!" திரும்பத் திரும்ப இதே வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வெளிவந்தன.

அந்தக் குடிசையிலிருப்பவன் கந்தன் நடை தளர்ந்து, நரை விழுந்த போதிலும், அவன் உடல் மட்டும் இறுக்கமாக, கட்டமைந்ததாகக் காணப்பட்டது. அவன் உழைப்பாளி! காலைக் கோழி கூவுகின்ற நேரத்திலே எழுந்து சுரைக் குடுவும் கையுமாகத் தளைநாரைத் தலையிலே மாட்டிக் கொண்டு, இயனக் குட்டானிலேயுள்ள பாளைக் கத்தி 'இடக் இடக்' கென்று ஒலி கிளப்ப, வடத்தை உத்தரியம் போலக் கழுத்திலே போட்டுக் கொண்டு அவன் போகும் விதமே ஒரு தனி ரகமானது. ஆமாம்! கந்தன் ஒரு சீவல் தொழிலாளி.

சீவலுக்கென்று வெளிக்கிட்டு குடிசை வாசலுக்கு வந்து குனிந்த கந்தன் யாரோ ஓடி வருவதைக் கண்டு 'கள்ளன்' என்று அலறியே விட்டான். எந்த நெஞ்சுரம் படைத்தவர்களுக்கும் எதிர்பாராத விதவிதமாக இப்படி நிகழுமானல்...? இப்பொழுது பாளைக் கத்தியைக் கையில் எடுக்கிருன்......!

'படீர்'—குண்டு ஒன்று கந்தனின் மார்பில் பாய்கிறது. 'ஐயோ' என்ற குரல் ஒலிக்கிறது. கந்தன் சுருண்டு விழுகிருன். பெரியசாமி செத்தைக்குள் நகருகிருன். 'அப்பு என்று கதறுகிருள் வள்ளி. வெற்றிச் சிரிப்போடு செல்லுகின்றனர் கரையைக் காவல் செய்து கொண்டு வந்த பட்டாளத்தினர்.

வள்ளி பதினறு முழச் சேலையைச் சுற்றிக் கட்டியிருக்கிருள். மேலே ஒரு சட்டை. கைகளிலே இரண்டு ஓட்டுக் காப்புக்கள். காதுகளுக்கு வெறும் ஈர்க்கில் குச்சிகள் சொருகப்பட்டிருக்கின்றன. வயது முப்பத்தைந்து மதிக்கலாம். ஆனலும் இன்னமும் கலியாணஞ் செய்யாத கன்னி அவள். இன்னமும் சில ஆண்டுகள் சென்றுல் கன்னியாகவே கிழவியாகி விடுவாளோ?

அவள் கன்னங்கள் வழவழப்பானவையல்ல! குழி விழுந்து ஒட்டிப்போயிருந்தன. அவள் மார்பகங்கள் விம்மிப் புடைக்கவில்லை! மடிந்து தொங்குகின்றன. இவை இயற்கையின் கோட்பாடா?

நித்திரைச் சோம்பலில் எழுந்து வந்த வள்ளி, இரத்த வெள்ளத்தின் நடுவே கிடந்த கந்தனை, மங்கி மங்கி எரியும் குப்பி விளக்கொளியிலே கண்டு விட்டாள். 'அப்பு அப்பு...' அவலக்குரல் கொடுக்கிருள் அவள்.

கந்தனுக்கு ஒரே மகள் வள்ளி! அவள் பிறந்த ஒரு மாதத்தில் ஆத்தையைத் தின்று விட்டாள். பருத்தித்துறைப் பனங்கட்டியைக் கரைத்துக் கொடுத்து அவளை வளர்க்க அவன் பட்ட பாடு......! புட்டியிலே பால் மாவு கிடைக்கிறது என்ற விவகாரமே கந்தனுக்கு அப்பொழுது தெரியாது! தெரிந்திருந்தாலும் கூட, அவனது பொருளாதார நிலை அதற்கெல்லாம் இடங்கொடுத்திருக்க மாட்டாது!

பெரியவளாகிவிட்ட வள்ளிக்கு ஒரு கலியாணத்தைச் செய்து வைக்கலாமென்று பாடுபட்ட கந்தனுக்குக் கிடைத்தது வெறும் ஏமாற்றந்தான்! இருப்பதற்கு ஒரு குடில் வைக்கும் இடந்தானுஞ் சொந்தமாக இல்லாத வள்ளியை எவன்தான் ஏற்றுக்கொள்ள முன்வருகிருன்? அல்லது அவள் வாட்டசாட்டமாகவாவது இருக்கிருளா? இத்தகைய சூழலில் ஊறிவிட்ட யாழ்ப்பாணத்தில் கன்னிப் பெண்ணுக வள்ளி கிழவியாகிக் கொண்டிருக்காமல் வேறு எப்படித்தான் இருக்க முடியும்?

அந்தப் பாழாய்ப் போன பட்டாளத்தார் அங்கு வந்து வாடிவிட்ட பிறகு, கந்தன்பாடு பெருந் திண்டாட்டமாகி விட்டது. அவன் இறக்கிய கள்ளு முழுவதையும் கேள்வி முறையில்லாமல் குடித்துவிட்டுக் காசு கொடுக்காமலே போய்விடுவார்கள். காசு கேட்டால் முட்டிகளைக்கூட நொருக்கி விடுவார்கள். இது கந்தனுக்கு மட்டுமல்ல, அந்த வட்டாரத்திலுள்ள சீவல் தொழிலாளர்கள் அத்தனை பேர்களுக்கும் நாளுக்கு நாள் நடைபெறும் குழப்பம்!

இப்படி வந்த ஒரு பட்டாளத்தானுக்கும் வள்ளிக்குமிடையில்...!காதலா அது? கட்டி வைத்த காளைமாடு அவன்! கூண்டுக் கிளி வள்ளி! இரண்டுக்கும் விடுதலை கிடைத்தால்...?

கந்தனுக்கு வள்ளியின் போக்கு பிடிக்கவில்லை! வள்ளிக்குக் கந்தனின் உபதேசம் காதில் எட்டவில்லை! கண்டித்தான் கந்தன். அசட்டை செய்தாள் வள்ளி! பெற்று வளர்த்தவனுக்கு முன்னல், கணவனும் மனைவியும் போல, ஒரு காட்டுமிராண்டிப் பட்டாளத்தானுடன் மகள் கொஞ்சிக் குலாவுகின்ருளென்ருல்...?

தருணம் பார்த்து நின்ற பட்டாளத்தான், பெரியசாமி ஓடி வருவதைக் கந்தன் என்று எண்ணிச் சுட்டான்! கந்தனென்ருல் என்ன? வேறுயாராயிருந்தால்தான் என்ன? எதிரியை முடிக்க வேண்டும்! அதுதானே அவர்களுக்குப் போதிக்கப்பட்ட புனிதமான போதனை!

கந்தன் குளறினன், அவன் குரல் வெளியே வரவில்லை! பெரியசாமி செத்தைக்குள்ளிருந்து வெளிவந்தான், வள்ளி திடுக்கிட்டாள். நடந்ததைக் கூறித் தனக்கு உயிர் பிச்சை கொடுக்கும்படி மன்ருடினன் பெரியசாமி!

கந்தனின் சாவிலே வள்ளியின் வாழ்வு மலர்ந்தது. வாடிய பயிருக்கு மாரியானன் பெரியசாமி. இருவரும் கணவனும் மனைவியுமானர்கள்.

பெரியசாமி இப்பொழுது ஒரு சீவல் தொழிலாளி. கந்தனின் தொழிலுக்கு வாரிசாகிவிட்டான் அவன்.

இரு உயிர்களின் ஒன்றுபட்ட இணைப்பே கலியாணம் என்றிருந்தான் பெரியசாமி. பெரியசாமியின் உயிர் வள்ளியின் மீது படிந்திருந்தது. அவளுக்குத் தலையிடி யென்ருல், அது, அவனுக்கு இடிப்பது போலவே அவதிப்படுவான்.

அன்று விடியற்காலை, வேளையோடு சீவலை முடித்துக்கொண்டு வந்த பெரியசாமி குடிசைக்குள் குனிந்த போது கண்ட காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது. பட்டாளத்தானின் காற்சட்டை ஒன்று செத்தைக்கு மேல் கிடந்துகொண்டு பெரியசாமியைப் பார்த்துச் சிரிப்பது போன்றிருந்தது. அதன் பக்கத்திலே கிடந்த துப்பாக்கி, 'எட்டிப் பார்த்தாயோ, உன்னைச் சுட்டுத் தொலைத்து விடுவேன்' என்று எச்சரிக்கை செய்து கொண்டிருந்தது.

பெரியசாமிக்குத் தலை சுழற்றியது. அப்படியே முற்றத்து மணலிலே படுத்து விட்டான். அவன் அனதை! அவனுகு எதையும் கேட்கும் உரிமை கிடையாது! மண்டை சிதறுவது போன்ற உணர்ச்சியில் அப்படியே கிடந்தான்.

சூரிய ஒளியின் சூடு பொறுக்கமுடியாமல் பெரியசாமி எழுந்தான். வள்ளி ஏதோ அடுப்பில் வைத்து எரித்துக்கொண்டிருந்தாள். யாருக்காகச் சமைக்கிருள்? யாருடைய உழைப்பிலே வாழுகிருள்?—இந்த எண்ணம் பெரியசாமியின் உள்ளத்தைக் கொதிக்க வைத்தது. அந்தக் கொதிப்பில், அடுப்பிலே கொதித்துக்கொண்டிருந்த குடுவையைத் தூக்கி நிலத்திலே மோதிவிட்டான்.

"பாழாய்ப் போக! உன் நெஞ்சு முறிய! யார் வீட்டுச் சொத்தென்று இதை உடைத்தாய்? நீ பனையாலே விழ...!"

"நான் பனையாலே விழுந்தால் நீ நினைத்தவர்களுடன் கூடித் திரியலாம்! அப்படித்தானே?"— கோபம் பெரியசாமியின் கண்களை மறைத்தது. "பளீர், பளீர்". கண்ணென்றும் மூக்கென்றும் பார்க்காமல் பெரியசாமியின் இரு கைகளும் வள்ளியின் முகத்திலே விளையாடின!

"ஐயோ, என்னைக் கொல்லுகிருன்...!"

"கொல்லுகிறேன? நீ செத்தேயாக வேண்டும்!"—வள்ளியின் தலைமயிர் பெரியசாமியின் கையிலே இருந்தது. "நீ செத்தே போ!"—ஒரு சுழற்றுச் சுற்றிவிட்டான் பெரியசாமி. வள்ளி பம்பரமானள்.

ஒரு மூலையிலே கிடந்து விம்மி விம்மிச் சளியைச் சீறிக்கொண்டிருந்தாள் வள்ளி. பெரியசாமி ஆத்திரமடங்குமட்டும் கள்ளை வார்த்துக் குடித்துவிட்டு மயங்கிப் போய்க் கிடந்தான்!

சூரியன் மேற்குக் கரையில் மறைந்து கொண்டிருந்தான். கண் விழித்த பெரியசாமி அன்று நடந்த நிகழ்ச்சிகளை மனதிலே ஓடவிட்டுக் கொண்டு, சுரைக் குடுவு கையிலே தொங்க, வடம் கழுத்திலே நெளியச் சீவலுக்காக நடந்து கொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து வள்ளியும் அவன் கண்ணில் படாத வண்ணம் போய்க் கொண்டிருந்தாள்!

பெரியசாமியின் தளைநார்ச் சத்தம் உயர்ந்த பனையிலே 'கிறீச் கிறீச்' என ஒலி கிளப்புகிறது. உச்சிக்குப் போய்விட்டான். கட்டியிருந்த கிட்டியின் மேல் ஏறி நின்று வடத்தை மாட்டிக் கொண்டு பாளையிலிருந்து முட்டியைக் கழற்று

(15-ம் பக்கம் பார்க்க)


'சுதந்திரன்'

புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.

ஒரு வருடம் ரூபா 14-00

ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி 'சுதந்திரன்'





பாட்டாளி முதல் பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது!

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

தந்தி தாமரை


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ராணுவம்-பொலீஸ் வெறியாட்டம் வலுக்கிறது

## கள்ளத்தோணி வேட்டைக்குதவும் காட்டுமிராண்டிச் சட்டம்

## சிறுபான்மையோரை நசுக்க நாசத்திட்டம்

கள்ளத்தோணியில் வந்து குடியேறுபவர்களைத் தடுக்க விசேட அதிகாரங்களை, குடியேற்ற வெளியேற்றச் சட்டத்தின் திருத்தம், பொலிசாருக்கும் ராணுவத்தினருக்கும் வழங்கியது. 'குரங்கின் கையிலே கொடுக்கப்பட்ட நெருப்பைப் போல்' இன்று இந்தச் சட்டம் தமிழ் பேசும் மக்களை வாட்டி வதைக்க ஆரம்பித்துவிட்டது. கேள்வி முறையின்றிக் கைது-விசாரணை எதுவுமின்றி மறியல்-மிருகத்தனமான தாக்குதல்-மனிதாபிமானமற்ற தீமை-இவை அத்தனையும் இன்று தமிழ் பேசும் மக்களின் இன உணர்வை அடக்கி ஒடுக்கி, சிங்கள ஏகாதிபத்திய வெறியை நிலை நாட்ட ஆட்சியாளருக்கு உதவுகின்றன.

"புத்த தர்மத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள். மனித தர்மம், மனச்சாட்சி இருந்தால் சிந்தித்துப் பாருங்கள். இதற்காகத்தான அவர்களுக்கு (இராணுவத்தினர்க்கு) இன்னும் அதிகாரங்களை அளிக்கப் போகிறீர்கள்? ...குரங்கின் கையிலே நெருப்புக் கொள்ளியைக் கொடுத்தால் அது என்ன செய்யும் என்பதை அறிந்திருக்க வேண்டும்; கனம் பாராளுமன்றக் காரியதரிசியின் வீட்டுக்கே அது கொள்ளிவைத்து விடும் என்பதை மறந்து விடக் கூடாது,"

1961ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ம் திகதி—பல மாதங்களாகத் தமிழோசை கேட்காத பாராளுமன்றத்திலே மீண்டும் தமிழோசை ஒலித்துக் கொண்டிருந்தது. தடுப்புக் காவலிலே பல மாதங்களாக வைக்கப்பட்டிருந்த தமிழ் பேசும் மக்களின் தலைவர்களுள் ஒருவரான திரு. ஏ. அமிர்தலிங்கம் (வட்டுக் கோட்டைப் பிரதிநிதி) பாராளுமன்றத்திலே பேசிக் கொண்டிருந்தார்.

சுதந்திரம் பெற்றபின் ஈழத்தின் தமிழ் பேசும் இனத்துக்கு ஏற்பட்ட கரி நாட்களுள் அந்நாளும் ஒரு நாள். சாதாரண நாட்களிலேயே வீடுகளைச் சோதனையிடவும் மக்களைக் கைது செய்யவும் அவர்களைப் பிடிக்கவும் அனைத்துக்கும் இராணுவத்தினர்க்கு அதிகாரம் வழங்கப்பட்ட கொடிய சட்டமொன்று அந்நாள் பாராளுமன்றத்திலே விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதை எதிர்த்துத் தான் தமிழரசுக் கட்சித் தளபதி திரு. அமிர்தலிங்கம் குரலெழுப்பிக் கொண்டிருந்தார்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில், "இது போன்ற சட்டத்தினுல் அரைகுறைப் படிப்புள்ள, பணம் பறிக்கத் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கின்ற, இராணுவ வீரர்களுக்கும் கடற்படை வீரர்களுக்கும் ஆதாயமான பலன் உண்டு. சட்ட விரோதமாக இந்த நாட்டிற்கு வருபவர்கள் மாத்திரமின்றி, இந்த நாட்டில் வாழையடி வாழையாக வாழ்ந்த மக்களும் கள்ளத் தோணிகள் என்று கைது செய்யப்பட்டு பணம் பறிக்கப்பட்டு அடிக்கப்பட்டு உதைக்கப்பட்டு தங்கள் உயிரைக்கூடப் பறிகொடுக்கும் முறையில் நிறுத்தப்படுகிறார்கள் என்பதை நான் இச் சபையில் கூற விரும்புகிறேன்," என்று கூறினார்.

"கள்ளக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கைக்கு நாங்கள் எதிர்த்து நிற்பவர்கள் அல்ல. ஆனால் — அதற்காக—இரண்டு மூன்று பரம்பரையாக இங்கு வாழ்ந்தும் எங்கள் விசித்திர பிரஜா உரிமைச் சட்டத்தின் காரணமாக நாடற்றவர் என்ற நிர்க்கதிக்கு உள்ளாகி இருக்கும் பெருந்தொகை மக்களும் சந்தேகப் பிரஜைகளாக, கள்ளக் குடியேற்றக் காரர்களாக, மதிக்கப்படுவார்கள்.

### எங்குமே இல்லாச் சட்டம்

"நாம் அமுலாக்க இருக்கும் சட்டத்தின்படி பட்டாளத்தின் ஒரு சாதாரண ஊழியனே தனது சந்தேகத்தின் பெயரில் எவரையும் கைது

### மன்னார் பத்மன்

செய்ய முடியும்! அவ்விதம் கைதாக்கப்பட்டவருக்கு எங்கள் சட்டப்படி பிணை கூடக் கிடையாதாம்! இவ்வித சட்டம் வேறெங்கேனும் உண்டா?" என்றெல்லாம் டாக்டர் நாகநாதன் முழக்கமிட்டார். திரு. துரைரத்தினம் (பருத்தித்துறைப் பிரதிநிதி) ஆவேசத்துடன் சட்டத்தைச் சாடினார். தெட்டத் தெளிவாக இச் சட்டத்தின் அநீதியை கோப்பாய்ப் பிரதிநிதி திரு. பாலசுந்தரமும் உடுப்பிட்டி பிரதிநிதி திரு. சிவசிதம்பரமும் எடுத்தியம்பினார்கள். வேறு பலரும் கண்டித்தனர். இருந்தும் நடந்ததென்ன?

கள்ளக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கைத் திருத்த மசோதா (Immigrants and Emigrants (Amendment) Act No. 68 of 1961) வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது!

இதன் பயனைத்தான் இன்று மன்னார் பகுதியிலும் வவுனியாவிலும் கிளிநொச்சி பூநகரிலும் யாழ் நகரிலும் காங்கேசன்துறையிலும் வல்வெட்டித்துறையிலும் பருத்தித்துறையிலும் ஊர்காவற்றுறையிலுமென — தமிழ் பேசும் இனம் வாழும் வட பகுதி எங்கணும் — பட்டாளத்தினர் காட்டாட்சி புரிகின்றனர்!

யுத்தத்திற் கைப்பற்றப்பட்ட குடிநிலம் போலவே இன்று மன்னார் மாவட்டம் காட்சியளிக்கிறது! ஐந்து நிமிடத்துக்கொரு "ஜீப்" வண்டியை அங்கே காணலாம்! அதிலே பட்டாளத்தினர் வீற்றிருப்பர்! இது என்ன, சுதந்திர உரிமைபெற்றுத் தம் சொந்த மண்ணிலே வாழும் மக்களின் பிரதேசமா அல்லது பிறநாட்டினரின் அடிமை யாட்சிக்கு உள்ளாகி, அந்நாட்டினரின் படைபலத்துக்குப் பலியாகி வாழும் பிறிதோர் இடமா? என்ற கேள்வியே இன்றைய மன்னார் மாவட்டத்தைப் பார்க்கும் எவர் நெஞ்சத்திலும் எழும்!

இரவு வேளைகளில் இங்குள்ள பல கிராமங்கள் இராணுவத்தினரின் வேட்டைக் காடாகின்றன! நடுச்சாமத்திலே, அனைவரும் துயிலில் ஆழ்ந்துள்ள வேளையிலே, பட்டாள வாகனங்கள் போய்ப் பாய்கின்றன!

### இரவிலே மனித வேட்டை

இந்தக் கிராமங்களிலே, நடுச்சாம வேளையிலே, படலையைப் பிய்த்தும் கதவை இடித்தும் அதட்டி எழுப்பப்படும் மக்களது மனநிலை எப்படி இருக்கும் என்பதை ஊகித்துப் பாருங்கள்! தூக்கக் கலக்கம் தெளிவடையு முன்னரே அடித்துடைத்து மக்களைத் துன்புறுத்தும் பணியினை இப் பட்டாளத்துக்காரர் ஆரம்பித்திருக்கின்றனர். அடி உதையுடன் தான் பெரும்பாலும் விசாரணைகளே தொடங்குகின்றன!

இக் கொடுமைகளையிட்டுக் கூற நூற்றுக்கணக்கான சாட்சிகள் உளர். ஆனால் இதைப் பிரதமருக்கும் அமைச்சர்களுக்கும் நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் பொதுவாக அரசாங்கத்துக்கும் பொறுப்புள்ள பலர் பலமுறை தெரிவித்திருந்தும் எதுவித பயனும் ஏற்படவில்லை. சுருங்கக் கூறின், நடக்கும் அட்டூழியங்களை அரசாங்கம் நன்கு தெரிந்து தான் இருக்கிறது; அல்லாமலும் இராணுவத்தினருக்கு அதிகாரத்தை மென்மேலும் வழங்கிக் கொண்டிருக்கிறது! காரணம் — காட்டுமிராண்டித் தர்பாருக்குப் பலியாகுபவர்கள் தமிழ் பேசும் மக்கள்தானே, என்ற அலட்சியந்தான்.

1961ம் வருடம் ஜூன் மாதம் பேசாலைப் பகுதியின் பிரபல செல்வந்தரான திரு. எலியாஸ் பீரிஸ் என்பவர் அப் பகுதியில் நடைபெறும் அட்டூழியங்களை விபரமாக, மிக உருக்கமாக, எழுதி மன்னார் மாவட்ட அதிபருக்கும், பட்டாளத் தலைவருக்கும் பொலீசாருக்கும் கடற்றுறைப் பகுதியினர்க்கும் அத்துடன் சில அமைச்சர்களுக்கும் தெரிவித்தார். 'தம் பகுதிக் கடற்றொழில் பாதிக்கப்படுகிறது, அட்டூழியம் கூடுகிறது, கரைவலைக் கடற்றொழிலாளர் அனைவரையும் வேண்டுமெனில் நாமே கூட்டி வருகிறோம், பொலீசார் மத்தியிலோ பட்டாளத்தினர் மத்தியிலோ நேரில் விசாரியுங்கள், இத்தகைய இன்னல் தரும் முறை வேண்டாம்,' என்றெல்லாம் எழுதியிருந்தார். இதுபோல் பலர் முறையிட்டனர். ஆனால் நடந்தது என்ன?

முறையிடப்பட்ட திகதியிலிருந்து நான்கு மாதங்கள் கழியுமுன் இன்னல் விளைத்த பட்டாளத்தினர்க்கு மேலும் பல விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டதுதான் விந்தையிலும் விந்தையான விடயம். எவரையும் பிடிக்கும் அளவுக்கும் சந்தேகத்தின் பேரில் பிடிபட்டவர்கள் பிணையிற்தானும் வெளிவரா அளவுக்கும் கொடிய முறையில் சட்டம் மாற்றி அமைக்கப்பட்டது! இதை எதிர்த்தே அன்று—1961ம் ஆண்டு ஒக்டோபர் 19ந் திகதி — வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்திலே குரல் எழுப்பிக் கொண்டிருந்தார். இருந்தும் சட்டம் அமுலாக்கப்பட்டது!

இச் சட்டத்தின் கீழ் எதையெதை எல்லாம் — இன்று எதையெதை எல்லாம் பட்டாளத்தினர் செய்கின்றனர் என்பது தெரியுமா?

— வளரும் —

## பட்டதாரி இளைஞர்கள்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தெழுந்தனர். ஆயினும் அவர்களால் செய்ய முடிந்தது கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதுதான்.

இந்நேரத்தில் ஒரு பெரும் மனச் சோதனை டி வேலராவை எதிர் நோக்கியது. ஆயுத பலம் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதானல் போதிய ஆயுதங்கள் இருக்க வேண்டும். போதிய ஆட்பலம் இருக்க வேண்டும். அல்லாவிட்டால் சாத்விகமான முறைகளையே கையாள வேண்டும். ஆனல் சாத்விகப் போராட்டத்திற்கு எந்த வித வழியுமில்லாவிட்டால் கைவசம் இருக்கும் ஆயுதங்களைக் கொண்டேனும் போராட வேண்டும், என்பதே டி வேலராவின் கொள்கையாக இருந்தது. இதை அயர் குடியரசு இராணுவத்தில் பெரும்பான்மையோரும் சின் பீன் வாரியத்தினரும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர். அவர்களோ, செத்தாலென்ன இருந்தாலென்ன, துப்பாக்கி இருந்தால் அது சுட்டுத் தள்ளுவதற்காகவே இருக்க வேண்டும் என நம்பினர். அதனல் முதலில் அயர் குடியரசு இராணுவமும் அதைத் தொடர்ந்து சின் பீனும் ஏமன் டி வேலராவை விட்டுப் பிரிந்து சுதந்திரமாக இயங்க ஆரம்பித்தன.

டி வேலரா மனந்தளரவில்லை. முன்னர் மைக்கேல் [illegible] தன்னை விட்டுச் சென்ற போது எவ்வாறு மனந்தள ராமல் தனக்குச் சரியெனப் பட்டதைச் செய்தாரோ அதைப்போல் இம் முறையும் டி வேலரா தன் மனதுக்கு எது சரியெனப் பட்டதோ அதைச் செயல்படுத்த முன் வந்தார்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து விடுதலை இயக்கம், ஒப்பந்த சார்பானர்கள், ஒப்பந்த எதிரிகள் எனப் பிளவுபட்டவுடன் டி வேலரா, குடியரசுக் கட்சி எனும் ஒரு கட்சியை ஆரம்பித்தது நாம் அறிந்ததே. பின்னர் சின் பீனில் உள்ளவர்களில் ஒப்பந்த சார்பானவர்கள் தாமாகவே சின் பீனை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டதால் குடியரசுக் கட்சிக்கு அவசியம் இருக்கவில்லை. ஆனல் சின் பீனே டி வேலராவை விட்டுச் சென்ற பின் புதிய ஒரு கட்சி அவசியமாகியது. எனினும் குடியரசுக் கட்சி எனும் பெயர் உள்நாட்டு யுத்தத்தோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. அதனல் வேறொரு பெயருடன் இன்னுமொரு கட்சியை ஆரம்பிக்க டி வேலரா முடிவு செய்தார். தனது கொள்கையை ஏற்றுக் கொள்பவர்களுடன்சேர்ந்து அவர் பியெனு போள் என்னும் இயக்கத்தை 1926ம் ஆண்டு ஏப்பிரிலில் உருவாக்கினர். பியெனு போள் என்றால் இலட்சிய வீரர்கள் என்று பொருள்.

(வளரும்)

## கொழும்பில் நாவலர் விழா

கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் விவேகானந்த வித்தியாலயமண்டபத்தில் டிசம்பர் 7-ம் 8-ம் திகதிகளில் நாவலர் விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்ச்சிக்கு சேர் கந்தையா வைத்தியநாதனும், இரண்டாவது நாள் நிகழ்ச்சிகளுக்கு நீதியரசு ஸ்ரீஸ்கந்தராஜாவும் தலைமை தாங்குகின்றனர்.

இந்த இரு நாட்களிலும் விசேட கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. மட்டக்களப்பு நகைச் சுவைக் குமரன் மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரது வில்லுப் பாட்டும் இடம் பெறவிருக்கிறது. சிறந்த அறிஞர்கள் பலரது விரிவுரைகளும் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பலவேகையா பிரச்சினை

எதற்கெடுத்தாலும் சிங்கள மக்கள் இப்பொழுது பலத்தையும் வேகத்தையும் காட்ட ஆரம்பித்துவிட்டனர். உண்மையான பலவேகயா தங்களுடைய இடதுசாரி முன்னணியே என்று திரு. பீட்டர் கெனமன் கூற ஆரம்பித்துள்ளார்.


### விகர்பில்ஸ்



[illegible]

விலை 30 மாத்திரைகள் ரூ. 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்

1. வி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
5. லீலா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
6. எஸ். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.
11. பரஞ்சோதி மருந்துசாலை, திருகோணமலை.
12. நாகலிங்கம் குரோசரி ஸ்டோர்ஸ், 208, வார்ட் பிளேஸ், பொரளை.
13. எஸ். என். குருமெடிக்கல் ஹால் (கிளை) 'மாஸ்டர் ஹவுஸ்', நிந்தவூர்.
14. எஸ். என். குருமெடிக்கல் ஹால் (கிளை) 12, ஒலிவ் வீதி, மட்டக்களப்பு.
15. ஷண்முகம் ஸ்டோர்ஸ், ரத்தினபுரி.

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்
80 புதுச்செட்டித் தெரு
கொழும்பு 13.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எமது விமர்சனம்

## 'பணத்தோட்டம்'

கள்ளங் கபடமறியாத வெள்ளையுள்ளம் படைத்த வாலிபன் செல்வம், கள்ளநோட்டு அச்சிடுபவர்களின் சூழ்ச்சி வலைக்குள் சிக்கித் தவிக்கிறான். சட்டம் அவனைத் துரத்த, பெற்ற தாய் அவனைச் சபிக்க, மாறு வேடங்களில் அலைந்து திரியும் அவன், தன்னைக் குற்றவாளிக் கூண்டிலிருந்து தப்ப வைத்துக் கொள்ள அரும்பாடு படுகிறான்.

கண்ணிறைந்த காதலியின் அன்பினாலும், அவள் ஊட்டும் தைரியத்தினாலும் அவன் தனது பாதையில் குறுக்கிடும் தடங்கல்களையெல்லாம் முறியடித்து முன்னேறிக் கொண்டிருக்கிறான்.



பணத்தாசை ஏழைகளிடம் அதிகம் தலைகாட்டுவதில்லை. அதிகமான பணத்தைச் சம்பாதிக்கக் கூடிய வசதி பெற்றவர்களிடம் தான் இந்தப் பேராசைப் பேய் வளருகிறது. இந்தப் பேயை வளரவிட்டால் மனிதப் பண்பு கெட்டு மிருகப் பண்பே வளரும்.

நல்லவர்களைப் போல நாலுபேர் மதிக்கத்தக்கதாக வாழ்பவர்களிடத்தில் எத்தனையோ பொல்லாப்புகள் மலிந்து கிடக்கும். இந்த உண்மைக்கு எடுத்துக்காட்டாக இருக்கத்தான் பி. எஸ். ராமையா "பணத் தோட்டம்" கதையை சரவணா பிலிம்சாருக்கு அளித்திருக்கிறார்.

கள்ளநோட்டு அச்சிடும் கூட்டத்தின் பிரதிநிதி புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். என்பதை யார்தான் நம்ப முடியும்? ஆனால் சட்டம் அவரை வளைத்து விடுகிறது. செல்வமாக எம். ஜி. ஆரும், அவருடைய காதலியாக சரோஜாதேவியும், தேவியின் தந்தையாக சுப்பையாவும், பொலீஸ் இன்ஸ்பெக்டராக அசோகனும் தோன்றுகின்றனர். எம். ஜி. ஆரின் தாயாராக வருபவர் ராஜம்மா. மற்றும் நம்பியாரும் வில்லனாகத்தான் வருகிறார்.

நகைச்சுவையை வழங்க நாகேஷ் கோஷ்டியினர் வருகின்றனர். அவ்வளவாக எடுபடவில்லை என்றாலும், சிரிப்புக்குப் பஞ்சமில்லை.

புரட்சி நடிகரென்றாலே அடிபிடிக்குக் குறைவில்லை என்பது ரசிகர்களுக்குத் தெரிந்த பரகஸ்யம். வேண்டிய அளவு சண்டைக் காட்சிகள் உண்டு. "ஜவ்வாது மேடையிட்டு" என்ற பாடலைத் தொடர்ந்து வரும் சண்டைக் காட்சி ரசிகப் பெருமக்களுக்கு வேடிக்கையையும் நன்றாக வழங்கும் என்பதில் ஐயமில்லை.

கவிஞர் கண்ணதாசனின் பாடல்கள் மெல்லிசை மன்னர்களின் இன்னிசைக்கு மெருகூட்டுகின்றன. காதல் காட்சிகளும், இரவுக் காட்சிகளும் கச்சிதமாகப் படமாக்கப்பட்டுள்ளன. பல முறை பார்க்கக் கூடிய படம் பணத்தோட்டம்.

—நாதன்

## இசை அமைப்பாளர் ராமநாதன் மறைவு

சில வருடங்களுக்கு முன்னர் கெய்ரோவில் நடந்த திரைப்பட விழாவில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு இரு பரிசுகள் கிடைத்தன. தலை சிறந்த நடிகர் என்பதற்காக சிவாஜி கணேசனுக்கும், முதல் தரமான இசை அமைப்பாளர் ஜி. ராமநாதன் என்றும் பரிசு வழங்கப்பட்டது.

கர்னாடக இசை நுணுக்கங்களை மெல்லிசை வரிசையில் புகுத்தி வெற்றி கண்டவரும், தென்னகத் திரை உலகின் தலைசிறந்த இசை அமைப்பாளருமான ஜி. ராமநாதன் தமது 52வது வயதில் காலமான செய்தி சினிமா உலகையே அதிர வைத்த பேரிடியாக விருந்தது.

பின்னணிப் பாடகர்கள் உட்பட சினிமா உலகப் பிரமுகர்கள் அனைவரும் தியாகராய நகரிலுள்ள திரு. ராமநாதன் வீட்டுக்குச் சென்று தமது இறுதி மரியாதையைத் தெரிவித்தனர். தகனக் கிரியைகள் சென்னை கண்ணம்மா பேட்டை மயானத்தில் வியாழக்கிழமை காலை நடைபெற்றன.

## அறிமுகப்படுத்துகிறோம்—1.



### எழுத்தாளர், கவிஞர், நடிகர்

### திரு. வெற்றிவேந்தன்

எழுத்தாளர், கவிஞர், நடிகர்.

மூன்று துறைகளிலும் சமமான ஆற்றலுடைய திரு. வெற்றிவேந்தன் அறிவொளி கலை அரங்கின் தலைவராவார்.

கல்பிட்டி மாவித்தியாலயத்தில் கற்றுத் தேறிய இவர் கொழும்பில் தொழில் புரிகிறார். கலை ஆர்வம் கொண்ட திரு. வெற்றிவேந்தன் நாடகக்கலையில் மிகுந்த ஈடுபாடுடையவர்.

பள்ளிக்கூடப் பருவத்திலேயே நாடகங்கள் பலவற்றில் தோன்றி நன்மதிப்புப் பெற்றிருக்கிறார். தாமாகவே எழுதி, பாடல்களும் இயற்றி நடித்தும் வருகிறார்.

'மரணப் பரிசு', 'மானம் பெரிது என்பவன் தமிழன்', 'சிங்க முழக்கம்' ஆகிய நாடகங்களைத் தாமே எழுதி நடித்துமுள்ளார். 'உரிமை இழந்தவள்', 'தங்கத் தாய்' ஆகிய நாடகங்களை இப்பொழுது தயாரித்து வருகிறார்.

திரு. வெற்றிவேந்தன் தயாரித்தளித்திருந்த 'சிங்க முழக்கம்' என்னும் நாடகத்தில், இவருடைய தன்மான உணர்ச்சி எத்தகையது என்பதைக் காணக்கூடியதாக விருந்தது. தற்காலச் சூழ்நிலைக் கேற்ப கதையை கருத்துள்ளதாக அமைத்திருந்தது மெச்சத்தகுந்தது.

இவர் எழுதும் நாடகங்களில் தமிழ் ஆர்வம் மிளிர்வதை நன்கு அவதானிக்கலாம். நடிப்புத்துறையிலும் நாடகத் தயாரிப்பிலும் எதிர்காலத்தில் மிக முன்னணிக்கு வரவிருக்கும் திரு. வெற்றிவேந்தனை அறிமுகப்படுத்தி வைக்கிறோம்.

### நேயர்களுக்கு......!

'அறிமுகப்படுத்துகிறோம்' பகுதிக்கு சிலர் வெறும் பத்திரத்தைப் பூர்த்திசெய்து அனுப்பிவிடுகின்றனர். படத்துடன் முன்னர் கோரிய விபரங்கள் எதுவும் அனுப்பிவைக்கப்படாவிடில் அவை கவனிக்கப்பட மாட்டா. விபரங்களை மீண்டும் விரைவில் தருகிறோம்.

— ஆசிரியர்.



★ 'மயான காண்டம்' நாடகத்தில் உள்ளத்தை உருக்கும் கட்டம். ★

## இந்தியாவின் முதல் 'ரெக்னிரமா'

முதன் முதலில் இந்தியப் படம் ஒன்று 'ரெக்னிரமா' அமைப்பில் தயாரிக்கப்படவிருக்கிறது. வட இந்திய நடிகரான பிரதிப் குமார் அகில உலக மார்க்கெட்டை எட்டிப் பிடிக்கும் வகையில், இப்படத்தை இந்தி, பிரெஞ்சு, அரபி ஆகிய மொழிகளிலும், முடியுமானால் ஆங்கிலத்திலும் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர். இப்படம் மத்திய கிழக்கு நாடுகளில் படமாக்கப்படும். தமிழ் நாட்டு நடிகையான வைஜயந்தி மாலாவை யே கதாநாயகியாகப் போடவும் எண்ணியுள்ளார்கள். இப்படத்தின் டைரக்‌ஷன் பொறுப்பை எம். சாதிக் ஏற்றுள்ளார்.

'ரெக்னிரமா' என்பது அகன்ற திரையில் அதிகமான கண்பார்வை அனைத்தையும் ஈர்க்கக்கூடியவகையில் காட்சிகளைத் திரையிடும் முறையினைக்குறிக்கும். 'சினிமாஸ்கோப்' முறையைவிடவும் அகன்ற காட்சியை உள்ளடக்கக்கூடிய முறை 'ரெக்னிரமா' என்று கூறப்படுகிறது.



"காதலர்கள் படிக்க வேண்டும்." ஆமாம் அவர்கள் படிப்பதற்கு எண்ணற்ற பாடங்கள் உண்டென்பது உண்மைதான். இதோ அப்பாடங்களைப் படிக்க இந்த இரு இளம் உள்ளங்களும் புறப்பட்டுவிட்டன. லிபர்ட்டி [illegible] வேண்டும்.' (Lovers Must Learn) ஆங்கிலப் படத்தில் சுசேன் பிளஷெட்டும், அழகி டோரியும் இப்படித் துள்ளித் திரிகின்றனர்.

## சதி

எம். ஜி. ஆர். நாடக மன்றத்தின் சார்பாக அரங்கேற்றப்படவிருக்கும் "சதி" என்ற நாடகத்தின் ஆரம்ப கூட்டம், மன்ற பணிமனையில் 10-11-63 மாலை 7 மணிக்கு நடைபெற்றது.

## கொழும்பில் 'மயான காண்டம்'

இலங்கையின் பல பாகங்களிலும் ஐந்நூறுக்கும் அதிகமான தடவைகள் மேடையேற்றப்பட்டு, பல லட்சம் மக்களின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்ற காங்கேசன்துறை வசந்தகான சபையாரின் அரிச்சந்திரா மயான காண்டம் கொழும்பு ரசிகப் பெரு மக்களைப் பரவசப்படுத்த வருகிறது.

அரிச்சந்திரனாகத் தோன்றிப் பார்ப்போர் இதயங்களைத் தன் நடிப்பால் ஈர்த்திழுக்கும் திறமை வாய்ந்த திரு. வி. வி. வயிரமுத்து இந் நாடகத்திலும் தோன்றுகிறார்.

கொட்டகைக் கூத்துக்கள் சாதாரணமாகக் கிராமப் புறங்களிலேதான் நடைபெறுவதுண்டு. சினிமாத் துறை மேம்பாடடைந்துள்ள இக்காலத்திலும் திரு. வயிரமுத்துவின் நடிப்பைக் காணக் கணக்கற்ற மக்கள் நகரப் புறங்களிலிருந்தும் புறப்பட்டுப் போவதுண்டு.

நல்ல நடிப்பு என்ற பதத்துக்கு இலக்கணமாக விளங்கும் வயிரமுத்துவின் நடிப்பைக் கொழும்பு ரசிகப் பெரு மக்கள் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 1-12-63ல் கண்டு ஆனந்திக்க வாய்ப்புண்டு.

சுதுமலை வயிரவ கோயில் கட்டிட நிதிக்காக இந்நாடகத்தை திரு. எஸ். ரி. சுப்பிரமணியம் தருவிக்கிறார். திரு. 'வரணியூரான்' நாடக அரங்கேற்றத்துக்கான யாவற்றையும் செய்து வருகிறார்.

## பருவத்தின் பரிசு

கொழும்பு முன்னேற்ற நாடக மன்றம் விரைவில் "பருவத்தின் பரிசு" என்ற சமூக நாடகத்தை, மேடையேற்றவிருக்கிறது. இதன் கதை வசனம் டைரக்‌ஷன் பொறுப்புக்களை தோட்டக்காரி டைரக்டர் திரு. பி. எஸ். கிருஷ்ணகுமார் கவனிக்கிறார்.

இந்த நாடகத்தில் பி. பொன்னம்பலம், ஏ. சே. ரி. அழகக்கோன், எஸ். வி. கே. பூபாலன், கே. ஆர். ஆறுமுகம், எஸ். வி. சுப்பையா, கே. குமாரவேலு, எஸ். குருசாமி, பி. வீரையா, ஜே. மைக்கல் பெர்னாண்டோ, எஸ். எஸ். கோவிந்தசாமி, எஸ். குமாரவேலு, மற்றும் செல்விகள் அம்பிகா, கே. ரோஸ்மேரி ஆகியோர் நடிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘இனம் இனத்தோட....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

"என்ன? அப்படிச் சொல்லிட்டிங்க. நம்ம இனம் என்றைக்கு நம் இனத்தோடு சேர்ந்து போராட்டம் நடத்துமோ அன்னிக்குத் தான் நம் இனத்துக்கு விமோசனம். அதுக்காக எந்தக் கட்சி பாடுபடுதோ அது தான் நமக்கு வேண்டும். அப்படிப்பட்ட கட்சியைப்பற்றி எல்லாரும் உணர்ந்து தெரிஞ்சிக்கிட்டாங்கன்ன அப்புறம நம்மை ஆட்டவும் முடியாது அசைக்கவும் முடியாது...

"ஏதுங்க, ஏதுங்க, தமிழரசுக் கட்சியைப் பற்றி இந்த போடு போடுறீங்களா...?"

"அட என்னங்க, நாங்க மட்டுமில்லேங்க, எங்க தோட்டத்தைச் சேர்ந்த சுற்று வட்டாரம் முழுவதும் இந்தக் கட்சிக்குத்தான் ஆதரவு காட்டுவோம். ஏன்னு கேட்டால்...... தமிழன், தமிழன வாழனும், மாற்று இனத்தாரோடு சேர்ந்து மண்டியிட்டு கும்பிட்டுக் கூத்தாடின இருக்கிற மானமும் பறிபோயிடும். இதை நல்லா புரிஞ்சிக்கிட்டோம், மானத்தோடு வாழ நம்ம இனத்தவங்களை ஒன்று சேர்க்கிறதிலே முழுமூச்சா ஈடுபட்டு வேலை செய்து வர்றோம்."

"ஆமா...மா...... எனக்குக் கூட இந்தக் கட்சி மேல எப்பவுமே ஒரு பற்று இருந்து வருதுங்கிறது உங்களுக்கு அவ்வளவா தெரியாது. ஒரு பதினைஞ்சு வருஷமா தமிழரசுக் கட்சி, தமிழுக்கும் தமிழினத்துக்கும், செய்துவரும் தொண்டு கணக்கில் அடங்காது. எல்லா உரிமைகளையும் பெறுவதற்கு இவர்களுடைய இடைவிடாத போராட்டங்களை நான் அறியாம தெரியாம இல்லே. நான் ஒரு தொந்தரவும் இல்லாமல் இருக்கலாமுன்னு தான் ஒரு கட்சியிலும் சேராமல் இருக்கேன். நான் சேர்ந்திருந்த கட்சிக்காரங்கத்தான் நம்பிக்கை துரோகம் செஞ்சிட்டாங்க......?

"அதைப்பற்றி எங்களுக்கு முன்னமே தெரிஞ்சிகிட்டுத்தான் இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தொழிற் சங்கம் அமைக்கக் கேட்டோம், அதன்படி அமைக்கப்பட்டு தினம் தினம் வளர்ந்துவரும் வளர்ச்சி கண்டுகூட மாற்றுக் கட்சி "மகான்கள்" கருடப் பார்வை பார்க்கிறார்கள்......!"

ஆமாம்...ஆமாம், பார்ப்பாங்க... என்னங்க பார்த்தாலும் சரி, ஏசினலும் சரி, துரோகம் செய்யிறவங்களோட மட்டும் சேர்ந்து அவதிப்பட்டு துன்பப்பட்டு துவண்டு போகாம நம் இனம் இருந்தால் போதும்."

"எல்லாக் காரியத்திலும் ஒற்றுமையா இருந்து உரிமை கிளர்ச்சி செய்தா நாம நல்வாழ்வு வாழ முடியும், இல்லையின்ன, இன்னும் நம்மைச் சேர்ந்த கட்சிக் காரர்கள் நம்மையும் நம் இனத்தையும் நாசமாக்கி விடுவார்கள். இந்த உண்மையை எல்லாத் தொழிலாளரும உணர்ந்திட்டா, நம் தலைமுறை தலைமுறையா இருந்த பேரும் புகழும், சீரும் சிறப்பும் நாளைய சமுதாயத்திற்கும் கிடைக்கும் இல்லிங்களா?"

"ஆமாம்...ஆமாம் நிச்சயம். —ஆனல் ஒன்று.... தமிழன், நான் தமிழன், நாம் தமிழர் என்ற உணர்ச்சி எல்லோருக்கும் ஏற்பட்டு தமிழர் தமிழரோடு சேர்ந்து தமது இழந்த உரிமைகளுக்கும், தன் மானத்தைக் காப்பதற்கும் போராட்டம் நடத்த வேண்டும்.

"அது... நியாயதானுங்க... இருந்தாலும், மண்ணைப் பிடிச்ச கட்சியிலும், துரோகம் செய்யும் கட்சியிலும் சேர்ந்து தொழிலாளர்கள் தொல்லைபடுவது தான் சகிக்க முடியலிங்க......"

"எல்லாம் சரியா வந்திடுங்க, நாளுக்கு நாள் நல்லெண்ணமும், விழிப்புணர்ச்சியும், நம் தொழிலாளிங்க மத்தியிலே ஏற்பட்டு வருது. அதோட தமிழரசுக் கட்சியின், இலங்கைத் தொழிலாளர் கழகம், எல்லாத் தமிழ் பேசும் தொழிலாளருக்கும் நல்ல தொண்டு செய்து வருது. இதை நீங்களும் அறிந்து வைத்திருக்கிங்க..."

"ஆமாங்க, இனிமேல் நான் கூட கழகம் வளர்ச்சியடைய பாடுபட உத்தேசித்துவிட்டேன். கடமை செய்யும் அத்தனை தொழிலாளியும் உரிமையோடு வாழ வேண்டும். இதற்குப் பிறகு ஏமாற்றி வாழும் தொழிற் சங்க மே(ல்)தாவிகள் வீசும் வலையில் சிக்குண்டு சிதறுமல் தொழிலாளப் பெருங்குடி மக்களுக்காக தொழிலாளர் கழகத்தில் சேர்ந்துதொண்டு செய்யப் போகிறேன்."

"என்னங்க நேரம் போனதே தெரியல்ல, சரி நான் கூட எங்கள் கழக அலுவலகம் வரைக்கும் போறேன், நீங்க......?"

"இருங்க, இருங்க, நானும் எங்கள் தோட்டத்து தொழிலாளரையும் கழகத்தில் சேர்க்க என்ன என்ன செய்யனும்ங்கிறதைப்பற்றி தெரிஞ்சுக்கனும்."

"சரி சரி, வாங்க போவோம்."

[பேச்சிலேயே இவ்வளவு காலமாக வாழ்ந்துவிட்ட தொழிற் சங்கத்தில் தொண்டு செய்து தோல்வி கண்ட தோட்டக் குழு தலைவர் ஒருவரும், மற்றொரு தோட்டக் குழுவின் தொழிலாளர் கழக தலைவரும் பேசிக் கொண்டு இ. தொ. கழகக் காரியாலயத்துக்கு வந்தனர். காரியாலயத்தில் கடமை செய்வோரும் கனிவோடு வரவேற்புக்கூற கழக நடவடிக்கைகளை எடுத்தியம்பி, ஏற்றம் பெற வழி கூறினர்.]

# கல்லூரி மூடுவிழா?

மருத்துவத் தாதிமார் பயிற்சிக் கல்லூரிக்குத் தமிழ் போதனசிரியர் வேண்டும் என்று பலர் வேண்டியுள்ளார்கள். ஆனல், இன்று வரை அப்பதவிக்கு யாரும் தெரிவு செய்யப்படவில்லை.

இப்பதவிக்குத் தமிழர்களைத் தெரிவு செய்ய அரசாங்கம் விரும்பவில்லை. அதே நேரத்தில் சிங்களப் பயிற்சியாளரை அனுப்பினல் நிலைமையைச் சமாளிக்க முடியாது. எனவே, தெல்லிப்பளையில் இருக்கும் இப் பயிற்சி நிலையத்திற்கு மூடுவிழா நடத்துவதா? அல்லது ஒரு சிங்கள மொழி மூலம் நடைபெறும் பயிற்சி நிலையமாக்குவதா? என்ற குழப்பமான நிலையில் ஆட்சியாளர் உள்ளனராம்

# கோடீஸ்வரன்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லிம் மக்கள் வசித்து வருகிறார்கள். நிந்தவூர், அக்கரைப்பற்று, கல்முனை ஆகிய பகுதிகளிலும் முஸ்லிம்கள் தான் வசித்து வருகின்றனர். இப்பகுதிகளில் உள்ள கிராமசபை, பட்டினசபை அங்கத்தவர்கள் பெரும் பாலானோர் முஸ்லிம்கள் தான். நானும் ஏறுவூர் பட்டினசபையின் உப தலைவராகக் கடமை பார்க்கிறேன். முஸ்லிம்களின் தாய்மொழி தமிழே. முஸ்லிம்களின் கிராமியப் பாடல்கள், நாடகங்கள் கூட தமிழிலேதான் இருக்கின்றன.

1956-ம் ஆண்டுக்குப் பின்னர் அரசாங்கத்திடமிருந்து கடிதங்கள் யாவும் சிங்களத்தில் தான் வருகின்றன. மட்டக்களப்பு வன இலாகா அதிகாரியிடமிருந்து எனக்கு வந்த கடிதத்தை இங்கு சமர்ப்பிக்கிறேன். அது சிங்களத்தில் இருப்பதால் என்னல் புரிந்துகொள்ள முடியவில்லை."

ஜனுப் முகம்மது சாட்சியமளித்த பின்னர் விசாரணை டிசம்பர் 3ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

# ஆசிரியர் இடமாற்ற....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றவர்களாக இருக்க வேண்டுமெனக் கூற விரும்புகிறோம். அதே நேரத்தில், யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாகும் ஆசிரியர்கள், 8 வருட சேவைக்குப் பின், யாழ்ப்பாணத்துக்கு வெளியே மீண்டும் மாற்றலுக்காளாவர்.

(10) மேலே கூறப்பட்டுள்ள முழுத்திட்டத்தையும், முக்கியமாகப் பந்தி (2) ல் குறிக்கப்பட்டுள்ள விஷயத்தையும், அமுல் நடத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்."

# நற் கல்வியால்தான்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டப் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டு வருகின்றன. ஒரு ஆசிரியர் மட்டும் இருந்து "உயிரைப் போக்கும்" நிலையும் இன்னும் மாறவில்லை. ஒரே நேரத்தில் எத்தனை வகுப்புக்களை, எத்தனை பாடங்களை, எத்தனை பிள்ளைகளுக்குப் போதிப்பார் ஒரு ஆசிரியர்? இந்த நிலையில் அந்த ஆசிரியரைக் குறைகூறுவதும் முறையல்லவே! மேலும் வகுப்புக்களும், பாடங்களும் நடைபெறுவதற்கு இதுகாறும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையே! இப்படியான நிலையில் எப்படி உருப்பெற முடியும் 'தோட்டப்பகுதிக் கல்வி?'.

தொழிலாளத் தலைவர்கள், விசேடமாகத் தோட்ட மாணவர்களின் க[illegible]யத்திலே கரிசனை [illegible] வரும் தமிழரசுத் தொழிற் சங்கத் தலைவர்கள், மலைச் சிறார்களின் கல்வி விடயத்திலே ஒரு மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளப் பெருமக்களும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். நிலைமையை மாற்றி நிவாரணம் அளிக்கும்படியாக அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டியதும் அவர்கள் பொறுப்பேயாகும். தொழிலாளர்களும், தோட்ட நிர்வாகத்திடம், தங்கள் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியிலும் கவனம் செலுத்தும்படியாகக் கேட்க வேண்டும். கற்றோரும் மற்றோரும் மலையகக் கல்விப் பணியில் ஈடுபட்டு உழைக்க வேண்டும்.

கல்வி வளர்ச்சியிலே ஒரு பெரும் கிளர்ச்சி ஏற்பட்டு, எத்தனையோ ஆசிரியர்கள், அறிவாளிகள், வைத்திய [illegible] பண்டிதர்கள் மலையகத்தில் தோன்ற வேண்டும்.

# சிங்கள...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

2. குடிவரவு குடியகல்வுத் திணைக் களத்திலிருந்து வழங்கப்படும் கடவுச் சீட்டு (பாஸ்போட்) அல்லது தற்காலிகச் சான்றிதழ்.

3. பரீட்சை நடைபெறும் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் அரசாங்க திணைக்களமோ, பொதுக் கூட்டுத்தாபனமோ அல்லது நியதிச் சட்ட நிறுவனமோ வழங்கிய உத்தரவுச் சீட்டு அல்லது வேறு பத்திரம்—பரீட்சார்த்தியின் புகைப்படத்துடன்.

4. பின்வரும் குறிப்புக்களுடன் ஒரு கடவுச் சீட்டு அளவு புகைப்படம்:

(அ) விண்ணப்பகாரரின் கையொப்பம்.

(ஆ) விண்ணப்பகாரரின் முழுப் பெயர்.

(இ) கல்லூரியின் பெயரும் முகவரியும்.

(ஈ) கல்லூரி அதிபரின் பெயர்.

(உ) கல்லூரி அதிபரின் கையொப்பம்.

(ஊ) திகதி.

இப்புகைப்படத்தில் கல்லூரி அதிபர் அல்லது தலைமையாசிரியர் மட்டுமே கைச்சாத்திடலாம். உதவி ஆசிரியர்கள் கையொப்பமிடக் கூடாது. இப் புகைப்படம் பரீட்சைப் பொறுப்பாளரிடம் சேர்க்கப்பட வேண்டும்.

# புதிய ஜனதிபதி...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மையான உழைப்பாளர்களில் ஒருவராவர். ஜுலை, 1955ல் அவர் இருதயப் பலவீனத்தால் பாதிக்கப்பட்டார். சில மாதங்களுக்கு அது அவரைப் படுக்கையிலேயே போட்டுவிட்டது. ஆனல், குணமானதும், தமது செனேட் கடமைகளைப் புதிய உற்சாகத்துடன் மீண்டும் தொடர்ந்தார் திரு. ஜோன்ஸன்.

திரு. ஜோன்ஸன், 'லேடி பேர்ட்' என அன்புடன் அழைக்கப்படும் குளோடியா றெயிலர் என்ற பெண்ணை 1943ம் ஆண்டில் திருமணம் புரிந்தார். இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் உண்டு.

திரு. கென்னடியின் உயிர் பிரிந்து ஒரு சில மணித்தியாலங்களுள் ஜனதிபதியின் பொறுப்பு வாய்ந்த பதவியேற்ற திரு. ஜோன்ஸன், அமெரிக்க மக்களை நோக்கிப் பின்வருமாறு கூறினர்:

இது எல்லோருக்கும் சோகமான ஒரு வேளையாகும். இன்னவென்று மதிக்க முடியாத இழப்பு எங்களுக்கு நேர்ந்துள்ளது. என்னைப் பொறுத்த வரை, இது எனக்கு ஓர் ஆழ்ந்த, தனிப்பட்ட இழப்பாகும். திருமதி கென்னடியும் அவரது குடும்பமும் சுமக்கும் சோகத்தில் உலகமும் பங்கு பற்றுகிறது என்று எனக்குத் தெரியும். நான் என்னல் இயன்ற வரை (எனது கடமையை) செய்வேன். அவ்வளவும் தான் என்னல் செய்ய முடியும். உங்களதும் —கடவுளதும் உதவியைக் கேட்கிறேன்."

# கடமை எங்கே? கண்ணியம் எங்கே?

சிங்களம் உத்தியோக மொழியாக்கப்பட்டதும், சிங்கள ஊழியர்கள் பலர் தலைகால் புரியாமல் ஆட்டம் போடுவது தினசரி வலுவடைந்துவருகிறது. உடன் வேலை செய்யும் தமிழ் ஊழியர்களுக்கு மட்டுமல்லாமல், காரியம் முடிக்கவரும் தமிழ் மக்களுக்கும் சிங்கள ஊழியர்களுடைய கிண்டலும் கேலியும் நிறைந்த அட்டகாசங்கள் சொல்ல முடியாத வேதனையை அளித்து வருகின்றன.

அண்மையில் மோட்டார் பகுதிக்கு அராலி தெற்கைச் சேர்ந்த ஒருவர், மோட்டார் வாகனம் செலுத்தும் உத்தரவுச் சீட்டுக்கு விண்ணப்பித்திருந்தார். அவருடைய உத்தரவுச் சீட்டை அவருக்குப் புரியாத சிங்களத்தில் பூர்த்தி செய்து கொடுத்துள்ளனர். சிங்களத்திலுள்ளதை ஏற்க முடியாதெனவும், தமக்குப் புரியக்கூடிய தமது மொழியான தமிழில், அல்லது ஆங்கிலத்தில் தரும் படி பல முறை கேட்டும் எது வித பலனும் கிடைக்கவில்லை.

பதிலாக அவரை மோட்டார்ப் பகுதியில் கடமை பார்க்கும் சிங்கள ஊழியர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கேலியும் கிண்டலும் செய்து துன்பத்துக்குள்ளாக்கியுள்ளனர்.

பொது மக்களின் ஊழியத்துக்காகக் கடமையாற்றும் ஊழியர்கள் சுய்மைத்தனமாக நடந்தால் கண்ணியம் எங்கே வளரமுடியும். கட்டுப்பாடும், கடமையுணர்ச்சியும் வளர முடியுமா? என்று எண்ணி ஏங்க வேண்டியுள்ளது.

## புங்குடு தீவு ஹரிஹர ஐயனர் கோவில் கும்பாபிஷேகம்

புங்குடுதீவு கிழக்கு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனர் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிசேகம் திங்கட்கிழமை (2-12-63) அன்று பிற்பகல் 1-12 முதல் 2-45 வரை நடைபெறும். மகா பிஷேகம், தீபாராதனை, மகேஸ்வர பூசை (அன்னதானம்), திருக்கல்யாணம் திருவுலாவும் இடம் பெறும்.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்.

சுதந்திரன் அச்சகம்,
தபால் பெட்டி 1183.
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.
தந்தி : சுதந்திரன் போன் : 3411

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




## கொஸ்லாந்தை மகாவித்தியாலய பேச்சுப் போட்டி

கொஸ்லாந்தை மகா வித்தியாலயம் தமிழ்ப் பிரிவு சிரேஷ்ட மாணவர் மன்றம், போஷகர் திரு. அ. இராசேந்திரம் ஆசிரியர் அவர்கள் தலைமையில் மூன்று தினங்களாகப் பேச்சுப் போட்டி ஒன்றை நடத்தி, கடந்த 18-11-63 உடன் அதன் இறுதித் தெரிவை முடித்துக்கொண்டது.

போட்டியில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்குத் தவணை இறுதியில் மன்றம் வெளியிட இருக்கும் இரண்டாவது இதழ் "மாணவர் தீபம்" வெளியீட்டு விழாவின் போது பிரதம ஆசிரியர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் அவர்கள் பரிசில்களை வழங்குவார்.

பரிசில்கள் பெற இருப்போர் விபரம் வருமாறு:

ஆறும் வகுப்பு: 1-ம் பரிசு—செல்வன் என். கனகரட்ணம், 2-ம் பரிசு: செல்வி ஆர். பூரணம்பாள், 3-ம் பரிசு: செல்வன் எம். சுப்பிரமணியம். ஏழாம் வகுப்பு: 1-ம் பரிசு: செல்வன் கெ. வீரக்கவுண்டன், 2-ம் பரிசு: செல்வன் ஏ. மோகன், 3-ம் செல்வி எம். ருக்குமணி. கனிஷ்ட வகுப்பு: 1-ம் பரிசு: செல்வன் ஆர். நமசிவாயம், 2-ம் பரிசு: செல்வன் டி. எட். டபிள்யூ. ஜோன், 3-ம் பரிசு: செல்வன் எஸ். சுப்பிரமணியம். சிரேஷ்ட வகுப்பு: 1-ம் பரிசு: செல்வன் எஸ். இராஜகோபால், 2-ம் பரிசு: செல்வன் எஸ். நாராயணன், 3-ம் பரிசு: செல்வன் பி. சிவபெருமான்.

எனது கிராமம்

## மூளாய்

—ஆ. குமாரவேலு—

எனது கிராமம் மூளாய். இக்கிராமம் யாழ்ப்பாணத்துக்கு மேற்கே, சுமார் பத்து மைலுக்கு அப்பால் இருக்கின்றது. இக்கிராமத்தில் இரண்டாயிரம் மக்களுக்கு மேல் வசிக்கின்றனர்.

இக் கிராமத்தின் அயற் கிராமங்களாக பொன்னாலை, தொல்புரம், வட்டுக்கோட்டை, காரை நகர் ஆகிய கிராமங்கள் இருக்கின்றன.

இக் கிராமத்திலே ஓர் பெரிய கூட்டுறவு வைத்தியசாலை இருக்கிறது. இரண்டு பாடசாலைகள் இருக்கின்றன. இரண்டு இந்து ஆலயங்களும், இரண்டு கிறிஸ்தவ ஆலயங்களும் உண்டு. நெசவு சாலை, சனசமூக நிலையம், வாசகசாலை, வெங்காயச் சங்கம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பலசரக்கு, தேநீர்க் கடைகள் முதலியன இக்கிராமத்தில் இருக்கின்றன.

இக் கிராமம் ஓர் சிறிய கிராமம் என்றாலும், சிறந்து விளங்குகின்றது. இங்குள்ள மக்கள் குணமுள்ளவர்கள். ஒழுக்கமும், அடக்கமும் நிறைந்தவர்கள்.

எனது கிராமம், சுழிபுரம் கிராம சபைக் குட்பட்டதாகும். வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த எனது கிராமத்தின் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் ஆவார்.

## அறிஞர் தரும் அறிவுரை

பொய் கூறலாகிய பாவம் ஒன்றை ஒழிப்பின் அதுவே நெறியாய மற்றப் பாவங்கள் அனைத்தும் தாமே ஒழிந்து விடும்.

—நாவலர்

"யுத்தம்" என்னும் பெருமைப் பெயரால் அழைக்கப்படுவது சுத்த முட்டாள்தனமானது. அது கசாப்புக் கடை வேலையைப் போன்றது.

—மகாத்மா காந்தி

பிறருக்கு வழிகாட்டவாதல், பிறரை அடக்கியாளவாதல் எப்போதும் முயல வேண்டாம். அனைவருக்கும் ஊழியராயிருங்கள். எல்லாவற்றிலும் முக்கியமானது இதுவாகும்.

—விவேகானந்தர்

தன்னைப் பரிபூரணமாய் அறியாதவன் ஒரு நாளும் பிறரைச் சரியாக அறிய முடியாது.

—நோவாலிஸ்

தீங்கிழைப்பவன் தனக்கே தீங்கிழைக்கிறான். அநீதி செய்பவன் அதனால் தன்னையே கெட்டவனாக்கிக் கொள்வதால் தனக்கே அநீதி செய்து கொள்கிறான்.

—மார்க் அரோலியர்

தொகுத்தவர்:
பாப்பா சரவணமுத்து,
திருநெல்வேலி.

## நீவிர் அறிவீர்!

கேள்வி

(1) உலகில் நாகரிகத்துக்குப் பெயர் போன பட்டினம் எது?

(2) விநோதம் நிறைந்த கூடு அமைத்து வாழும் பறவை எது?

(3) கோப்பி குடித்தலை முதலில் ஆரம்பித்தவர்கள் யார்?

(4) இலங்கைக்கு எப்போது மகாத்மா காந்தி வந்தார்?

(5) கொலம்பஸ் எப்போது, எங்கே பிறந்தார்?

(6) வட அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர் யார்?

(7) கிறீன்விச் வான ஆராய்ச்சிக் கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?

(8) உலகில் பெரிய மிருகம் எது? அது எங்குள்ளது?

(9) பறக்கும் வெடிகுண்டு எவ்வகையினது?

(10) மனித உரோமத்தால் செய்யப்பட்ட வடம் எங்குள்ளது?

விடை

(1) பாரிஸ்.

(2) தூக்கணாங் குருவி.

(3) அரேபிய நாட்டினர்.

(4) 1927ல் வந்தார்.

(5) ஜெனோவா பட்டினத்தில் 1451ல் பிறந்தார்.

(6) ஜோண் கபொற்.

(7) 1675ல் கட்டப்பட்டது.

(8) ஆஸ்ட்டா. இது ஆபிரிக்காவில் உள்ளது.

(9) ஆளின்றித் தானே பறந்து செல்லக் கூடியது.

(10) யப்பானில் உள்ளது.

தொகுத்தவர்:
சி. குலேந்திரன்,
கரம்பன் மேற்கு,
ஊர்காவற்றுறை.

## விளக்கத்திற்கு விளக்கம்

"வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய் வழி தப்பாது":— இப் பழமொழியின் சொற்கோர்வை (உருவம்) திரிந்து, கருத்து மாறியிருப்பதாகக் கருதி "விளாத்தியின் வேரிலிருந்து முளைக்கும் கன்று அதன் தாய் மரத்தைப் போலிருப்பது இயற்கையே. இது விளாத்திக்கு மட்டும் உரியதல்ல. எல்லா மரத்திற்கும் உரிய பொது விதி. எந்த மரத்தினது வேராவது தாய் மரத்தை விட்டு விலத்தித் தூரம் சென்றாலும், அதிலிருந்து ஒரு கன்று முளைத்தால் அது தாய் மரத்தைப் போலிருக்குமல்லவா? ஆகவே "வேரோடி விளாத்தி" என்பது பிழை. "வேரோடி விலத்தி முளைத்தாலும் தாய் வழி தப்பாது." என்பதே சரியாக இருக்க முடியுமென்று, கடந்த 17-11-63 இதழ் இதே பகுதியில் சங்கு வேலியைச் சேர்ந்த செல்வி எஸ். செல்வரதி விளக்கம் தந்திருந்தார். விளக்கம் பிழை, பழமொழி சரியென்பதே என் கருத்து. "வேரோடி விலத்தி முளைத்தாலும் தாய் வழி தப்பாது" என்றும் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் "வேரோடு விளாத்தி முளைத்தாலும் தாய் வழி தப்பாது" என்ற பழமொழியில் பிழையிருப்பதற்கில்லை.

வேரிலிருந்து முளைக்கும் தன்மை எல்லா மரத்திற்கும் உரிய பொதுவான விதியல்ல. விதையிலிருந்து முளைக்கும் மரங்களைவிட, வேரிலிருந்து முளைக்கும் மரங்கள் குறைவானதேயாகும். உதாரணமாக—தென்னை, பனை மரங்களின் வேர், நிலத்தினூடாக வெகு தூரம் செல்கின்றன. ஆனால் வேரிலிருந்து அவை முளை விடுவதில்லை. ஆகவே அதன் கன்றை நாம் விதையிலிருந்து எதிர்பார்க்க வேண்டியுள்ளது. விளாத்தி மரத்தை உவமைக் கெடுத்து பழமொழி புனைந்த நம் முன்னோர் கூற்றில் குற்றம் சொல்வதற்கில்லை.

விளாத்தியின் வேர் நிலத்தினூடாக அடுத்த வீட்டுக்காரன் நிலத்தைக் கடந்து மாற்றான் வீட்டுத் தோட்டத்திற்குச் சென்றாலும் அங்கே முளை விட்டுக் கிளம்பி மரமாகும் தன்மை வாய்ந்தது. தாய் மரத்தின் வேரோடும் இடங்களிலெல்லாம் விளாங்கன்றுகள் முளைக்கின்றன. ஆகவே விளாத்தியின் வேர்கள் நான்கு திசையும் வெகுதூரம் பரவலாகச் சென்று முளைத்தாலும் தாய் வழி தப்பாது செல்கின்றன. இக்கூற்றே சரியென்றெண்ணிப் பார்க்கும் பொழுது "வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய் வழி தப்பா"தென்ற பழமொழியில் பிழை காண்பதற்கில்லை.

அனுப்பியவர்:—
யாழ். எஸ். சண்முகராஜா, மவுண்ட் லெவினியா.

## புதிய மருமக்கள்

3816 க. மதியாபரணம், 6-ம் வட்டாரம், புங்குடுதீவு.

3817 தா. நல்லம்மா, 6-ம் வட்டாரம், புங்குடுதீவு.

3818 க. போல் ஞானமணி, 297, முகத்துவாரவீதி, மட்டக்குளி.

3819 வெள்ளசாமி மனோகரன், கினலன் எஸ்டேட், எல்ல.

3820 செல்வி ஜெ. சித்தி பௌசியா, பெரிய கிண்ணியா, கிண்ணியா-9.

3821 செல்வி எம். ஐ. ஏ. ஜெசிமா, பெரிய கிண்ணியா, கிண்ணியா-10.

3822 மு. ஐயாத்துரை, வேம்போடு கேணி, பளை.

## உங்கள் சிந்தனைக்கு

உன் நண்பர்கள் இன்னின்னார் என்பதைக் காட்டு. அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை அறிந்த பிறகு, நீ எப்படிப்பட்டவன் என்பதை நான் கூறுகிறேன்.

—பெர்னட் ஷா.

## —இரு பொருள் - ஒருமொழி—

—தமிழழகன் - ஊவாகட்டவளை—

எரிப்பதற்கு பட்ட விறகு ஏற்றதென கூறுவதேன்?
வெறியிலை பாக்குண்டார் விரும்பி ஒன்று போடுவதேன்?

—புகையிலையால்; புகையிலையால்.

திருநீலகண்டரை சிவபெருமான் சினந்ததேன்?
பெரு நகர பார்லிமென்டில் எதிர்கட்சி அமர்ந்ததேன்?

—ஓட்டினாலே; ஓட்டினாலே.

புகை வண்டி நெடுந்தொலைவு விரைவாயோடுவதேன்?
குளிர் நீரும் உயர்வானில் மேகமாகமாறியதேன்?

—நீராவியால்; நீராவியால்.

வேற்றாரிற் பேசுவன வீட்டிலே யொலிப்பதேன்?
புற்றினிலே கருநாகம் அஞ்சி குறுகுவதேன்?

—வானொலியால்; வானொலியால்.

அன்புள்ள மருமக்களே!

அமெரிக்காவின் இளம் ஜனாதிபதி, மாவீரன் ஜோன் பிட்ஸ்கெறால்ட் கென்னடி சென்ற வாரம் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகி மரண மெய்தியது, அகில உலகத்தையும் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தி விட்டது.

கொலை செய்வதன் மூலம், ஒருவரின் கொள்கையையும் குழி தோண்டிப் புதைத்து விடலாமென்று எண்ணும் மூடர்களும் இன்றைய உலகில் இருப்பது அதிசயம்தான்.

இறந்த ஜனாதிபதியின் குடும்பத்தினர்க்கும், மறைந்தவரின் ஆத்ம சாந்திக்கும் நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக.

வணக்கம்.

உங்கள் அன்பின்,

வளர்மதி மாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சைக் கிளியே!

—மருதூர்க் கய்யாம்—

யச்சைக் கிளியே பறந்துவா!
பாடிப் பாடி ஓடிவா!
இச்சை கொண்டே னுன்மீது
மழலை பேச ஓடிவா!

பாலும் பழமும் உண்ணவா!
பாகும் பருப்புங் கூடத்தான்
சோலைக் குள்ளே பெண்ணுண்டு,
சோடியாக இருக்க வா!

விழிகள் என்ன வேலாமோ?
வானில் மின்னும் மீனோமோ?
ஒளியா மல்நீ ஓடிவா!
ஒன்று சொல்வேன் பறந்துவா!

பட்டுச் சட்டைச் சிறகினால்
பறந்து சற்று மகிழ்ந்துவா!
வட்ட மான கழுத்திலே
வீயின் மாலை சூடுவேன்!

பச்சைக் கிளியே பறந்துவா!
பட்டுக் கூடு நான்தருவேன்;
உச்சி மோந்து, உன்மெய்யை
அணைத்து இன்பங் காணவா!

சிறுகதை

# ஆலயப் பிரவேசம்

எழுதியவர்: புவனேஸ்வரி கனகசபை

**எறும்புக்கடி தாங்காது ஒதுங்கிய வேடனை பாம்பு பழிதீர்த்து விட்டதாம்.**

**மழைக்குப் பயந்தொதுங்கிய கந்தன் மாண்டதற்கு யார் காரணம்?.........கடவுளா.........?**

அது யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் கிராமம். அன்று அவ்லூர் வேலன் கோவில் தேர்த் திருவிழா. பூ, மஞ்சள், குங்குமம் அணிந்த இளநங்கையர் ஒரு புறம், பட்டை பட்டையாகத் திருநீறு, சந்தனம் அணிந்த முதியோர் மறு புறம், இவர்களிடையே மோட்டாரின் வேகத்தை அடிக்கடி 'பிறேக்' நிறுத்தி, நிறுத்திச் செல்வது போல், சிறுவர்கள் அவர்கள் வேகத்தை இடை இடையே ஸ்தம்பிக்கச் செய்து அடம் பிடித்துச் சென்றனர். இவர்கள் மட்டும் என்ன? அவ்வூர்க் காகங்களும், அதிகாலையில் எழுந்து கூட்டம் கூட்டமாக அத் திசையை நோக்கிப் பறந்தன. ஆனால் காகங்களுக்கும் மனிதருக்கும் ஒரே ஒரு வித்தியாசம், காகங்கள் கா கா எனக் கத்தித் தங்கள் கூட்டமனைத்தையும் அழைத்துச் செல்லும். பகுத்தறிவு படைத்த மனிதன் மட்டும் ஏன்தான் இதற்கு விதி விலக்கோ?

கரவையில் கந்தன் என்றோர் ஏழைக் குடியானவன் இருந்தான். கோவில் தேர்த் திருவிழாவில் ஏனைய குடிமக்களைப்போல் கலந்து கொள்ளாத குடும்பம் அந்த ஊரில் உண்டென்றால், அது கந்தனின் குடும்பம்தான். கந்தனுக்குக் குண்டு போன்ற நான்கு ஆண்களும், முத்துப் போன்ற மூன்று பெண்களும் இருந்தனர். மனைவி, வயது முதிர்ந்ததால், எல்லோருக்கும் இவன் உழைத்துச் சோறு போட வேண்டும்.

கந்தன் செக்கு இழுக்கும் மாடுபோல் உழைத்தான். செக்கிழுக்கும் மாடு அவனிலும் மேல்; மாடு பகல் முழுவதும் உழைக்கும். இரவில் வயிறு நிறைய உண்டு நிம்மதியாய் உறங்கும். கந்தன் பாடு எதிர்மாறு. பகல் முழுவதும் உழைப்பான். இரவில் கால் வயிறு சோறு கிடைக்கும். மற்றும் குடும்பத் தொல்லைகளும் நிறைய உண்டு. சுருங்கச் சொன்னால் அவன் நரக வேதனையையே அனுபவித்துக் கொண்டிருந்தான். இறந்த பின்தான் அவனுக்கு விமோசனம் போல இருந்தது. ஒருவேளை சுவர்க்கத்திற்குப் போகக் கூடுமல்லவா?

○

அன்று வெள்ளிக்கிழமை. கந்தன், வேலன் கோவிலடிக்குப் போயிருந்தான்—எட்டத்தில் நின்று முருக 'தரிசனம்' பார்க்கத்தான். இரு வாரங்கட்கு முன் கடுஞ்சுரத்தால் பாதிக்கப்பட்டு சோதிடம் பார்த்தபொழுது வேலனின் குறை இருப்பதாகச் சாஸ்திரியார் சொல்லியிருந்தார். நேர்த்திக் கடனை முடித்துப்போகவே அங்கு சென்றிருந்தான். மத்தியானப் பூசை தொடங்கும் நேரம் வெளிவீதிக்குச் சற்றுத் தூரத்தில் அவர்களுக்கென்று ஒதுக்கி வைத்த வானம் பார்த்த பூமியில் நின்று கடவுளை வணங்கினான். சிறிது நேரத்தில் வானத்தைக் கருமுகில்கள் மறைத்தன. சுற்றுப்புறமெல்லாம் இருண்டது. அருகேயுள்ள குப்பைக் குழியில் புழுக்களைத் தின்றுகொண்டிருந்த மயில்கள் பருவநிலையை முற்கூடியே அறிந்தவைபோல், கிடைத்த புழுக்களை வாய்களிற் கவ்விக்கொண்டு கோவில் மூலஸ்தானத்திற்கு முன்னால் இருந்த கூரைத் திராந்திகளில் போய் புழுக்களை வைத்து எவ்வித இடையூறுமின்றிக் கொத்தித் தின்றன.

மழை காலத்தில் பட்டணத்து மின்சார விளக்குகள் மாதிரி வானம் மின்னி, மின்னி மறைந்தது. வானுலகில் ஒரு துண்டு சிதறி விழுந்துவிட்டதோ என்று ஐயுறும்படி இடி இடித்தது. முழக்கத்தில் சுற்றுப்புறமெங்கும் கிடுகிடுத்தது. கோவில் வீதியில் புல் மேய்ந்து கொண்டு நின்ற மாடுகள் கூடப் பயந்தனவாய் கோவிலுள் புகுந்து மழை காற்றுப் படாத ஓர் இடத்தில் அசை போட்டுக் கொண்டு நின்றன. கோவிலுக்குத் தூரத்தே சுடு காட்டில் நின்ற நாய் ஒன்று கோவிலின் பின்புறவாயிற் கதவால் வந்து உள் வீதியில் ஓர் ஒதுக்கில், இளைத்த வண்ணம் நின்றது.

கந்தன் செய்வது தெரியாது தத்தளித்தான். கோவிலுக்கு அரை மைல் தூரத்தில் பூசாரியாரின் வீட்டைத் தவிர வேறு வீடு கிடையாது. சுவாமி பொறுத்தாலும் பூசாரி பொறுக்கமாட்டார். ஒதுங்கவும் இடமின்றி, மழைக்குத் தப்பவும் வழியின்றி இரண்டுங் கெட்ட நிலையிலிருந்தான். பூசை முடிந்து பிரசாதம் வாங்கிப் போவதாகவே முடிவுக்கு வந்தான். கணப் பொழுதில் சோளகக் காற்றுடன் மழை பெய்தது. நோயுற்றுக் கிடந்தவன் தேகத்தில் காற்றின் வேகத்துடன் வந்த மழைத்துளிகள் இரும்புக் குண்டுகளால் தாக்கப்படுவது போல் வேதனை யுண்டாக்கியது. சகிக்கமாட்டாது அடுக்களைக்குச் செல்லும் பூனைபோல் அடி மேல் அடி வைத்து கோவிலின் உட்புறத்தில் மழை படாதபடி ஒதுங்கிக்கொண்டான்.

கோவிலின் முகாமைக்காரர் சாமி, கடவுள் வழிபாட்டை முடித்துக் கொண்டு, சில பக்தர்கள் புடை சூழ, மூலஸ்தானத்திலிருந்து வந்து கொண்டிருந்தார். நனைந்த உடையும், கிட்டிய பற்களும், பயந்து அகன்ற விழிகளுமாக, கந்தன் நின்று கொண்டிருந்தான்.

சாமி அந்த ஊரின் முன்னைய கிராமாதிகாரி. செல்வந்தரும் கூட. அந்த ஊரிலே அவர் பேச்சுக்கு எதர்ப் பேச்சுக்கிடையாது. வாழத் தெரிந்தவர். ஓய்வு பெற்றதும் தன் அந்தஸ்தை இழக்க விரும்பாது கோவில் முகாமைக்காரர் என்ற முறையில் சனங்களின் செல்வாக்குப் பெற்றிருந்தார்.

கந்தனைக் கண்டதும் பக் [illegible] சென்று சாமியை [illegible] பற்றிக் கொண்டது. கன்னங்கள் சிவந்தன. கண்கள் அக்கினிப் பிளம்பாயின. மீசை வேறு துடித்தது. கந்தன் சிங்கத்தின் குகையில் சிக்கிய சிறுத்தை போலானான். தப்பியோட எத்தனித்தான். முடியவில்லை. ஒரு கணம் தான். படாரென்று சாமியின் கால் அவன் நெஞ்சில் பாய்ந்தது. "ஐயோ" என்ற சப்தம். காலில் சிக்கிய பந்து போலச் சுருண்டபடி வெளி வீதியில் மழை வெள்ளத்தில் வீசி எறியப்பட்டான். வாயிலிருந்து வந்த செங்குருதி வெள்ளத்துடன் சேர்ந்து ஆறாகப் பாய்ந்தது. கந்தன் குடும்பத்தார் வந்து அவனைக் கொண்டு சென்றனர். சாமி அப்போதும் அவரைச் சும்மா விடவில்லை.

"கோவிலின் புனிதம் கெட்டுவிட்டது. உடன் பிராயச்சித்தம் செய்ய வேண்டும். செலவு 200 ரூபா பிடிக்கும். அத்தொகையைச் செலுத்திய பின்தான் யாராயினும் கோவிலுக்குள் வரலாம்." கடுகடுப்புடன் சாமி கொதித்தார். அவர் சொல்லில் ஆதிக்கத்துக்கும் உறுதிக்கும் குறைவேயில்லை.

எறும்புக் கடி வேதனையைத் தாங்க மாட்டாத வேடன் பாம்புக்கு மேல் மிதித்து மாண்ட கதை போல் அன்று படுத்த கந்தன் என்றும் எழுந்திருக்கவில்லை. கோவில் வைரவர் அடித்து மாண்டு விட்டதாக சாமி கதையைக் கட்டிவிட்டார். கந்தன் குடும்பம் உட்பட கிராமத்தார் எல்லோரும் அதை நம்பினர்.

உழைத்தவன் மாண்டான். சோற்றுக்கே வழியின்றித் தவிக்கும் அவன் குடும்பத்திற்கு, கோவிலின் பிராயச்சித்தத்துக்குக் கொடுக்கக் காசு ஏது?

## நிறைவு

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறான். அடுத்த கணம்...! ஐயையோ...

அவனைத் தாங்கி நிற்கும் வடத்தின் முடிச்சிக் கடியில் வெட்டப்பட்டிருந்த இழைகள் அறுபடுகின்றன....

நிலத்தை நோக்கித் தலைகீழாக வருகிறான் பெரிய சாமி! எதையோ எதிர்பார்த்துக் கொண்டு நின்ற வள்ளி மன நிறைவோடு குறுக்குப்பாதையால் வீட்டுக்கு ஓடுகிறாள்.

(யாவும் கற்பனை)

## கந்த சஷ்டி விழா

தென்கோவை ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் ஆலயத்தில் வழமை போல இவ்வருடமும் வெகு சிறப்பாகக் கந்த சஷ்டி விழா நடைபெற்றது. 7ம் திருநாளன்று முருகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், திருக் [illegible] நடந்தேறியன.

# கவியில் களவொழுக்கம்

—சந்திவெளி கிருஷ்ணபிள்ளை—

பால் போன்ற நிலவினிலே பட்டு மணல் பரப்பினிலே, பாவை நல்லாள் அருகிருக்க படுத்திருந்தான் அவன். உள்ளத்தைக் கொள்ளை கொண்ட உத்தமனின் உடலமைப்பை அள்ளிப் பருகியதால் அகன்று விட்ட தன் கண்களில் விடிவெள்ளி பட்டதும் பதறி விட்டாள் அவள்.

அவனின் தோள்களைப் பிடித்து உலுக்கி எழுப்புகிறாள். அயர்ந்திருந்த அவன், கண் எதிரே அவள் நயனம் கண்டான். காரிகை தன்னை எழுப்பிய காரணத்தை வாயால் விபரிக்கு முன்னரே கண்கள் கூறிவிட்டன.

தங்கள் கள்ள உறவு ஊருக்குத் தெரியாது. ஆகவே விடியுமுன் தத்தமது இருப்பிடம் சேர்ந்தாக வேண்டுமே! காலை உதயத்துக்குச் சொற்ப வேளை தானுண்டு. அவன் கலங்கினான்.

ஆளரவம் கண்டு ஆக்காண்டி
கத்துதையோ
ஆராலும் கண்டாலும் என்
அன்புக்கனி என்ன செய்யும்?

கடலே இரையாதே காற்றே நீ
வீசாதே
நிலவே எறியாதே என்ட
நில வண்டாள் போய்ச்
சேருமட்டும்.

தன் அன்புக் காதலி உறைவிடம் செல்லுமட்டும் யார் கண்ணிலும் படாமலிருக்க வேண்டுமென்பது அவன் அவா.

தன் காதலன் அவனிருப்பிடம் சேருமட்டும் யாரும் கண்டுவிடக் கூடாதே என்பது அவளுடைய ஏக்கம். பாடுகிறாள்:-

குதிரை கனைக்குது கா
கோழி குறுன் ஒதுதுகா
ஆளும் பரிமாறுதுகா-மச்சான்
ஆரோடே போய்ச சேர்ந்
திடுவாய்?

தன் நிலைக்காக அவள் ஏங்குவது அவனுக்குப் பொறுக்கவில்லை. தானே தேறுதல் கூற முற்படுகிறான்.

குதிரை கனைக்கவில்லை
கோழி குறுன் ஓதவில்லை.
ஆளும் பரி மாறவில்லை-நான்
போய் வாறேன் கண்மணியே.

அவன் ஆண்பிள்ளையல்லவா? தன் வீரத்தனத்தை வெளியுணர்த்திவிட்டு வீறு நடை போடுகிறான்.

மட்டக்களப்புத் தென்பகுதி வாழ் முஸ்லிம் மக்களிடம் வழங்கும் கவிதைகளில் இத்தகைய களவொழுக்கக் கவிதைகளைக் காணலாம்.

## தென்மராட்சி ஆசிரியர் சங்கம்

அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தென்மராட்சிக் கிளை ஆரம்பக் கூட்டம் திரு சுவாமபிள்ளை, ஆசிரியர் (அ. இ. த. ஆ. சங்கத் தலைவர்) தலைமையில், சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமானது. தலைவர் தமது முன்னுரையில், தமிழர் ஆசிரியர் சங்கம் விஸ்தரிக்கப் படவேண்டியதின் அவசியத்தை விளக்கினர். கூட்டத்துக்குச் சமுகமளித்த சாவகச்சேரிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு வ. ந. நவரத்தினம், அ. இ. த. ஆசிரியர் சங்கம் நேர்மையோடு கடமையாற்றி வந்ததென்றும், மொழியை தென்னிலங்கையில் வளர்த்த பெருமை இச்சங்கத்துக்குரியதென்றும், தமிழ் மொழிக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந்நேரத்தில் தமிழ் ஆசிரியர்கள் பொறுப்பு அதிகமென்றும் கூறினர்.

பின்பு கீழ்க்கண்டோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. சபாரத்தினம், காரியதரிசி: திரு. பொ. தம்பு, தனாதிகாரி: திரு. க. இ. சின்னத்தம்பி, உப தலைவர்கள், திருவாளர்கள்: பொ. அருணாசலம், க. குமாரசாமி, உப காரியதரிசிகள்: திருவாளர்கள்: கு. தில்லைநாதன், க. இரத்தினம், உப தனாதிகாரி: திரு. க. இராசரத்தினம், நிர்வாக சபை உறுப்பினர்கள்: திரு. க. நடராசா, திருமதி யோ. சுப்பிரமணியம், திரு. க. சிவசம்பு. ஈற்றில் காரியதரிசி திரு. பொ. தம்பு அவர்களின் நன்றியறிதலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் டைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் டைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார் புதுவருட விழாக்களை முன்னிட்டு சிலோன் தியேட்டர்ஸ் திரைகளுக்கு வருகிறது!

சிவாஜி கணேசன்—பி. சரோஜாதேவி—டி. எஸ். பாலையா—கே. ஏ. தங்கவேலு—எம். சரோஜா மற்றும் பலர் நடிக்க

பத்மா பிலிம்சாரின்

# வளர்பிறை



3வது வாரமாகக் காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) அசோகமாலா (நீர்கொழும்பு)

வேல்ஸ் (கண்டி) நெல்சன் (திருகோணமலை) இம்பீரியல் (மட்டக்களப்பு) கிங்ஸ் (பதுளை)

அதிக செலவுடன் தயாரிக்கப்பட்ட ஒரே படம்!

40 லட்சம் ரூபா செலவில், 4 வருடங்களாக எடுத்த படம்!

டெக்னிக் கலரில் முதலாவது தமிழ்ப் படம்!

ஐரோப்பா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் புகழீட்டிய நடனராணி கமலா லக்ஷ்மணனின் களிப்பூட்டும் கண்கவர் நடனங்கள்!

ஜெமினி கணேசன்—சாவித்திரி—குசலகுமாரி—முத்துலட்சுமி

மனோகர்—சாரங்கபாணி—கமலா லக்ஷ்மண்

மற்றும் பலர் நடித்த

# கொஞ்சும் சலங்கை

செல்லமஹால் திரையில்
6-வது வாரம்!
ஆனந்தன்—சரஸ்வதி—அசோகன் நடித்த
**வீரத் திருமகன்**

---

விரைவில் எதிர்பாருங்கள்!

சினிமாஸ் திரைகளில்!

திடுக்கிடும் சம்பவங்களும்
திகைப்பூட்டும் காட்சிகளும்
நிறைந்த திரைச் சித்திரம்!



எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜாதேவி
நாகேஷ் - எஸ். வி. சுப்பையா - எம். வி. ராஜம்மா
எம். என். நம்பியார் - எஸ். ஏ. அசோகன்
மற்றும் பலர் நடித்த

சரவணா பிலிம்ஸ்

# பணத் தோட்டம்

இசையமைப்பு: விஸ்வநாதன் - ராமமூர்த்தி

டைரக்ஷன்: கே. சங்கர்

---

5வது வெற்றி வாரம்!

ரசிகர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை)

புதுமையான கதையும்—இனிமையான பாடல்களும் சேர்ந்த படம்!

* விஜயகுமாரி
* சகஸ்ரநாமம்
* பாலாஜி
* புஷ்பலதா
* முத்துராமன்
* சந்திரபாபு

மற்றும் பலர் நடித்த

# போலீஸ்காரன் மகள்



திரைக் கதை—வசனம்—டைரக்ஷன்: ஸ்ரீதர்

---

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ஜோதி (திருகோணமலை) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு)

ஆகிய சிலோன் எண்டர்டெயின்மெண்ட்ஸ் திரைகளில்!

இன்னிசை கானம் பொழிகிறாள்! இன்ப நடனமாடுகிறாள்!!



உமா பிக்சர்சாரின்

# சித்தூர் ராணி பத்மினி

நடிகர் திலகம் சிவாஜி கணேசன்

ஆடலழகி வைஜயந்திமாலா

பாலையா—நம்பியார்—காகா ராதாகிருஷ்ணன்

முதலியோர் நடித்தது

இசையமைப்பு: (மறைந்த) ஜி. ராமநாதன்

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் டிசம்பர் மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org